பதிவு இலக்கம் : 105267
வார இதழ்
# தீபம்
16.08.2020 தீபம் – 238
இணையப் பதிப்பு

## செஞ்சோலைப் படுகொலை நினைவாக...

மொட்டுக்கள் சருகாகியதோ!
நெஞ்சில் வஞ்சகவேல் பாய்ந்ததுவோ!
காக்கைக்காகக் குரல் கொடுக்கும்
“புளூ குறோஸ்” கூட
இந்தப் பிஞ்சுகளுக்காக
இரங்கவில்லையே?



## கொரோனாவும் சமூக வலைத்தளங்களும் 7

## இரவு நேரக் கடைகள்..
குடாநாட்டில் சாத்தியமா?

## “ஸ்புட்னிக்-V”
இன்னொரு பனிப்போருக்கான ஆரம்ப குறிகாட்டியா?

## பதவி ஏற்பும்
பரப்பப்பட்ட தரமற்ற கருத்துகளும்

## தமிழ் அரசியல் தலைமைகளின் விஸ்வரூபம்.
- குருபார்வை -

## கூட்டமைப்பைக் கைவிட்டுவிட்டதால்... தமது அடிப்படைக் கோரிக்கைகளையும் கைவிட்டுவிட்டார்களா? தமிழ் மக்கள்...!

## தமிழரசுக் கட்சி உடையுமா? உடைக்கப்படுமா?

## தமிழர் தேசம் எங்கே நிற்கிறது ? எங்கே போகப்போகிறது?

## பொலிவியாவின் இலித்தியம்
ரெஸ்லா தன்னுடைய தேவையை நிறைவேற்றிக்கொண்டதா?




## கள்ள வாக்குண்டாம்! வெல்ல வழியுண்டாம்!

# கொரோனவும் சமூக வலைத்தளங்களும்

# இடர்காலப் பதிவுகள்

**உலக நிலவரம்**

தொற்றாளர்கள் **22.10 மில்லியன்**

இறப்பு **778,506**

குணமடைந்தோர் **14.84 மில்லியன்**

**இலங்கை நிலவரம்**

| தொற்றாளர்கள் | சிகிச்சை பெறுவோர் | குணமடைந்தோர் |
|---|---|---|
| 2900 | 134 | 2755 |

- கணபதி சர்வானந்தா -

உலகிலுள்ள அத்தனை தமிழ் வானொலி நிலையங்கள் எல்லாம் ஒரு நாளைக்கு அவரது பாடல்களைப் பல தடவைகள் ஒலிபரப்புகிறார்கள். பலரைத் தன் பாடலால் மகிழ்வித்த பாடகர் எஸ்.பி.பாலசுப்பிரமணியமும் கொரோனா வைரஸினால் பாதிக்கப்பட்டு தீவிர சிகிசைப் பிரிவில் இருப்பதாகச் செய்திகள் வந்தவண்ணம் இருக்கின்றன. அது தொடர்பாகப் பலர் தமது சமூக வலைத்தளங்களில் பலவிதமான செய்திகளை ஊகத்தின் அடிப்படையில் வெளியிட்டு வருகின்றனர். சிலர் அவருக்காகப் பிரார்த்தனை செய்கிறார்கள். அதே நேரம் சிலர் பாதகமான செய்திகளையும் வெளியிட்டு அவருக்கு அபகீர்த்தியை ஏற்படுத்திவிடுகிறார்கள். அச் செய்திகளால், அவரைச் சார்ந்தவர்களுக்கும், சூழ உள்ளவர்களுக்கும் நெஞ்சில் நெருக்கடியை உண்டு பண்ணிவிடுகிறார்கள்.

கொரோனாவின் ஆரம்ப காலம்.. திடீரென அறிவிக்கப்பட்ட சமூக முடக்கமும், இயல்பு வாழ்க்கைக்கு விதிக்கப்பட்ட தடைகளும் மக்கள் மத்தியில் பாரிய விளைவுகளை ஏற்படுத்திக் கொண்டன. மக்களுக்குக் கொரோன பற்றிய பாடம் எதுவு மில்லாத சமயத்தில் கொரோன பற்றி அறிவை அதிகம் பகிர்ந்ததாகச் சமூக வலைத்தளங்களும், சமூக ஊடகங்களுமே காணப்பட்டன. அப்பொழு இப்படியானதொரு தர்மசங்கடத்துக்குச் சமூகம் முகம் கொடுக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலைமையும் தோன்றியிருந்ததைக் காண முடிந்தது. சமூக வலைத்தளச் செய்திகள் கொரோன பற்றிய சமூக மேம்பாட்டோடு தொடர்புடைய பல செய்திகளை மக்களிடம் கொண்டு சென்று சேர்த்தாலும், அதிகம் பயவுணர்வைத் தூண்டக் கூடியதாகக் காணப்பட்ட பிறநாட்டுச் செய்திகளையும் பதிவிட்டு மக்களை ஒரு வித இறுக்கத்தில் வைத்திருந்ததையும் கண்டோம்.

சமூக முடக்கத்தில் என்ன செய்வதென்று அறியாத சிலர் , பொழுது போக்காகச் சமூகவலைத்தளங்களைப் பயன்படுத்திக் கொண்டதால் வந்த வினை என்றும் இதனைச் சொல்லலாம்.பலருக்குத் தாம் தமது சொந்தக் கணக்குகளில் இடும் பதிவுகள் சமூகத்துக்குள் சென்று பாரிய விளைவுகளை ஏற்படுத்தும் என்பதை அறியாது விடயங்களைப் பதிவிடு




வதாகக் கூட எண்ணத்தோன்றியது. சிலசெய்திகளைப் பார்த்தால் அவை ஊகத்தின் அடிப்படையிலேயே எழுதப்பட்டதாகத் தெரிகிறது. அதிலும் சிலர் தமது கற்பனைவளங்களை அதற்காகச் செலவிட்டதுதான் அபாரம். அவர்கள் கதை, கட்டுரை எழுதினால் எப்படி இருக்கும்? என்று நாம் எமது கற்பனையை ஓடவிட்டுப் பார்க்க வேண்டும் போலிருந்தது. அத்தனை கற்பனாசக்தியோடு எழுதினார்கள். படித்தால் உண்மைபோல் தோன்றும். தொழில் நுட்பம் வளர்ந்த வீச்சுக்கும், அவை சமூகத்தை ஆக்கிரமித்துக் கொண்ட வேகத்திற்கும் ஏற்றாற்போல , அவைகளால் சமூகத்துக்கு ஏற்படக் கூடிய பாதிப்புகள் பற்றி எண்ண அவற்றைத் தோற்றுவித்தவர்கள் தவறிவிட்டனர் . இது போன்ற விடயங்களில் இருந்து மக்களைப் பாதுகாக்கப் பொது வெளியில் இருந்து படைப்பு நடவடிக்கைகள் எதுவும் தோற்றம் பெற்றதாகவும் இல்லை . குறிப்பாக சமூக வலைத்தளங்களில் எழுதுபவர்கள் ஊடக தர்மத்தைப் பேணவேண்டும் என்ற அடிப்படையில் சில அறிவுறுத்தல்களை அதனை உருவாக்கியவர்கள் மேற்கொண்டிருந்தால். இணையத் தில் கணக்கினை வைத்திருப்பவர் தனக்குத் தோன்றியவாறு பதிவுகளை இடுவதைக் கட்டுப்படுத்தியிருக்கலாம். பிறரைப் பாதிக்கும் என்று கருதுவதை எழுதாமல் தவிர்ப்பதற்குரிய எச்சரிக்கையாகவும் அது இருந்திருக்கும். இது ஒரு புறம் இருக்க, கடந்த காலங்களில் கொரோனா பாதித்த உலகப் பொருளாதாரத்தைப் பற்றி எழுதியிருந்தோம். கொரோன இலங்கைப் பொருளாதாரத்தைப் பலவழிகளிலும் பாத்தித்திருக்கின்ற அதே வேளை அத்தகைய பொளுதாரப் பாதிப்புக்கூடாகப் பலர் தமது வேலைகளையும் இழந்திருக்கின் றனர். இலங்கையில் கொரோனா நெருக்கடிச் சூழலால், 263,412 பேர் தொழிலை இழந்துள்ளனர் என்று முன்னாள் எம்பி ஹர்ஷ டி சில்வா தெரிவித்திருப்பதாகப் பத்திரிகைச் செய்திகள் உண்டு. இத்தகைய பணி இழப்பினால் கிராமத்திலிருந்து பணிகளைச் செய்பவர்களைவிட நகரவாசிகளே அதிகம் பாதிப்புள்ளாகி இருக்கிறார்கள். நகரவாசிகளில் பெரும்பாலானவர்கள் தமது மாதக் குடும்பச் செலவுக்குத் தாம் பெறும் ஊதியத்தை மட்டும் நம்பி இருப்பவர்கள்.கிராமத்திலிருந்து பணி செய்பவர்களுக்கு, அவர்களுக்குள்ள நிரந்தரமான வருவாயோடு , பகுதி நேர வருவாயாக விவசாயம் போன்றவை கைகொடுக்கும். அந்த வாய்ப்பு நகரத்தவர்களுக்குக் கிடையாது. அது மட்டுமல்ல அவர்களுக்கு அவர்கள் மாதாந்தம் செலுத்தப்பட வேண்டிய நீர், மின்சாரக் கட்டணத்தோடு, கடனட்டை, லீசிங், கடன் என்று பல கொடுப்பனவுகள் இருக்கும். அவற்றை அவர்கள் எப்படிச் சமாளிக்கப் போகிறார்கள் என்று தெரியவில்லை. இது தொடர்பாக அரசாங்கம் பல அறிவுறுத்தல்களைக் கொடுத்திருந்தாலும், அக்காலப் பகுதியில் அவை அந்தந்தத் துறை சார்ந்தவர்களால் நடைமுறைப்படுத்தப்பட்டதா? என்பது கேள்விக்குரிய விடயமே.

பெரும்பாலும் கடந்த பெப்ரவரி - மார்ச் தொட்டுப் பலருக்கு அவர்கள் பணி செய்த இடங்களில் ஊதியம் எதுவும் வழங்கப்படவில்லை எனத்தெரிகிறது. அது மட்டுமல்ல அவர்களுக்கு நட்டஈடாகவும் எதுவும் கிட்டவில்லையாம். எனவே இவற்றை எல்லாம் கவனத்தில் எடுத்து அதற்குரியதொரு திட்டத்தைப் புதிதாக அறிவிக்க வேண்டியது அரசாங்கத்தின் பொறுப்பு என்றுதான் சொல்லலாம். அதுவும் ஒரு இயற்கை அனர்த்தம் என்று பார்க்கப்பட்டு, அது தொடர்பான திணைக்களம் அதற்குரிய நிவாரணத்திட்டத்தை அறிவிக்கலாம்.

நோர்வே நாட்டில் கொரோனவின் பாதிப்பில் இருந்து மீள் எழுச்சி பெறுவதற்குரிய ஏற்பாடாக அங்குள்ள பெரிய கம்பனிகளுக்கு, அரச சலுகையாக அங்கு பணியாற்றுபவர்களுக்கு, ஆறு மாதத்திற்குரிய ஊதியத்தை வழங்கி இருக்கிறது. அதனால் அந்தக் கம்பனிகளில் பணியாற்றியவர்கள் எவரும் பாதிக்கப்பட வில்லையாம். நாட்டின் பாதுகாப்பு என்று சொல்லிக் கோடிக்கணக்கான பணச்செலவு செய்து கொடூர ஆயுதங்களை வாங்கிக் குவிக்கும் அரசுகள் , மக்கள் பாதுகாப்பு என்ற இந்த விடயத்தில் அதிக கவனம் செலுத்தாதது ஏனோ? இத்தகையதொரு விடயத்தைக் கடந்த தேர்தலின்போது மக்கள் அவதானித்திருப்பர். தேர்தலில் அரசு கொண்ட ஆர்வம் அளவுக்குக் கொரோனவினால் மக்கள் பாதிக்கப்படலாம் என்பதில் ஆர்வம் கொண்டிருக்கவில்லை என்றும் சொல்லலாம். தேர்தலுக்காகச் செலவிடப்பட்டதொகை என்ன? காரோன நிவாரணத்திற்காகச் செவிடப்பட்ட தொகை என்ன? மக்களுக்காக நாடா? நாட்டுக்காக மக்களா? அரசுக்காக மக்களா? மக்களுக்காக அரசா? பலவிடயத்தில் மக்கள்தான் தெளிவு பெற வேண்டும்.

பதிவு இலக்கம் : 105267
வார இதழ்
தீபம்
16.08.2020 தீபம் – 238
இணையப் பதிப்பு

## சர்வதேச சமூகத்தின் கவனத்துக்கு...

இலங்கையில் புதிய அரசு ஆட்சிப் பொறுப்பினை ஏற்று 10 நாட்கள் கூட ஆகவில்லை. பிரதமர், அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள் உட்பட முக்கிய பொறுப்புகளை ஏற்றுள்ளவர்கள், தங்கள் தங்கள் பதவிக் கதிரைகளில் முறையாக, முழுமையாக அமர்ந்து தத்தம் கடமைப் பொறுப்புகளில் பணியாற்றத் தொடங்கவோ... ஏன் அவரவர் பணி குறித்து தெளிவாக தெரிந்து கொண்டிருக்கக் கூடக் கால அவகாசம் தேவைப்படும் நிலையில்.. தமக்கு கிடைத்துள்ள பதவிப் பெருமிதத்தில், அகம்பாவத்துடன் கூடிய அதிகாரத் தொனியில், சிலர் பேச ஆரம்பித்து விட்டமையானது, வரப்போகும் காலங்களில் எத்தகைய நெருக்கடிகளை நாட்டுமக்கள், அதுவும் குறிப்பாகச் சிறுபான்மை இனத்தவர்கள் எதிர்கொள்ள வேண்டியவர்களாக இருக்கப்போகிறார்கள் என்ற அச்ச உணர்வை ஏற்படுத்துவதாகவே உள்ளது.

ஒரு நாட்டில் – அதுவும் ஜனநாயகம் பற்றிப் பெரிதாகப் பேசப்படும் நாட்டில் ஆட்சியில் உள்ள அரசை மக்கள் தேர்தல் ஒன்றின் மூலம் நிராகரித்து விட்டுப் புதிய அரசொன்று அமைவதற்கு வழியேற்படுத்திக் கொடுக்கிறார்கள் என்றால்... பதவியிலிருந்த அரசின் மீது மக்களுக்கு அதிருப்தி ஏற்பட்டுவிட்டது என்பது மட்டும் பொருளல்ல. தாங்கள் புதிதாகத் தெரிவு செய்து ஆட்சிப் பொறுப்பை கையளிக்கும் அரசின் மீது நம்பிக்கையும், அது நல்லதை மக்கள் நலன் கருதிச் செய்யும் என்ற எதிர்பார்ப்பையும் கொண்டுள்ளது என்று தான் அர்த்தமாகும். அதுவும் அதிகப் பெரும்பான்மைப் பலத்துடன் புதிய அரசை தெரிவு செய்திருக்கிறார்கள் என்றால் அவ் ஆட்சித் தலைமை மீது அதீத நம்பிக்கை வைத்திருக்கிறாரகள் என்றுதானே அர்த்தம்.

ஆனால் இலங்கையில் அசாத்திய பலத்துடன் அசைக்க முடியாத அதிகாரங்களுடன் பதவி ஏற்றுள்ள பொதுஜன பெரமுன, அரசின் ஆரம்பச் செயற்பாட்டு நகர்வுகள் குறித்து அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள், உயர் அதிகாரிகள் சிலரின் அறிவிப்புக்களைப் பார்க்கும் போது அவை எந்த வகையிலும் நம்பிக்கை தருவதாக இல்லை. அதுவும் சிறுபான்மை இனத்தவர்களுக்கு... குறிப்பாக தமிழ் பேசும் மக்களுக்கு தமது எதிர்காலம் குறித்து “பேரிடர்” எச்சரிக்கைகள் விடப்படுவதாகவே உணர முடிகிறது.

மாகாணசபைகள் – மற்றும் உள்ளூராட்சிச் சபைகள் இராஜாங்க அமைச்சராக நியமனம் பெற்றுள்ள அட்மிரல் சரத் வீரசேகர பதவிப் பொறுப்புகளை ஏற்றதும் சூட்டோடு சூடாக 13 ஆவது திருத்தச்சட்டம் முற்றாக நீக்கப்படும் வரை மாகாணசபைகளுக்கு காணி மற்றும் பொலிஸ் அதிகாரம் எதுவும் வழங்கப்படமாட்டாது எனச் சூளுரைத்துள்ளார். வடக்கு மாகாணத்துக்கு இவற்றை வழங்கவே மாட்டேன் என்றும் உறுதிபடக் கூறியுள்ளார். மாகாண சபைகள் என்பதே 13 ஆவது திருத்தச் சட்டத்தின் கீழ் உருவாக்கம் பெற்ற சபைகளேயாகும். அந்தச் சட்டமே நீக்கப்படுமானால், பிறகு சபை ஏது? அதிகாரம் ஏது?

ஆரம்பத்தில் மாகாண சபைகள் தொடர்பான 13 ஆவது திருத்தச் சட்டத்தை எதிர்த்தவன் என்ற வகையில் தனக்கு இந்த அமைச்சுப் பதவி கிடைத்தற்காகப் பெருமைப்படுவதாகவும், அதனை இல்லா தொழிக்க ஒரு வாய்ப்பு கிடைத்துள்ளதாகவும் அவர் பெருமைப் பட்டுக் கொண்டுள்ளார். 13 ஆவது திருத்தச் சட்டம் குறித்துப் பெரிதாகப் பீற்றிக் கொள்ளும் தமிழ்த் தலைவர்களும், அதனைப் பெரிய சாதனையாகக் கூறிப் பெருமைப்பட்டுக் கொள்ளும் அயலக அரசும் இவ்விடயத்தைக் கவனத்தில் கொள்வது அவர்களின் சாதனை குறித்து அவர்களே மீளாய்வு செய்ய உதவும்.

“தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் ஏகப் பிரதிநிதிகள் அல்லர். ஆகவே அவர்கள் தமது தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிட்டுள்ளது போன்று அவர்களுடன் தமிழர் பிரச்சினைகள் குறித்துப் பேச்சு வார்த்தை நடத்தப் போவதில்லை.” இவ்வாறு கூறியிருப்பவர் பஸில் ராஜபக்ஷ அவர்கள். இதனை, இன்னமும் தாம் தான் ஏகப்பிரதிநிதிகள் என்றும் பேச்சுவார்த்தைக்குத் தயார் என்றும் புலம்பிக் கொண்டிருக்கும் சம்பந்தன் ஐயாவும் அவர் குழாமும் அர்த்தம் புரிந்து கவனத்தில் கொள்ள வேண்டும்.

“தமிழ் மக்களுக்கு இங்கு பாதுகாப்பு இல்லை என்று இனிமேல் தமிழ் கூட்டமைப்பினரும் தமிழீழத் தலைவர்களும் சர்வதேசத்தை நாடவும் முடியாது. அழைக்கவும் முடியாது தமிழ் மக்களுக்கு இராணுவம் தான் பாதுகாப்பு” என முழங்கியுள்ளவர் வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்த்தனா... அதேசமயம் பொதுசன பெரமுனவின் தவிசாளரும், கல்வி அமைச்சருமான ஜி.எல்.பீரிஸ் அவர்கள் “எந்தவொரு சர்வதேச நாட்டுக்கும், அமைப்புக்கும் நாம் அடிபணிந்து செயற்பட மாட்டோம்.” என உறுதியாகவே உலகிற்கு ஓங்கி உரைத்துள்ளார்.

மனித உரிமைகள் குறித்தும் ஜனநாயகம் தொடர்பாகவும் பெருமளவில் கவனத்தில் கொள்வதாக அடிக்கடி அறிக்கையிட்டு நினைவூட்டிக் கொள்ளும் சர்வதேச அமைப்புகளும், சமூகமும் மேற்குறித்த அறிவிப்புகளின் பின்னாலிருக்கும் செய்திகளை வெறுமனே அறிக்கைகளாகக் கொள்ளாது ஒரு அரசு அதனால் தொடர்ந்து பாதிக்கப்பட்டு வரும் சிறுபான்மை தேசிய இனம் ஒன்றிற்கு விடுக்கும் பகிரங்கமான அச்சுறுத்தலாகவே கவனத்தில் கொள்ள வேண்டும். இதுவும் ஒரு காலத்தின் தேவையே!

# இரவு நேரக் கடைகள்..

## குடாநாட்டில் சாத்தியமா?

யாழ்.குடாநாட்டில் இரவு நேரக் கடைகள் திறப்பது தொடர்பான செய்தியைப் பார்த்ததும் , நாற்பது ஆண்டுகளுக்கு முன்னரான காலப்பகுதியை நோக்கி நினைவுகள் திரும்புகின்றன. அன்று.. யாழ். நகரிலிருந்து கடைசி இ.போ.ச பஸ் இரவு 10.30 க்குக் கிளம்பும். அதுவரை யாழ். நகரில் பல கடைகள் திறந்திருக்கும். அதற்கேற்றாற்போல மக்கள் நடமாட்டமும் காணப்படும். தியேட்டர்களில் முதற் காட்சி முடிந்து, இரண்டாவது காட்சியும் காண்பிக்கப்படும். இரவு நேரங்களில் கோயில் திருவிழாக்கள் விடிய விடிய நடைபெறும்.பயமின்றி மக்கள் இருந்த காலம் அது. அப்படியாக இருந்த யாழ். நகரத்து இயல்பு வாழ்க்கை, யுத்தத்தோடு காணாமல் போய்விட்டது. தற்போதுள்ள தலைமுறைக்கு அப்படி ஒரு வித வாழ்க்கை இங்கு இருந்ததற்கான தடயங்களே இல்லாத நிலையில், வட பகுதி ஆளுநர் இரவு 10 மணிவரை கடைகளைத் திறக்கலாம். அதற்குரிய அனைத்துப் பாதுகாப்ப வசதிகளையும் நாம் செய்து தருகிறோம் என அறிவித்தல் ஒன்றினை விடுத்துள்ளார்.

இந்த அறிவிப்பு, அது தொடர்பான பல விடயங்களைப் பற்றிச் சிந்திக்க வைக்கிறது. முதலில் நாற்பது வருடங்களுக்கு முன்னர் இருந்ததைப் போல யாழ். குடாநாடு தற்போது இருக்கிறதா ? அப்போதிருந்த சமூகப் பாதுகாப்பு இன்றும் இருக்கிறதா? வெறும் பொலிஸ்பாதுகாப்பை மட்டும் நம்பி இரவு நேரக் கடைகளைத் திறக்கலாமா? தற்போது முன்னிரவு நேரங்களில் கிராமங்களில் நடைபெறும் கொள்ளைகளையே பொலிஸ் பிடிக்கத் திண்டாடுகின்ற இவ்வேளையில் அவர்கள் நடவடிக்கைகளில் மட்டும் நம்பிக்கை கொண்டு, இரவு நேரக் கடைகளைத் திறக்கச் சொல்லியும், அது தொடர்பாகப் போக்குவரத்து வசதிகளையும், பாதுகாப்பையும் மட்டும் தருவதாகச் சொல்வது அத்தனை புத்திசாலித்தனமாகப் படவில்லை என்கின்றனர் மக்கள்.

அது மட்டுமல்ல சமூகத்திற்குப் பாதுகாப்பு இல்லை என்பதை அன்றாட ஊடகச் செய்திகள் உறுதிப்படுத்துகின்றன. வாள்வெட்டுக்கள் இடம்பெறுகின்றன. வழிப்பறி கொள்ளைகள், சட்ட விரோத, சமூக விரோதிகளின் அடாவடித்தனங் களுக்கு அளவு கிடையாது. குற்றங்களில் தொடர்புடையவரெனச் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்படுபவர் சில தினங்களுக்குள் சட்டத்தின் பிடியிலிருந்து விடுபட்டுச் சுதந்திரமாக நடமாடுமளவுக்கே சூழ்நிலை இருக்கிறது. அதில் சிலர் திரும்பவும் தமது வழமையான செயற்பாடுகளில் எந்தவித அச்சமுமின்றி ஈடுபடுவதைக் காணக்கூடியதாக உள்ளது. அது மட்டுமல்ல விடுதலைப் புலிகளுடனான யுத்தத்தை வென்றதாக வீறாப்புப் பேசும் அரசால் கஞ்சாக் கடத்தலுக்கு எதிராக யுத்தத்தை செய்ய முடியவில்லை. தினமும் கோடிக்காணக்கான பெறுமதியுடைய கஞ்சாப் பொதிகள் கடலில் மிதந்துவருவதாகச் செய்திகள் வந்தவண்ணம் இருக்கின்றன. யாழ். குடாநாடு சர்வதேசக் கஞ்சாக் கடத்தல் மையமாக மாறிவருகிறதோ எனச் சந்தேகிக்க வேண்டியும் உள்ள நிலையில்.., இரவுக் கடை என்ற விடயம் சாத்தியமானதா??!! இந்த அறிவிப்பு மக்கள் நலன் நோக்கியதா? அல்லது வியாபாரச் சிந்தனை சார்ந்ததா? இதன் பின்னணி அரசியல் என்ன ? உண்மையில் மக்கள் நலன் சார்ந்ததாயின், இவ்விடயத்தில் இன்னும் சிந்தித்துச் செயலாற்ற வேண்டியது அதை நடைமுறைப்படுத்த முனைகின்றவர்கள் சார்ந்த பொறுப்பு என மக்கள் கருதுகிறார்கள்.இது விடயத்தில் இன்னும் பல விடயங்களைத் தமக்குத் தெளிவு படுத்த வேண்டும் என்பது மக்கள் எதிர்பார்ப்பு.

தற்போது சமூகத்தில் காணப்படும் குற்றச் செயல்களின் அதிகரிப்பானது, மக்களுக்குரிய பாதுகாப்புப் போதுமானதாக இல்லை என்பதை உறுதி செய்கிறது. எனவே இரவில் மக்கள் நடமாடுவது தொடர்பாக அச்சம் உண்டு. தற்போது பல தனியார் நிறுவனங்களில் பெண்கள் அதிகம் பணியாற்றுகின்றனர். அது மட்டுமல்லாது தொழிலாளர் நலன்பேணும் சட்டம் அவர்கள் பணி நேரத்தை எட்டு மணித்தியாலமாக வரையறுத்துள்ள நிலையில் அவர்கள் இரவு நேரக் கடைகளில் எத்தனை மணித்தியாலங்கள் பணிசெய்யப் போகிறார்கள்? நிறுவன உரிமையாளர்கள் அவர்கள் ஊதியத்தை எப்படி நிர்ணயிக்கப் போகிறார்கள், என்ற பல விடயங்களை முன்னாய்வு செய்தும், இது தொடர்பாகப் பல துறை சார்ந்தவர்களின் ஆலோசனைகள் பெறப் பட்டு இந்த நடவடிக்கையை எடுத்திருக்க வேண்டும் என்பது மக்கள் கருத்து. அது மட்டுமல்ல முன்னொரு காலத்தில் எதற்கெடுத்தாலும் யாழ். நகருக்குத்தான் வரவேண்டும் என்ற நிலை இருந்தது. தற்போது அந்த நிலைமை மாறி இருக்கிறது. அதுவும் கொரானாவுக்குப் பிறகு சிறப் பங்காடிகள் போன்ற சிறு கடைகள் கிராமம்வரை பரந்து இருக்கின்றன. எனவே முக்கியமான தேவைகளுக்காக மட்டுமே மக்கள் யாழ். நகரத்தை நோக்கி வருகிறார்கள். எனவே இது தொடர்பாக மக்கள் மத்தியில் பல கேள்விகள் இருக்கின்ற இவ்வேளையில் “தமிழருக்கு இராணுவமே பாதுகாப்பு” என்ற அரச செய்தி ஒன்றும் வெளி வந்திருக்கிறது. இராணுவப் பாதுகாப்பு என்றாலே மக்களுக்கு அச்சம் அதிகம். எனவே இப்படிப்பட்டதொரு பாதுகாப்புச் சூழ்நிலையில் மக்கள் யாழ். நகரில் வரப்போகும் இரவுக் கடைகளை நோக்கி வருவார்களா? மக்கள் அதிகம்வராத பட்சத்தில் கடைகள் இலாபகரமாக இயங்குமா? இதை ஆளுநர் கவனத்திற்கு விட்டுவிடுவோம்.!!!


மட்டு. நகைக் கடையில் பறிபோன எட்டுக் கோடி ரூபா நகைகள் மீட்பு

85 அரச நிறுவனங்கள் பிரதமர் மஹிந்த வசம்

தமிழருக்கு இராணுவமே பாதுகாப்பு!

கூட்டமைப்பு சர்வதேசத்தை நாடவே முடியாது என்கின்றது ராஜபக்ஷ அரசு

- கம்சன் -

# 400 ஆவது ஆண்டு நிறைவு

# யாழ்ப்பாண நகரத்தின் வரலாற்றுச் சுவடுகள்

## யாழ்ப்பாணத்து ஒல்லாந்தர் வீடுகள்

இ. மயூரநாதன்



ஒல்லாந்தர் வீடொன்றின் முன்புறத் தோற்றம்

1621 ஆம் ஆண்டுக்குப் பின்னர் இன்றைய கோட்டைக்குக் கிழக்கே போர்த்துக்கேயர் உருவாக்கிய யாழ்ப்பாண நகரத்தை ஒல்லாந்தர் திருத்தி மேம்படுத்தினர். இந்த நகரம் பிரதான வீதி, சப்பல் வீதி, வங்கசாலை வீதி, ஒன்று தொடக்கம் நான்கு வரை எண்ணிடப்பட்ட குறுக்குத் தெருக்கள் ஆகியவற்றை உள்ளடக்கிய ஒரு சிறிய நகரம் என்பதையும் இத்தொடரின் இன்னொரு கட்டுரையில் பார்த்தோம். பிரதான வீதியின் குறிப்பிட்ட சில பகுதிகள் தவிர்ந்த ஏனையவை குடியிருப்புப் பகுதிகளாகவே இருந்துள்ளன. தொடக்க காலத்தில் இது முற்று முழுதாக ஒல்லாந்தர் வாழும் பகுதியாகவே இருந்தது. உள்ளூர் மக்கள் இங்கே வாழ்வதற்கு அனுமதி இருக்கவில்லை. இதனால் ஒல்லாந்தக் குடியேறிகள் தங்களுக்கு ஏற்ற வகையில் அவர்களுடைய பாணிகளிலேயே அங்கே வீடுகளை அமைத்திருப்பர் என்பதில் ஐயமில்லை.

1658 இலிருந்து 1796 ஆம் ஆண்டுவரை 138 ஆண்டுகள் நகரம் ஒல்லாந்தரின் ஆளுகையின் கீழ் இருந்துள்ளது. இது ஒரு நீண்ட காலம். இந்தக் காலப்பகுதி முழுவதும் இங்கிருந்த வீடுகள் எவ்வித மாற்றங்களுமின்றி இருந்தன என்று எதிர்பார்க்க முடியாது. ஒல்லாந்தக் குடியேறிகள் யாழ்ப்பாணத்தில் முழுமையாக நிலை கொள்ளாத நிலையில் கட்டப்பட்ட தொடக்ககால வீடுகள் எளிமையானவையாகவும், சிறியவையாகவும் இருந்திருக்க வாய்ப்புக்கள் உண்டு. பெருமளவுக்குச் சேதமடையாமல் இருந்த போர்த்துக்கேயர் வீடுகளில் பலவும் தொடர்ந்து பயன்பாட்டில் இருந்திருக்கலாம். காலப்போக்கில், ஒல்லாந்தக் குடியேறிகள் புதிய பொருளாதார முயற்சிகளில் ஈடுபட்டதன் மூலம் வசதிகளைப் பெருக்கிக்கொண்ட பின்னர் வீடுகளைப் புதிதாகவும், பெரிதாகவும், பல்வேறு வசதிகளோடு கூடியவையாகவும் கட்டியிருப்பர் என எதிர்பார்க்கலாம். இவ்வாறு பழைய வீடுகளை இடித்துப் புதியவற்றைக் கட்டுவது, புதிய பாணிகளை அறிமுகப் படுத்துவது, புதிய வசதிகளை ஏற்படுத்துவது என நகர வீடுகளில் மாற்றங்கள் தொடர்ந்து இடம்பெற்றிருக்கும் என்பதில் ஐயமில்லை. எனினும், ஒல்லாந்தர் ஆட்சிக் காலத்தில் இடம்பெற்ற இவ்வாறான மாற்றங்கள் குறித்தோ, அக்காலப் பகுதியின் பல்வேறு கட்டங்களில் இருந்த வீடுகளின் அமைப்புக்கள் குறித்தோ சமகால விபரங்கள் எதுவும் இதுவரை கிடைக்கவில்லை. உண்மையில், மேற்குறிப்பிட்ட நகர எல்லைகளுக்கு வெளியிலும், சுண்டிக்குழி, கொழும்புத்துறை போன்ற இடங்களிலும் அவற்றுக்கு அப்பாலும்கூட, ஒல்லாந்தர் பெரிய காணிகளில் தோட்டங்களை ஏற்படுத்தி அங்கே வீடுகளையும் கட்டிக்கொண்டு வசித்துள்ளனர். ஒல்லாந்தர் ஆட்சிக் காலத்தின் இறுதிப் பகுதியில் ஹாப்னர் என்னும் முன்னாள் ஒல்லாந்தப் படைவீரர் ஒருவர் நாகபட்டினத்திலிருந்து யாழ்ப்பாணத்துக்கு வந்து குடியேறினார். யாழ்ப்பாண நகரத்துக்கு வெளியே தான் வாழ்ந்த காணியில் வீட்டுக்குப் பின்புறத்தில் பனை, தென்னை என்பவை அடங்கிய தோப்பும், முன்புறத்தில் பூந்தோட்டமும் இருந்ததாக அவர்




விறாந்தையின் முன்புறம் மர மறைப்புக்களுடன் கூடிய ஒல்லாந்தர் வீடு

நன்றி: எஸ். குணசிங்கம்

குறிப்பிடுகின்றார். இவருடைய வீட்டுக்கு அயலில் இதே போன்றதொரு வீட்டில் அவரது நண்பர் ஒருவர் வசித்தது பற்றியும் அவர் எழுதியுள்ளார். எனினும், இவ்வீடுகளின் அமைப்புக் குறித்த விபரங்கள் எதையும் அவர் தரவில்லை. அத்துடன், ஒல்லாந்தர் நகரத்துக்கு வெளியே இருந்த இவ்வாறான வீடுகள் எதுவும் அண்மைக் காலம் வரை தப்பியிருக்கவில்லை. இவை நகரத்து வீடுகளைக் காட்டிலும் சற்று வேறுபட்ட அமைப்புடன் கூடியவையாக இருந்திருக்கக்கூடும்.


நகரில் இருந்த ஒல்லாந்தர் வீடுகளைப் பற்றி இன்று எமக்குக் கிடைக்கக்கூடிய தகவல்கள் ஒல்லாந்தருக்குப் பிற்பட்ட காலத்தைச் சேர்ந்தவை. எனவே இவற்றின் மூலம் கிடைக்கும் விபரங்கள் பெரும்பாலும் ஒல்லாந்தர்காலப் பிற்பகுதிக்கு உரியவையே. பிரித்தானியர் காலத் தொடக்கத்தில் யாழ்ப்பாணத்துக்கு வந்த சில மத குருக்களும், அரசாங்க அதிகாரிகளும் எழுதியவற்றில் இருந்து ஒல்லாந்தர் வீடுகள் குறித்து நமக்குக் கிடைக்கும் தகவல்கள் அவ்வீடுகளின் வெளித் தோற்றம் குறித்த மேலோட்டமான விபரங்களாகவே உள்ளன. யாழ்ப்பாணம் பிரித்தானியரின் கைக்கு வந்து நான்கு ஆண்டுகளின் பின்னர் 1800 ஆம் ஆண்டில் யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்த ஆளுனர் பிரடெரிக் நோர்த்துடன் கூட வந்த மதகுருவான ஜேம்ஸ் கோர்டினர் யாழ்ப்பாண நகரத்து வீடுகள் தொடர்பில் சில குறிப்புக்களைத் தந்துள்ளார். அக்குறிப்புக்களின்படி, வீடுகள், நேர்த்தியானவையாகவும், சுத்தமாகவும், வெளிப்புறம் வெள்ளை நிறம் பூசப்பட்டும் காணப்பட்டன. அத்துடன், வீடுகள் நிலமட்டத்திலிருந்து சில படிகள் உயர்ந்த மேடை போன்ற அமைப்புக்களின் மேல் கட்டப்பட்டிருந்ததாகவும் கோர்டினர் கூறுகின்றார். வீடுகளின் கூரைகள் ஓடுகளால் வேயப்பட்டிருந்ததையும், வீடுகளின் முன் விறாந்தைகள் இருந்ததையும், அவை பச்சை நிறமான மரத் தூண்களில் அல்லது, செங்கல், முருகைக்கல் போன்றவற்றுடன் சுண்ணாம்புச் சாந்து கலந்து கட்டப்பட்ட தூண்களில் தாங்கப்பட்டிருந்தன என்றும் அவரது குறிப்புக்களில் இருந்து அறிய முடிகின்றது.

1980 களின் நடுப்பகுதி வரை இவ்வாறான வீடுகள் பலவற்றைப் பழைய ஒல்லாந்தர் நகரப் பகுதியில், குறிப்பாகப் பிரதான வீதிப் பகுதியில் காணக் கூடியதாக இருந்தது. அக்காலத்தில் யாழ்ப்பாண அருங்காட்சியகமும் பிரதான வீதியில் இது போன்ற ஒரு வீட்டிலேயே அமைந்திருந்தது. 20 ஆம் நூற்றாண்டில் இவ்வீடுகளை ஆய்வு செய்த சிலர் அவற்றை அளந்து வரைந்துள்ளனர். இவ்வரைபடங்களூடாகவும் பல விடயங்கள் நாம் அறிந்துகொள்ள முடிகின்றது. உள்நாட்டுப் போர்க் காலத்தில் ஒல்லாந்தர் வீட்டுக் கட்டடக்கலைக்கு நல்ல எடுத்துக்காட்டுகளாக அமையக்கூடிய இவ்வீடுகளிற் பல முற்றாக அழிந்துவிட்டன. இன்றும், இவ்வாறான சில வீடுகளைப் பெரிதும் சேதமுற்ற, அல்லது பெருமளவு மாற்றங்களுக்கு உட்பட்ட நிலையில் பறங்கித்தெருப் பகுதியில் காண முடியும். யாழ்ப்பாண நகரத்து ஒல்லாந்தர் வீடுகள் வீதியை அண்டியே அமைக்கப்பட்டதால் இவற்றின் வளவு அல்லது தோட்டம் வீட்டின் பின்புறமே காணப்பட்டன. முன்புறத்தில் அமைந்திருந்த விறாந்தைகள் அகலமானவையாக வும், வீடுகளின் அகலத்துக்குச் சமமான நீளம் கொண்டவையாகவும் இருந்தன. சில வீடுகளின் வாயிற் கதவுகளும், முன் சுவரில் அமைந்த சாளரங்களும் மிகவும் உயரமானவையாகவும், அகலம் கூடியவையாகவும் காணப்பட்டன. இதனால், ஒன்றன்மீது ஒன்றாக இரண்டு இரட்டைக் கதவுகளைக் கொண்டிருந்த சாளரங்களும் சில வீடுகளில் இருந்தன. உள்ளே, கூடங்களும், அறைகளும் பெரியனவாகவும், உயரமானவையாகவும் நல்ல இடவசதியுடன் காணப்பட்டன. இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியிலும், இவ்வாறான சில வீடுகளில் சிறப்பான வேலைப்பாடுகளுடன் கூடிய ஒல்லாந்தர் காலத் தளபாடங்கள் இருந்துள்ளன. யாழ்ப்பாண நகர வரலாற்றின் ஒரு முக்கிய காலகட்டத்தின் பிரதிபலிப்பாகவும், நமது மரபுரிமைச் சொத்துக்களாகவும் விளங்கிய இவ்வாறான பல நல்ல வீடுகள் அழிந்துவிட்டது வருத்தத்துக்கு உரிய ஒரு விடயமாகும்.




பிரதான வீதியில் இருந்த ஒல்லாந்தர் வீடொன்றின் தளப்படம்

சுவடுகள் தொடரும்...






# "ஸ்புட்னிக்-V"

# இன்னொரு பனிப்போருக்கான ஆரம்ப குறிகாட்டியா?

- ஐ.வி. மகாசேனன் -

2019ஆம் ஆண்டு இறுதியில் சீனாவில் முதல் முதலில் அறிமுகமான கொரோனா வைரஸ் நோய்த்தொற்றால் தற்போது உலகம் முழுவதும் 2.16 கோடிக்கும் மேற்பட்டோர் பாதிக்கப்பட்டுள்ளதுடன், இதுவரை 7.69 லட்சம் பேர் உயிரிழந்துள்ளனர். எனவே, கோவிட்-19 நோய்த்தொற்றுக்கு எதிரான தடுப்பு மருந்தை உருவாக்குவதற்கு உலகம் முழுவதும் 120க்கும் மேற்பட்ட ஆராய்ச்சிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. இந்த நிலையில், ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடின் ஆகஸ்ட் 11, செவ்வாயன்று, உலகின் முதல் கொரோனா வைரஸ் தடுப்பூசியை "ஸ்பூட்னிக் வி" என்ற பெயரில் உருவாக்கியுள்ளதாக அறிவித்தார். புடினின் இந்த அறிவிப்பு, அத்துறை சார் நிபுணர்களிடமிருந்து பரவலான விமர்சனங்களைத் தூண்டியுள்ளது. அதனடிப்படையில் ரஷ்சியாவின் கொரோனா வைரஸ் தடுப்பூசியும் அதனுடன் முட்டிமோதும் அரசியலையும் இதில் ஆராயலாம்.

கொரோனா வைரஸ் உலகளவில் பரவத் தொடங்கிய நாள்முதலாய் "கொரோனா அரசியல்: என்ற விடயம் சர்வதேச அரசியலில் பிரதான பேசுபொருளாகக் காணப்படுகிறது. சீனா எதிர் அமெரிக்கா என்ற புதிய உலக ஒழுங்கிற்குள் - உலகை மாற்றுமோர் போக்கை - கொரோனா அரசியல் ஏற்படுத்தியிருந்தது. இந்நிலையில் கொரோனாவின் பாதிப்பு என்பது முழு உலகையும் பாதிக்க தொடங்குகையில், கொரோனாவிற்கான தடுப்பூசியை கண்டுபிடிக்கும் நாடே உலக ஆதிக்கத்தை நிலைநாட்டக்கூடிய நிலை பெறும் என்ற பார்வை சர்வதேச அரசியல் ஆய்வாளர்களிடையே ஏற்பட்டிருந்தது. உலக ஆதிக்கத்திற்குரிய நிலையைப் பெறவும், பொருளாதாரத்தை முதன்மைப்படுத்தியும் உலகின் பல நாடுகளும் கொரோனா வைரஸிற்கான தடுப்பு மருந்தை கண்டுபிடிப்பதில் ஆர்வமாகச் செயற்பட்டிருந்தன. அச்சூழலில் உலகின் முன்னிலைச் செல்வந்தரான மைக்ரோசொப்ட் நிறுவுனர் பில்கேட்ஸ் கொரோனா வைரஸ் தடுப்பு மருந்துக்காக அதிகளவு நிதியையும் வழங்கியிருந்தார். அதனை மையப்படுத்தி பில்கேட்ஸ் அவர்கள் மீதும் பல சதிக்கோட்பாடுகள் சர்வதேச அரசியலில் உலா வரத்தொடங்கியிருந்தமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

இத்தகைய போட்டிகள் நிறைந்த சூழலிலேயே கடந்த ஆகஸ்ட் 11 அன்று ரஷ்சிய அதிபர் விளாடிமிர் புடின் அவர்கள், உலகத்தில் முதலாவதாக மாஸ்கோவைத் தளமாகக் கொண்ட தொற்று நோய்களுக்கும் மற்றும் நுண் உயிரியலுக்குமான புயஅயடநலய அமைப்பினால் உருவாக்கிய தடுப்பூசியைத் தனது அரசாங்கம் பதிவுசெய்ததை அறிவித்தார். புடின் தனது புதல்விகளில் ஒருவருக்கு தடுப்பூசி வழங்கப்பட்டிருப்பதை உறுதிப்படுத்தி, "இது மிகவும் திறம்படச் செயல்படுகிறது, வலுவான நோய் எதிர்ப்புச் சக்தியை உருவாக்குகிறது என்பதை நான் அறிவேன், தேவையான அனைத்துச் சோதனைகளையும் அது கடந்துவிட்டது" என்று அதிகாரிகளின் வீடியோ சேகரிப்பில் தெரிவித்தார். இரண்டு வாரங்களுக்குள் முதல் தடுப்பூசியை நாடு வெளியிடத் தொடங்கும் என்று சுகாதார அமைச்சர் மிகைல் முராஷ்கோ கூறினார். சர்வதேச விஞ்ஞானச் சமூகத்தின் இட ஒதுக்கீடு எவ்வளவு ஆழமாக இருந்தாலும், சில நெருங்கிய அமெரிக்கக் கூட்டாளிகள் கூட ஆர்வத்தை அடையாளம் காட்டினர். இஸ்ரேலின் சுகாதார மந்திரி யூலி எடெல்ஸ்டீன் செவ்வாயன்று மாஸ்கோவுடன் அதன் தடுப்பூசி குறித்து ஆரம்ப விவாதங்களுக்கு நம்பிக்கை தெரிவித்தார்.



புடினின் நட்பு நாட்டின் தலைவரான பிலிப்பைன்ஸ் ஜனாதிபதி ரோட்ரிகோ டூர்ட்டே, தனது நாட்டை மருத்துவ பரிசோதனைகளுக்கான இடமாக வழங்கியது மட்டுமல்லாமல், தானும் பங்கேற்க முன்வந்தார்.

மாஸ்கோவின் கமலேயா ஆராய்ச்சி நிறுவனம் உருவாக்கிய இந்தத் தடுப்பூசி, அதன் விநியோகஸ்தரான ரஷ்ய வணிக நிறுவனமான சிஸ்டெமாவின் கருத்துப்படி, ஆண்டு இறுதிக்குள் வெகுஜன உற்பத்தியில் சேர்க்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஆனால் உலக சுகாதார அமைப்பு (றுர்மு) அல்லது வேறு எந்தச் சர்வதேச விஞ்ஞான அல்லது மருத்துவ அமைப்புகளுக்கும், மருந்தின் பாதுகாப்பு மற்றும் செயல்திறன் குறித்த எந்தத் தகவலையும் வழங்க ரஷ்சிய அரசாங்கம் தவறிவிட்டது என்ற விமர்சனமும், தடுப்பூசி ஆராய்ச்சி தொடர்பான சர்வதேச நெறிமுறைகளுக்கு மாறான முறையில், ஆயிரக்கணக்கான தன்னார்வலர்களை உள்ளடக்கிய மூன்றாம் கட்ட மருத்துவ பரிசோதனைகளுக்கு முன்பே, ரஷ்சிய அரசாங்கம் மருந்துக்கு ஒப்புதல் அளித்துள்ளது என்ற விமர்சனமும் அதிகமாக மேலெழுகிறது. மனித சோதனைகளின் மூன்றாம் கட்டம், ஒரு தடுப்பு மருந்து பாதுகாப்பானதும் செயற்திறன் மிக்கதும் என்பதை தீர்மானிப்பதில் மிகவும் முக்கியமானதாக கருதப்படுகிறது. சில தினங்களுக்கு முன்னர், றுர்மு மருத்துவ பரிசோதனைகளை மறுஆய்வு செய்ய எதிர்பார்த்ததாகக் கூறியுள்ளது.

டென்மார்க்கில் உள்ள ஆர்ஹஸ் பல்கலைக்கழகத்தின் மருத்துவ மற்றும் தொற்று நோய்கள் தொடர்பான இணைப் பேராசிரியரான எஸ்கில்ட் பீட்டர்சன், "அது சரியாக இருக்கலாம் - அவர்கள் பயன்படுத்தும் கட்டுமானம் மிகவும் பிரபலமானது" என ரஷ்சிய தடுப்பு மருந்து கண்டுபிடிப்புக்கு ஆதரவான கருத்தை கூறிய போதிலும், "ஆனால் அவர்கள் முக்கிய சோதனைகளைத் தவிர்த்துவிட்டார்கள், எனவே அதன் தரம் பற்றி எங்களுக்குத் தெரியாது." என்ற முரணான கருத்தையும் முன்வைத்துள்ளார்.

"இந்த மருந்தின் பாதுகாப்பு மற்றும் நோயெதிர்ப்பு சம்பந்தப்பட்ட விடயங்கள் தொடர்பாகச் சொல்லக் கூடிய பதிலில் கூறப்படும் கூற்றுக்கள் உண்மையா? இல்லையா? என்பது எங்களுக்குத் தெரியாது" என்று ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகத்தின் தொற்று நோய் மருத்துவரான பீட்டர் ட்ரோபாக் அல் ஜசீராவிடம் தெரிவித்தார். "புவிசார் அரசியல் வெற்றியைக் கோருவது என்பது பாதுகாப்பு மற்றும் செயல்திறன் ஆகியவற்றின் வலுவைக் குறைக்க மற்ற நாடுகளுக்கு அழுத்தம் கொடுக்கக்கூடும், அது அனைவரையும் ஆபத்தில் ஆழ்த்தக்கூடும்" என்றும் அவர் கூறினார்.

வர்ஜீனியா காமன்வெல்த் பல்கலைக்கழகத்தில் ரஷ்ய அரசியல் மற்றும் உலகளாவிய பொது சுகாதாரத்தைக் கற்பிக்கும் ட்விக் என்பவர், "இது புடின் அவர்களின் ஒரு பெரிய சூதாட்டத்தைக் குறிக்கிறது" எனக் கூறியுள்ளார். அத்துடன் மேற்குசார் ஊடகங்களும் ரஷ்சியாவின் கொரோனா தொற்றுநோய்த் தடுப்பு மருந்து கண்டுபிடிப்பைக் கடுமையாக விமர்சித்து வருகின்றன. புடின் தனது உள்நாட்டு அரசியல் செல்வத்தை உயர்த்துவதற்கான ஒரு தெளிவான நடவடிக்கை என்றும், அதே நேரத்தில் ரஷ்யாவின் உலகளாவிய கௌரவத்தை எரிக்கின்ற செயலெனவும் கடுமையாக அவர்கள் சாடிவருகின்றனர்.

ஒரு தடுப்பூசி தயாரிப்பதற்கான புட்டினின் அவசரத்தின் பின்னால் பூகோள அரசியல், வணிக மற்றும் உள்நாட்டு அரசியல் நோக்கங்கள் உள்ளன. தடுப்பூசி இலாபங்களுக்கான சர்வதேசப் போட்டியாளர்களிடமிருந்து தன்னகப்படுத்திக் கொள்வதற்கான ஒரு தெளிவான முயற்சியாகும். முக்கியமாக அமெரிக்காவிடம் இருந்து தன்னகப்படுத்திக் கொள்வதற்கானதாகும். என ரஷ்யாவின் தடுப்பூசி திட்டத்தை இழிவுபடுத்துவதற்காக வாஷிங்டன், புனைகதைப் பிரச்சாரத்தை நடத்தி வருகிறது. ஒரு மாதத்திற்கு முன்னரே, அமெரிக்க, பிரிட்டிஷ் மற்றும் கனேடிய புலனாய்வு அமைப்புகளின் கூட்டு அறிக்கையின் அடிப்படையில் ஒரு தொடர் போலியான கட்டுரைகளை நியூயோர்க் டைம்ஸ் வெளியிட்டது. இதில் மாஸ்கோ, அமெரிக்க தடுப்பூசி ஆராய்ச்சியை களவாடுவதாக முற்றிலும் ஆதாரமற்ற குற்றச்சாட்டுகளை முன்வைத்தது. ரஷ்யா இணைய "ஹேக்கர்கள்" அமெரிக்கா, பிரிட்டன் மற்றும் கனடாவில் ஆராய்ச்சித் தளங்களை மீற முயன்றனர் என்ற குற்றச்சாட்டை மாஸ்கோவும் கடுமையாக மறுத்திருந்தது.

உலக அழிவுகளின் மத்தியிலும் அரச தலைவர்களின் வல்லாதிக்கப் போட்டி மனப்பாங்கே ரஷ்சியாவின் தடுப்பு மருந்து கண்டுபிடிப்புக்கு எதிரான விமர்சனத்துக்கு பிரதான காரணமாகிறது. ரஷ்சியாவும் சர்வதேச அரசியல் வல்லாதிக்கப் போட்டியை, தனது கண்டுபிடிப்பான தடுப்பு மருந்தின் பெயரிடலேயே ஆழமாகக் கோடிட்டுக் காட்டியுள்ளது. கொரோனா பரவுகை ஆரம்ப கால ஏகாதிபத்திய போட்டியில் அமெரிக்க – சீனா என்பதே முதன்மையை பெற்றிருந்தன. இரண்டாம் உலகப்போருக்கு பின்னரான பனிப்போர் காலச் சூழலில் வல்லாதிக்கப் போட்டியில் முதன்மையிலிருந்த ரஷ்சிய அவ்வரிசையில் இடம்பெற்றிருக்கவில்லை. இந்நிலையிலேயே ரஷ்சியா இன்றும் வல்லாதிக்கப் போட்டியில் தானும் ஓர் முதன்மையான பங்காளி என்பதை ஞாபகப்படுத்தும் விதத்திலேயே கொரோனா தடுப்பு மருந்துக்கு "ஸ்பூட்னிக் வி" எனப்பெயரிட்டுள்ளது.

உலகெங்கிலும் 20 மில்லியனுக்கும் அதிகமான மக்களைப் பாதித்த வைரஸிற்கான முதல் தடுப்பூசியை உருவாக்குவதற்கான தீவிரமான சர்வதேச போட்டியின் பின்னணியில், "ஸ்பூட்னிக் வி" எனும் பெயர் தனியொரு அரசியல் வரலாற்றை மீள்நினைவூட்டுகிறது. இரண்டாம் உலகப்போருக்கு பின்னரான அமெரிக்காவிற்கும், சோவியத் யூனியனிற்குமிடையிலான பனிப்போரின் ஆரம்பமும் "ஸ்பூட்னிக்" என்ற பெயரில் சோவியத் யூனியனால் உருவாக்கப்பட்டு விண்ணுக்கு அனுப்பட்ட செயற்கைக்கோளிலிருந்தே ஆரம்பமாகியது. சோவியத் செயற்கைக்கோள் 1957ஆம் ஆண்டு மேற்கு நாடுகளை வியப்பில் ஆழ்த்தியதோடு, சோவியத் ஒன்றியத்திற்கும் அமெரிக்காவிற்கும் இடையிலான பனிப்போர் "விண்வெளிப் பந்தயத்தை" தூண்டியது. 1969ஆம் ஆண்டில் அமெரிக்க விண்வெளி நிலவு தரையிறக்கத்தில் உச்சக்கட்டத்தை அடைந்த முயற்சியை மேம்படுத்தியது. கொரோனா வைரஸ் வருகைக்கு பின்னர் மீளப் பனிப்போர் பற்றிய உரையாடல் மேலெழுகையில், ரஷ்சியா பனிப்போருக்கு தூண்டிய ஸ்பூட்னிக் பெயரிலேயே தடுப்பு மருந்துக்குப் பெயரிட்டுள்ளமை, இம்முறை பனிப்போர் என்ற விடயம் " உயிரியல் தடுப்பு மருந்துப் பந்தயத்தால்" உருவாக்கப்படும் என்ற சமிக்ஞை வழங்கப்படுகின்றதா? என்ற தேடலை ஆய்வாளர்களிடையே உருவாக்கியுள்ளது. இப்போட்டியிலேயே அமெரிக்காவும்ஈ அமெரிக்காசார் மேற்குலகும் முதன்மையான ரஷ்சியாவின் தடுப்புமருந்து தொடர்பிலே விமர்சனங்களை விளாசுகின்றன.

ரஷ்சிய கொரோனா தடுப்பு மருந்தைக் கண்டுபிடிக்குமாயின், ஒற்றைமைய அரசியலில் அமெரிக்கா, தன்னை உலகிற்கு காட்டி வந்த இரட்சகன் என்ற தோற்றம் தகர்க்கப்பட்டுவிடும் என்பதுவும், அமெரிக்கா ரஷ்சியாவின் தடுப்புமருந்து தொடர்பின் அதிகளவிலான எதிர்ப்பை முன்வைக்க காரணமாகிறது. வாஷிங்டனில் உள்ள மூலோபாய மற்றும் சர்வதேச ஆய்வுகள் மையத்தின் உலகளாவிய சுகாதாரக் கொள்கை மையத்தின் மூத்த உறுப்பினரான ஜூடி ட்விக் ரஷ்சியாவின் கொரோனா தடுப்பு மருந்து கண்டுபிடிப்புத் தொடர்பாக கூறியுள்ள, "புடின் ரஷ்யாவை ஒரு இரட்சகராக நிலைநிறுத்த இது ஒரு வாய்ப்பாக உள்ளது" எனும் கருத்தும் அமெரிக்காவின் எதிர்ப்புக்கான காரணத்தையே தெளிவுபடுத்துகின்றது.

இம்மோதுகை நிலையானது, தேசிய அடித்தளத்திலான போட்டிக் குழுக்களின் நிதிய மற்றும் பூகோள அரசியல் நலன்களுக்கு மருத்துவ விஞ்ஞானத்தையும் மற்றும் தொழில்நுட்பத்தினையும் விபரீதமான மற்றும் அழிவுகரமாக அடிபணியச்செய்தலை, இது அடிக்கோடிட்டுக் காட்டுகிறது. வல்லாதிக்க நலனுக்காக ஒரு தடுப்பூசியின் உற்பத்தி மற்றும் விநியோகத்தைக் கட்டுப்படுத்த, மோதுவது, ஒரு சர்வதேசரீதியிலான மக்கள் சுகாதார பேரழிவின் மத்தியில் ஒரு உயிர்காக்கும் மருந்தின் பகுத்தறிவான மற்றும் திறமையான அபிவிருத்திக்கு மிகப்பெரிய தடையாக இருக்கின்றது.

எனவே ரஷ்சியாவின் கொரோனாவிற்கான தடுப்பு மருந்து கண்டுபிடிப்பும் அதற்கான பெயரிடலும் அதனை மையப்படுத்தி அமெரிக்கா மற்றும் மேற்குலகு ஊடகங்கள் தொடுக்கும் அழுத்தம் என்பன "உயிரியல் தடுப்பு மருந்துப் பந்தயத்தால்" மூளவுள்ள பனிப்போரையே கோடிட்டு காட்டுகின்றது. அதற்கான சரியான உறுதியான தலைமையை ரஷ்சிய அரசியலமைப்புச் சீர்திருத்தம் மூலம் வழங்கியுள்ளது. அமெரிக்காவும் சரியான உறுதியான தலைமையை வழங்குமா? என்பதை நவம்பர்-3 அமெரிக்க மக்கள் ஒரு விரல் புரட்சி மூலமே தெரிவிக்க வேண்டும்.

# பதவி ஏற்பும் பரப்பப்பட்ட தரமற்ற கருத்துகளும்

- மாசிலான் -







புதிய நாடாளுமன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களின் பதவியேற்பு நிகழ்வு நடந்து முடிந்து விட்டது. ஆனால் அதற்கு முன்னரே இந்தப் பதவி ஏற்புப் பற்றித் தமிழ் மக்கள் மத்தியில், ஒரு தேவையற்ற பரப்புரையைச் சில அரசியற் கட்சிகளும் , செய்தி ஊடகங்களும் மேற்கொண்டு வந்ததை அவதானிக்கக் கூடியதாக இருந்தது. பதவியேற்பு என்பது நாடாளுமன்றத்தில் மட்டும் நடைபெறும் ஒன்றல்ல. உள்ளூராட்சி மன்றங்கள், மாகாணசபைகள் போன்ற தெரிவு செய்யப்படும் நிறுவனங்களில் எல்லாம் நடைபெற்று வரும் ஒரு நிகழ்வே. ஆனால் தேர்தலுக்கு முன்னரே ஒர் அரசியல் கட்சியினரைக் குறிவைத்து, “இவர்கள் எவ்வாறு நாடாளுமன்றத்திற்குச் சென்று பதவி ஏற்கும்போது உறுதி மொழி எடுக்கப்போகிறார்கள்?” என்று கேலி செய்யும் விதத்தில் செய்திகளைப் பரப்பி வந்துள்ளனர். தற்போது தேர்தல் முடிந்த பின்னரும் முன்னரை விட மிகவும் கூடுதல் பரப்புரையைக் காண முடிகிறது. செய்தி ஊடகங்களுடன் மின் ஊடகங்களும் இந்தப் பதவியேற்புப் பற்றித் தரம்குறைந்த செய்திகளைப் பரப்பி வருகின்றன.

அரசாங்க சபை,நாடாளுமன்றம் ஆகியனவற்றின் தேர்தல்கள் முடிந்த பின்னர் புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் பதவி ஏற்பின் போது உறுதி மொழி கூறிப் பதவி ஏற்பது புதினமல்ல. அது ஒரு வழக்கம். அல்லது சம்பிரதாயம் என்றும் கூறுவர். முன்னர், அரசியல் யாப்பின் மீது அல்லது இறைவனின் மீது சத்தியம் செய்து பதவியேற்பர். ஆனால் அதில் பின்னர் மாற்றம் ஏற்பட்டு அரசியல் யாப்பின் மீது பதவி ஏற்பது என்று கொண்டு வரப்பட்டது. 1948 முதல் இற்றை வரை இது தான் நடைமுறையில் இருக்கின்றது. அரசியல் யாப்பை மாற்ற வேண்டும் என்று கூறுபவர்களும், நடைமுறையில் இருக்கும் அரசியல் யாப்பிற்கு உறுதி எடுத்த பின்னர் தான் அதை மாற்ற வழி காண்பார்கள். அப்பொழுது எல்லாம் பதவியேற்புப்பற்றிப் பேசாதவர்கள் , இம்முறை தேர்தலுக்கு முன்னரே தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி வென்று நாடாளுமன்றம் சென்றால், எவ்வாறு ஒற்றை ஆட்சி அரசியலமைப்புக்குச் சத்தியம் செய்து பதவி ஏற்கப்போகிறது? இது ஏற்புடையதல்லவே!! என்று கேலி செய்யத் தொடங்கினார்கள். தேர்தலுக்குப் பின்னர் இப்போது அது மேலும் வலுவான பரப்புரையாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது. செய்தி ஏடுகளும் , ஊடகங்களும் இந்தக் குரல்கொடுப்பவர்களுக்கு ஆதரவான நிலையை எடுத்து வருகின்றன. இந்த ஏடுகளில் உள்ளவர்களுக்கு வழமை ,சம்பிரதாயம் நாடாளுமன்ற நடைமுறை என்பன பற்றிய தெளிவான வரலாற்று உண்மையும், பார்வையும் இல்லையோ? என்று எண்ண வேண்டிய நிலையை இது ஏற்படுத்தியுள்ளது..

1948 இல் இருந்து பார்த்தால், அப்பொழுது இருந்தது ஒற்றை ஆட்சி அரசியல் அமைப்பே ஆகும். அவ்வாறு அதில் கூறப்படாவிட்டாலும் அது பெரும்பான்மை இனத்திடம் கொடுக்கப்பட்ட ஆட்சியுரிமையே. அந்த அரசியலமைப்பு யாப்பு ஏகாதிபத்திய முதலாளித்துவக்கருக் கொண்ட யாப்பு என்றும் ,அதை மாற்றிப் பொதுவுடைமை முறை ஆட்சி ஏற்பட வேண்டும் என்று கூறிய இடதுசாரிகள் நாடாளுமன்றம் சென்று - அந்த யாப்பிற்கு எதிரானவர்கள் - நாடாளுமன்றத்தில் அதனை ஏற்பதாகத் தான் உறுதி எடுத்தார்கள். அப்பொழுது ஒருவரும் ஒன்றும் கூறவில்லை. அதன் பின்னர் “ஒற்றை ஆட்சி அரசியல் எமக்கு வேண்டாம். சமஷ்டியே தமிழ் மக்களுக்கு ஏற்ற அரசியலமைப்பு,” என்று கூறிய தந்தை செல்வாவும் நாடாளுமன்றத்தில் ஒற்றை ஆட்சி அரசின் நாடாளுமன்றத்தில் தான் பதவி உறுதி எடுத்து அரசியல் செய்தார்கள்.அது மட்டுமல்ல, “சோல்பரி அரசியல் யாப்பு தமிழ் மக்களுக்குப் பாதுக்காப்பில்லாதது. சமஷ்டி அரசியல மைப்புத் தான் தமிழ் மக்களுக்குப் பாதுகாப்பானது ” என்று கூறிய தந்தை செல்வா சவப்பெட்டிக்குள் அரசியல் யாப்பை வைத்துப் பெரும் ஊர்வலமாக எடுத்துச் சென்று யாழ்ப்பாணம் முற்றவெளியில் வைத்துத் தீயிட்டுக் கொளுத்தினார். இதன் பின்னர் 1970 இல் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் ஆட்சி அமைத்த சிறிமாவோ புதிய அரசியல் அமைப்பைக் கொண்டு வந்தார். அதன் படி 1972 இல் சிறிலங்கா புதிய அரசியல் யாப்பின் படி குடியரசாக நாடாக ஏற்றுக்கொள்ளப் பட்டது. இலங்கைத் தீவானது ஒர் ஒற்றை ஆட்சி அமைப்புக் கொண்ட சிங்கள பௌத்த குடியரசு என்று வெளிப்படுத்தப்பட்டது. இந்த யாப்புத் தயாரிக்கப்பட்ட போது சிறிமாவோவின் அழைப்பை ஏற்று அதில் பங்குகொண்ட தமிழர் தரப்புத் தங்களின் திருத்தங்கள் ஒன்று கூட ஏற்கப்படாத நிலையில் அரசியல் யாக்க அவையில் இருந்து வெளியேறினர். தமிழர்களின் சம்மதமின்றி அவ்வரசியல் அமைப்பு நிறைவேறியது. 1972 ஜீலை 4ஆம் நாள் தந்தை செல்வா தலைமையில் தமிழரசுக்கட்சி உறுப்பினர்கள் தேசிய அரசுப்பேரவைக்குச் சென்றார்கள்.புதிய அரசியலமைப்பின் மீது பற்றுறுதியுரை கூறினார்கள். ஏற்றுக்கொண்டார்கள் , கையெழுத்து இட்டார்கள்.அப்பொழுது எவரும் செல்வநாயகம் அவர்களே சமஷ்டி என்று கூறினீர்களே! எதற்காக இப்பொழுது புதிய அரசியலமைப்பை ஏற்று உறுதியை வழங்கினீர்கள்? என்று கேட்கவில்லை. அதன் பின்னர் தந்தை செல்வா தனது நாடாளுமன்ற உறுப்பினர் பதவியைத் துறந்து நாடாளுமன்றத்திலே வைத்து ஒரு உரை ஆற்றி அரசுக்குச் சவால் விட்டார். தமிழ் மக்கள் இந்த அரசியல் அமைப்பை ஏற்கவில்லை என்று கூறியவர் , “தான் அந்தச் சபை உறுப்பினர் பதவியில் இருந்து விலகி மீண்டும் தேர்தலில் போட்டியிடு வதாகவும். அரசும் தன்னுடன் போட்டி யிடட்டும். தான் தோல்வியடைந்தால் அரசியலை விட்டுவிடுகிறேன். ஆனால் அரசு தோல்வியடைந்தால் தமிழ் மக்கள் இந்த அரசியல் யாப்பை ஏற்கவில்லை என்பதை ஒப்புக்கொள்ள வேண்டும்.” என்றார் தேர்தலை நடத்தாமல் இரண்டு ஆண்டுகள் இழுத்தடித்த அரசு தனது அனைத்து வளங்களையும் பயன்படுத்தித் தேர்தலைச் சந்தித்தது. தந்தை செல்வா மிகப் பெரிய வெற்றி பெற்றார். உலகத்துக்கு, தமிழ் மக்கள் இந்த ஒற்றையாட்சி அரசியல் அமைப்பை ஏற்கவில்லை என்று தெரியப் படுத்தினார், மீண்டும் நாடாளுமன்றம் சென்றார் அரசியல் யாப்புக்கு பற்றுறுதி கூறிப் பதவியில் தொடர்ந்தார். அரசியல் யாப்பைப் புறக்கணிக்கிறோம் என்று மக்கள் ஆணை யைப்பெற்ற செல்வா அதே அரசியல் யாப்பின் மீதே உறுதிஎடுத்துக்கொண்டதை எவரும் கேலி செய்யவும் இல்லை , கிண்டல் அடிக்கவும் இல்லை. ஏனெனில் அன்று பண்பாடு தெரிந்த ஊடகங்களே இருந்தன.

இதன் பின்னர் 1976 இல் வட்டுக்கோட்டைத் தீர்மானத்தை நிறைவேற்றினார்கள் . தனித் தமிழீழமே முடிவு என்று தீர்மானம் நிறைவேற்றிய வர்கள் தொடர்ந்து அதே நாடாளுமன்றத் திலேய இருந்து வந்தனர். அதற்குப் பின்னர் 1977 இல் நடந்த பொதுத் தேர்தலில், தமிழர் விடுதலைக் கூட்டணியானது , தனித் தமிழ் ஈழத்திற்குரிய ஆணையையும் மக்களிடம் பெற்றது. நாடாளுமன்றம் சென்ற உறுப் பினர்கள் வழமை போன்றுதான் பற்றுறுதி எடுத்தனர். அப்பொழுது கூட எவரும் தனி நாடு என்று ஆணை பெற்று விட்டு ஒற்றை ஆட்சிக்கு உறுதி எடுத்திருக்கிறீர்களே? என்று கேட்கவில்லை. அப்பொழுது இருந்தவர்களுக்கு இப்போதுள்ளவர்களைப் போன்ற அறிவாற்றல் இல்லையோ தெரியவில்லை?

ஆனால் தனி நாடு கேட்காத, கேட்க வும் முடியாத நிலையில் இரு தேசங்கள் ஒரு நாடு என்று கூறி உண்மையான சமஷ்டித் தத்துவத்தைக் கூறி வரும் முன்னணியினர் எவ்வாறு ஒற்றை ஆட்சி அரசியல் அமைக்கு உறுதி எடுக்கலாம் என்று கூறுவதுடன் ஏளனமும் செய்கிறார்கள். “தமிழர் தரப்பில் கூட்டமைப்பு, ஈபிஆர்எல்எப் கட்சி,முன்னணி, ஆகியனவற்றுடன் டக்ளசின் கட்சியும் வேறு சில கட்சிகளும் தான் நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கொண்டுள்ள கட்சிகளாகும்.இதில் உள்ள கட்சிகளில் முன்னணியைத் தவிர மற்றவை அனைத்தும் ஒற்றை ஆட்சியை ஏற்றுள்ள கட்சிகள் என்பதால் அவர்கள் அரசியல் அமைப்பிற்குப் பற்றுறுதி எடுக்கலாம் . முன்னணி மட்டும் ஒற்றை ஆட்சியை ஏற்கவில்லை அதனாற்றான் முன்னணியினர் பற்றுறுதி எடுக்கக் கூடாது. எனஅவை கூறுகின்றன” என்று கருத லாமா.?ஏனெனில் மற்றக் கட்சிகள் ஒற்றை ஆட்சிக்கு பற்றுறுதி எடுப்பது தவறு என்று எவரும் கூறவில்லையே! முன்னணியை மட்டுமே குறிவைப்பது ஏன்?

கூட்டமைப்பு அல்லது தமிழரசுக் கட்சியின் அடிப்படைக் கொள்கைகளில் ஒன்று இலங்கைத் தீவுக்குள் இணைப்பாட்சி ஏற்படுத்துவது என்பதாகும்.. இணைப்பாட்சி என்பது இரு தேசங்களைக் கொண்ட அலகுகள் இணைந்து சமஷ்டி அரசை ஏற்படுத்துதல் என்பது தானே . அவர்கள் ஒற்றை ஆட்சி அரசியல் அமைப்புக்கு உறுதி மொழி எடுப்பது தவறில்லை ஆனால் அதையே மிகவும் துலக்கமாக் கூறும் முன்னணி சத்தியப் பிரமாணம் எடுப்பது தவறு என்கின்றன ஊடகங்கள்...அடுத்து ஈபிஆர்எல் எப் இன் தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி . இதில் விக்கினேஸ்வரன் நாடாளுமன்றத்திற்குத் தெரிவாகி உள்ளார். விக்கினேஸ்வரன் சமஷ்டி தான் தீர்வு என்று கூறி வருகிறார். அவ்வாறு கூறுபவர் அங்கு சென்று ஒற்றையாட்சிக்குப் பற்றுறுதி எடுப்பது பற்றி எவரும் கூறாது இருந்து கொண்டு கஜேந்திரகுமாரைக் குறை கூறுவது ஏன்?சிலவேளை விக்கினேஸ்வரன் சமஷ்டி என்று கூறினாலும் அவர் போட்டியிட்டு வென்ற கட்சி சமஷ்டி என்று கூறுவதில்லையே. அவர்கள் ஒற்றை ஆட்சிக்குள் பதின் மூன்று கூட்டல்ஜ13¸ஸ என்று தானே கூறி வருகிறார்கள். எனவே விக்கினேஸ்வரன் ஒற்றை ஆட்சிக்குள் சத்தியப் பிரமாணம் எடுப்பது தவறில்லை என்று நினைக்கிறார்களோ!

இவற்றை விட்டால் மாநிலத்தில் சுயாட்சி , மத்தியில் கூட்டாட்சி என்று எப்போதோ கூறிய டக்ளசின் கட்சி தானே! அது கொள்கை என்று ஒன்று இல்லாத அமைப்புத் தானே !ஒற்றை ஆட்சிக்கு அது சத்தியப் பிரமாணம் எடுப்பதில் தவறு எதுவுமில்லை என்று நினைத்து அது பற்றிப் பேசாது விட்டார்களோ, தெரியவில்லை. ஆனால் கஜேந்திரகுமாரின் மீது தான் ஊடகங்களுக்கும் வேறு சிலருக்கும் அதிக அக்கறை. இவற்றை நோக்கும் போ து ஒன்று மட்டும் உறுதியாகிறது. முன்னணியைத் தவிர மற்ற அனைத்துக் கட்சிகளும் ஒற்றை ஆட்சி அரசியல் அமைப்பை ஏற்றுக்கொண்டு விட்டனர். எனவே அவை அரசியல் அமைப்புக்குப் பற்றுறுதி எடுப்பது தவறில்லை என்பதாகும்.அப்படியே அதை விட்டு விடுவோம்.

சட்ட மேதை மு திருச்செல்வம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பதவிப் பற்றுறுதி எடுப்பது பற்றி வழக்கு மன்றில் கூறியனவற்றைச் சுருக்கமாகப் பார்ப்போம்.ஜநூல் ஈழத் தமிழர் உரிமை “1972 மே 22 ஆம் நாள் புதிய அரசியல் அமைப்பு நடை முறைக்கு வந்தது. 1972 ஜீலை 4 ஆம் நாள் மூதறிஞர் செல்வநாயகம் தலைமையில் தமிழரசுக்கட்சி உறுப்பினர்கள் தேசிய அரசுப் பேரவைக்குச் சென்றார்கள்.புதிய அரசமைப்பின் மீது பற்றுறுதியுரை கூறினார்கள். ஏற்றுக் கொண்டார்கள். கையெழுத்திட்டார்கள்.

அரசியலமைப்பு யாக்க அவையைப் புறக்கணித்தவர்கள் அதிலிருந்து வெளியேறியவர்கள்,அதன்மூலம் அரசியலமைப்புத் தயாரிப்பதில் பங்கு கொள்ள மறுத்தவர்கள்,தயாரித்து ஏற்று நடைமுறைப்படுத்தப்பட்ட புதிய அரசியலமைப்பை ஏற்கிறோம் என்று கையெழுத்திட்டார்கள்.எனவே தமிழ் மக்கள் புதிய அரசியலமைப்பை எதிர்ப்பின்றி ஏற்றுக்கொண்டார்கள் என்று வாதிடலாம். உண்மை அதுவல்ல. தமிழரசுக்கட்சியினர் ஒப்புக்காக உறுதியுரை கூறிக் கையெழுத்திட்டார்கள். தேசிய அரசுப் பேரவையைத் தமது அரசியல் மேடையாகப் பயன்படுத்தும் நோக்குடன் கையெழுத்திட்டார்கள்.அவ்வளவுதான். இந்திய விடுதலைப் போராட்ட காலத்திலும் இத்தகைய நடைமுறை ஏற்றுக்கொள்ளப்பட்டது. ஒப்புக்காக உறுதியுரை கூறினார்களே ஒழியச் சம்பிரதாயத்துக்காகக் கையெழுத்திட்டார் களே ஒழிய, உண்மையாக அரசியல மைப்பை ஏற்றுக்கொள்ளவில்லை.”

இது தான் யதார்த்தம் .இவ்வாறு வாதாடிய மு. திருச்செல்வம் முற்றவெளியில் அரசியலமைப்பை எரித்தது பற்றியும் , தந்தை செல்வா பதவியைத் துறந்து மீண்டும் போட்டியிட்டுத் தமிழ் மக்கள் அரசியலமைப்பை ஏற்கவில்லை என்று நிறுவியதையும் எடுத்து வைத்து வாதாடியுள்ளார்.

இந்த நிலையில் தான் டக்ளஸ் கேட்ட வினாவிற்குக் கஜேந்திரகுமார் விளக்கம் அளித்துள்ளார். அதாவது நாடாளுமன்றத்தில் அரசியலமைப்புக்கு பற்றுறுதி எடுப்பது தவறில்லை. அது சம்பிரதாயம் என்று கூறியதை மட்டும் தலைப்புச் செய்தியாகப் போட்டு கஜேந்திரகுமார் ஒற்றை ஆட்சியை ஏற்றுக்கொண்டு விட்டார் என்று ஒரு ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது. தமிழிலும் ஆங்கிலத்திலும் கலந்து பெயர் வைத்துள்ள அந்த ஊடகம் , ஐயோ தமிழைக்கொலை செய்கிறார்கள் என்று செய்தி போடும் ஏடு, தனது பெயரைக் கலப்பு மொழியைவைத்து நாடகமாடுவது போல் கஜேந்திர குமாரின் உரையாடலுக்குத் தவறான தலைப்பிட்டு மக்களை ஏமாற்ற முயற்சிக்கிறது. இதே போல் தான் தொடர்ந்து முன்னணியை இருட்டடிப்புச் செய்யும் இன்னும் ஒரு ஏடு துணிவுடன் தனது செய்தி என்று போடாமல் டக்ளஸ் தெரிவித்தார் என்று போட்டுள்ளது. ஏனெனில் உண்மையைத் தான் ஏராள மக்கள் அந்தத் தொலைக்காட்சி நிகழ்ச்சியை நேரலை மூலம் பார்த்துள்ளனரே.எனவே தான் தனது என்று கூறாமல் வேறொருவர் மேல் போட்டுத் தப்பிக்க முனைந்துள்ளது.

நாடாளுமன்றத்தில் சம்பிரதாயத்துக்காக எடுக்கும் பற்றுறுதியுரை பற்றி என்ன சொல்லியுள்ளார் சட்ட மேதை மு. திருச்செல்வம் என்பதைப் புரிந்து கொண்டால் சரியாகவும் பண்பாகவும் பேசவும் எழுதவும் முடியும்.

# தமிழ் அரசியல் தலைமைகளின் விஸ்வரூபம்.

- குருபார்வை -



பொதுத் தேர்தலுக்கு முன்னர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள்ளும், இலங்கைத் தமிழரசுக் கட்சிக்குள்ளும் நிலவிய கட்சித் தலைவர்களுக் கிடையேயான மௌனயுத்தம், தேர்தலில் சந்தித்த வரலாற்று பின்னடைவுகளின் பின்னர் வெளிப்படையாகவே விஸ்வரூபம் எடுத்துள்ளமை தமிழ் மக்களால் மிகவும் அருவருப்புடன் நோக்கப் படத் தொடங்கியுள்ளது.

கூட்டமைப்புக் கட்டமைப்பானது கிட்டத்தட்ட முற்றிலும் சுயமிழந்துள்ள நிலையில், எந்தவகையிலும் ஆளுமையற்றவராக அண்மைக் காலமாகத் தன்னை இனம் காட்டிவரும் அதன் தலைவரான சம்பந்தர் தள்ளாமையின் அழுத்தம் அதிகமாக அதிகமாக, எதனைப் பற்றி விளக்கம் கேட்டாலும் பதட்டமும், சினமும் கொண்டவராகப் பொறுப்புணர்ச்சி அற்ற நிலையில் அலட்சியமாகப் பதிலளித்து வருவதும், முன்னுக்குப் பின் முரண்பட்ட நிலையில் கருத்துக் கூறிவருவதும், கூட்டமைப்பின் பெயருக்கிருந்த மதிப்பைக் கொச்சைப் படுத்துவதாக உள்ளது. வெளிப்படையாகக் கூறுவதானால் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் ஐயா அவர்கள் ஒரு கட்சித் தலைவருக்கு மிகவும் அவசியமான தொலை நோக்குச் சிந்தனைத் திறனுடன் செயற்பட மறந்து நீண்டகாலமாயிற்று என்றே கூற வேண்டும்.

அல்லது தனது சொந்த மக்களின் அரசியல் அபிலாஷைகளையெல்லாம், அந்நிய - அயலக மற்றும் ஆதிக்க சக்திகளின் நலனுக்கேற்ப விட்டுக் கொடுக்கும் இணக்க மற்றும் சலுகை அரசியலுக்கு ஆட்பட்டதன் மூலம் தமிழ்த் தேசிய நீக்க அரசியலுக்கு மௌன அங்கீகாரம் கொடுக்க முனைந்தார் என்றும் சொல்ல முடியும்.

இது அவர் அறிந்தே செய்த விடயமாதலால் இதனைத் தவறு எனச் சொல்லிவிட முடியாது. இது தனது கூட்டமைப்பின் கொள்கை நோக்கிற்கும், மக்களின் எதிர்பார்ப்புக்கும், நம்பிக்கைக்கும் செய்த துரோகமாகும். இங்கே தான் கூட்டமைப்புத் தொடரூந்துத் தண்டவாளம் மாறிப் பயணிக்க ஆரம்பித்து விட்டதை முழுமையாக அடையாளப்படுத்தப்படுகிறது.

கூட்டமைப்பின் ஆரம்பகாலப் பங்காளிகள் 2010 இன் பின்னர் வெவ்வேறு காலகட்டங்களில் வெவ்வேறு காரணங்களுக்காகத் தத்தமக்குள் முரண்பட்டுக் கொண்டு, வெவ்வேறு திசைகளில் தமிழ் தேசியத்தின் பெயரையும், தேசியத் தலைவரின் இலட்சியத்தையும் புறம் மறைத்துவிட்டு, சுயநல அரசியல் நகர்வுகளை மேற்கொள்ளத் தொடங்கிய போதே அவ்வமைப்புத் திசைமாறத் தொடங்கிவிட்டது.

ஆனால் தேர்தல் காலங்களில் மட்டும் தேசியம், தேசியத் தலைவர், போராளிகள், தியாகம் என ஊழையிடத் தொடங்கி விடுவதை மக்கள் அவதானிக்காமல் இல்லை. அதன் எதிரொலியே இம்முறை தேர்தலில் கூட்டமைப்புக்கு கிடைத்த பின்னடைவாகும். மற்றும்படி ஆளும்தரப்பு அரசியல்வாதிகள் கூறிக் கூத்தடிப்பது போலும் தமிழ்த் தேசியத்துக்கோ, விடுதலைப்புலிகளின் கொள்கைகளுக்கோ, தமிழ் மக்களின் விடுதலையுணர்வுக்கோ கிடைத்த தோல்வியல்ல.

மாறாகத் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் கொள்கைப் பிறழ்வுக்கும், கோமாளித் தனமான, அரசியல் நகர்வுகளுக்கும், மூன்றாந்தர தலைமைத்துவ, அபிலாஷை களுக்கும் எல்லாவற்றிற்கும் மேலாக கம்பீரமற்ற தலைமைத்துவத் திற்கும் மக்கள் கொடுத்த வெறுப்புடன் கூடிய புறந்தள்ளலே கூட்டமைப்பு சந்தித்த பின்னடை வுக்குக் காரணம். இந்தத் தோல்விக்கான - பின்னடைவுக்கான முழுப்பொறுப்பையும் கூட்டமைப்பில் தற்போது பங்காளிகளாக இயங்கும் தமிழரசுக்கட்சி, ரெலோ, புளொட் ஆகிய அனைத்துக் கட்சிகளின் தலைவர்களுமே ஏற்க வேண்டும். மூன்று பங்காளிக் கட்சிகள் பெயருக்கு இருந்தாலும் , தமிழரசுக்கட்சியின் மேலாதிக்கமானது ஏனைய கட்சிகளைத் தீர்மானமெடுக்கும் விடயங்களில் புறந்தள்ளிவிட்டு சுயாதீனமாகத் தீர்மானங்களையும், முடிவுகளையும் எடுப்பதும், அறிக்கைவிடுவதும், கொள்கைப் பிரகடனங்களை வெளியிடுவதுமாகத் தன்னிச்சையாகச் செயற்பட்டதால் ஏற்பட்ட சர்வாதிகாரச் செயற்பாடும் கூட்டமைப்பை மக்களிடம் இருந்து அந்நியப்படுத்தியது என்பதும் வெளிப்படை.

தமிழரசுக்கட்சிக்குள் இடையில் வந்து இணைந்து செயற்படத் தொடங்கியவரான சுமந்திரன் உள்நுழைவின் ஆரம்பம் தொடக்கமே தமிழரசுக் கட்சிக்குள்ளும் கூட்டமைப்புக்குள்ளும் குழப்பவிதைகள் தூவப்பட்டு விட்டது. அவரது பேச்சாளர் என்ற பதவியை பயன்படுத்திக் கூட்டமைப்பின் பங்காளிகளுடன் கருத்துப் பரிமாற்றம் செய்யாமல் எல்லாவிடயத்திலும் தன்னிச்சையாகவே கருத்து வெளியீடு செய்யத் தொடங்கியமையும், அதற்குக் கூட்டமைப்புத் தலைவர் அங்கீகாரமும், ஆசீர்வாதமும் வழங்கியமையும், அதனைத் தட்டிக் கேட்கத் துணிச்சலின்றிப் பங்காளிக் கட்சித் தலைவர்கள் ஒதுங்கி நின்றமையும் கூட்டமைப்பின் கட்டமைப்பு “கூடாத” கட்டமைப்பாக விரிசல் கொள்ள வழி வகுத்ததும் நிஜமே…

கூட்டமைப்பு கூட்டமைப்பாக அல்லாது வெறுமனே சம்பந்தனின் கட்டுப்பாட்டுக் குள் சுமந்திரனின் நெறிப்படுத்தலுடன் இயங்கும், மாவையாரை ஒதுக்கி வைத்த வெறும் தமிழரசுக் கட்சியாக மட்டுமே இயங்கியதும் நிஜமே…

ஆகக் கூட்டமைப்பு ஒரு வலுவான கட்டமைப்பாக இயங்காமல் உடைந்து போனமைக்கும் இப்போது நடைபெற்ற தேர்தலில் மக்கள் ஆதரவைப் பெறாமல் பின்னடைவைச் சந்தித்தமைக்கும், கூட்டமைப்புத் தலைவர்களின் தமிழ் தேசியத்திற்கு முரணான போக்கும், மக்களின் உரிமைசார் விடயங்கள் அவர்கள் காட்டிய மெத்தனப் போக்கும் எப்படியோ தேர்தலில் விடுதலைப் புலிகளின் அர்ப்பணிப்புடன் கூடிய தியாகத்தையும், தலைவர் உருவாக்கிய அணி என்ற மக்களின் எண்ணப்பிடிப்பையும் முதலீடாக வைத்து அதிக உறுப்பினர்களை வெற்றி பெற்றுவிடலாம் என்ற அபத்தமான நம்பிக்கையுமே பிரதான காரணமாகும்.

தமிழ்த்தேசிய உணர்வாளர்கள் விடுதலைப்புலிகளையும், அதன் ஆளுமைமிக்க தலைமையையும் மதித்தாக்கிறார்கள், கௌரவிக்க விரும்புகிறார்கள் என்பதில் இருவேறு கருத்துக்கள் கிடையாது. புலிகள் தமிழ் மக்களின் ஆத்மாவோடு ஒன்றறக் கலந்தவர்கள் அவர்களைத் தேர்தல் பிரசாரத்திற்கு பயன்படுத்திவரும் கூட்டமைப்பினரின் கீழ்த்தரமான தந்திரோபாயத்தை விரும்பவில்லை. அதனை அவர்கள் கூட்டமைப்புக் கட்சித்தலைமைகளின் இயலாமையின் வெளிப்பாடாகவும் - சுயநலம் கருதிய செயற்பாடாகவுமே இம்முறை இனங்கண்டு கொண்டமையே கூட்டமைப்பினரின் தேர்தல் பின்னடைவின் முக்கிய காரணம்.

இம்முறை ஒரு லட்சத்திற்கும் அதிகமான வாக்குகளைப் பெறுவேன். எனச் சூளுரைத்த சுமந்திரனும், 20 வரையிலான ஆசங்களை வெல்வோம் எனப் பிரகடனம் செய்த சம்பந்தனுக்கும் மக்கள் தாங்கள் இளித்தவாயர்கள் அல்லஉ என்பதைக் காட்டிவிட்டார்கள். இதிலிருந்தாவது கூட்டமைப்பில் எஞ்சியுள்ள தலைமைகள் பாடம் கற்காவிடின் இனிவரும் தேர்தல் இவர்கள் முற்றிலும் விலாசமற்றவர்களாகி விடுவார்கள். இல்லை.! இல்லை.! மக்களே அவர்களை முகவரி அற்ற அரசியல்வாதிகளாக்கி விடுவார்கள்.

சம்பந்தரால் அவரது எதிர்பார்ப்பின் அரைவாசியை எட்டிப் பிடிப்பதே அசுர சாதனையாகிவிட்டது. சுமந்திரன் தன்னிருப்பை தக்க வைத்துக் கொள்ள மேற்கொண்டதாக கூறப்படும் குயுக்திகரமான நடவடிக்கைகள் இன்னமும் கடும் விமர்சனத்துக்கும், கண்டனத்துக்கும் உள்ளாகி வருகின்றது. மாவையாரின் தோல்வி தமிழரசுக் கட்சியின் அஸ்தமனக் குறியீடா? தெரியவில்லை!

துரைராசசிங்கம் மக்களால் நிராகரிக்கப்படக் காரணம் என்ன? சிறிதரனின் வாக்குவங்கி முன்னரைவிடப் பெரும் சரிவைக் காண ஏதுகாரணம். ஊடகப் போராளியாக அறிக்கையிட்டுத் திரிந்த “சரா” அவர்கள் இவ்வளவு பெரிய பிரசார உத்திகளைக் கையாண்டும் கதிரையை இழந்ததற்கு காரணமென்ன?

சில அநாமதேய அரசியல்வாதிகளும், விமர்சகர்களும், ஆன்மீக அரசியல் ஆய்வ ளார்க ளாக இனங்காட்ட முயலும் காவியுடைப் பிரசாரகர்களும் கூறுவதுபோல் தமிழ் தேசிய நீக்க அரசியலுக்கு மக்கள் திசைமாறத் தொடங்கிவிட்டார்கள் என்பதல்ல, தமிழ் தேசியம் என்று கூறிக் கொண்டு, விதேசிய அபிலாஷைகளுக்கு முண்டு கொடுத்து, ஆதரவுத் தளம் உருவாக்கச் சலுகை அரசியலுக்குள் சறுக்கி விழுந்த தமிழ்த் தேசிய கூட்டமைப்பினரை இனம் கண்டு நிராகரிக்க மக்கள் துணிந்தமையே காரணமாகும்.

எனவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர், குறிப்பாக இதன் தலையாய கட்சியான தமிழரசுக் கட்சியின் சிரேஷ்ட தலைமைகளான, மாவை சேனாதிராசா, சம்பந்தர், சுமந்திரன், சிறிதரன், துரைராசசிங்கம், போன்றவர்கள் எங்காவது ஒரு மூலையில் போயமர்ந்து தாம் தமிழ் மக்களுக்கும், தமிழ்த் தேசியத்திற்கும், உரிமைப் போரில் உயிர்நீத்த மாவீரச் செல்வங்களுக்கும் செய்த வரலாற்றுத் தவறுகளை இரைமீட்டுப் பார்ப்பது, அவர்கள் தாங்களே தங்களது அசிங்கமான பக்கங்களை இனங் கண்டு தலைகுனியப் போதுமானது.

எல்லாவற்றுக்கும் மேலாக விடுதலைப் போராட்ட காலத்தில் தமிழ் உணர்வாளர்களால் மட்டுமல்ல, ஒட்டுமொத்தத் தமிழ் மக்களாலுமே போராட்டத்தைக் காட்டிக்கொடுக்கும் பன்முகப்பட்ட செயற்பாடுகளில் ஈடுபட்டு, துரோகச் செயல் புரிபவர்களாக அடையாளப்படுத்தப்பட்டவர்களை மன்னித்து- ஒருங்கிணைத்து - கூட்டமைப்பை உருவாக்கி, அரசியலில் இனியாவது தமிழ்த் தேசியத்திற்கு உதவுவார்கள் என்று நம்பி, அரசியல் பணியை, பொறுப்பை வழங்கி, புது முகவரியையும் வழங்கிய தலைவர் பிரபாகரனுக்கு செய்த நம்பிக்கை துரோகத்திற்கு என்ன பிராயச்சித்தம் செய்யப் போகின்றனர்?

மக்கள் எதிர்பார்ப்பது கூட்டமைப்பின் பெயரால் இனியும் இவர்கள் தமிழ்த் தேசிய நீக்க அரசியலைச் செய்யாது, ஆளும் அதிகாரவர்க்கத்தின் அரசியல் அபிலாஷைகளுக்கு முண்டு கொடுக்கும் - உங்கள் சுயநல தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதை தேவையான அரசியலில் வெளிப்படையாகவே செய்யுங்கள் என்பதைத்தான். மாறாக…. வரலாற்றில் காட்டிக் கொடுப்பவர்களினதும், கூட்டிக் கொடுப்பவர்களினதும் பட்டியலில் உங்கள் பெயரை அழுத்தமாகப் பதித்துக் கொள்ள எவரும் விரும்புவார்களேயானால் அதற்கு மக்கள் என்ன செய்ய முடியும்?????



# கூட்டமைப்பைக் கைவிட்டுவிட்டதால்... தமது அடிப்படைக் கோரிக்கைகளையும் கைவிட்டுவிட்டார்களா? தமிழ் மக்கள்...!

சிலம்பு

தமிழ்த் தேசியக் கூட்டமைப் பைப் விடுதலைப் புலிகளால் உருவாக்கப்பட்டுத் தமிழ்த் தேசியப் பாதையில் பயணிக்கத் தொடங்கியபொழுது, இருபத்திரண்டு நாடாளுமன்ற உறுப்பினர் களை பெற்றது.ஆனால் 2009 க்குப் பின்னரான காலப்பகுதியில் உறுப்பினர்களின் எண்ணிக்கை குறைவடைந்து குறைவடைந்து, இன்று பத்து நாடாளுமன்ற உறுப்பினர்களாக மெலிந்து விட்டது.

இவ்வாறு குறைந்ததனால் தமிழ் மக்கள் கூட்டமைப்பின் சமஷ்டிக் கொள்கையைக் கைவிட்டு விட்டார்கள் என்று தென்னிலங்கை அரசியல்வாதிகள் கூறி வருகிறார்கள். இது ஏற்புடைய கூற்றா? அவர்கள் சொல்வதுபோல் தமிழ் மக்கள் சலிப்படைந்து விட்டார்களா ? தாயகம் தேசியம் சுயநிர்ணயம் என்பனவற்றைக் கைவிட்டு விட்டார்களா? அவர்கள் சொல்வதைப் பார்த்தால் இப்படித்தான் கேட்கத் தோன்றுகிறது.

கூட்டமைப்புத் தோற்றம் பெற்றபோது அல்லது கூட்டமைப்பை விடுதலைப் புலிகள் உருவாக்கியபோது இருந்த நிலைமை, போர் மௌனிக்கப்பட்டதன் பின்னர் முற்றிலும் மாறித்தான் போய்விட்டது. கூட்டமைப்பின் கடிவாளம் கைமாறித் தவறானவர்கள் வசம் சென்று விட்டது. அதனால் கூட்டமைப்பு எதற்காகத் தொடங்கப்பட்டதோ, அதற்கு முற்றிலும் எதிர்த் திசையில் பயணிக்கத் தொடங்கி விட்டது. கூட்டமைப்புக்குள் புதியமுகங்களான சுமந்திரன், சிறிதரன் போன்றோர் வந்து சேர்ந்தனர். இவர்கள் இத்தனை காலமும் எங்கிருந்தார்கள்? தமிழினத்தின் உரிமைகள் பற்றிய என்ன நிலைப்பாட்டைக் கொண்டிருந்தார்கள்? என்பது பற்றி எவருக்கும் தெரியாத நிலையிலேயே அவர்கள் கூட்டமைப்புக்குள் நுழைந்தார்கள். அவர்கள் வந்தபின்னர் தான் கூட்டமைப்பு தேயத் தொடங்கியது. அத்தேய்மானத்தின் விளைவே இன்று கூட்டமைப்புப் பத்து நாடாளுமன்ற உறுப்பினர்களை மட்டுமே பெற வழிசமைத்திருக்கிறது.

கூட்டமைப்பின் மூத்த வாக்காளர்களைப் பொறுத்தவரை, கூட்டமைப்பை விடுதலைப் புலிகள் கொண்டு வந்தார்கள் என்பதிலும், தமிழரசுக்கட்சி என்பது தந்தை செல்வாவின் கட்சி என்பதிலும், வீட்டுச் சின்னம் தமிழ் மக்களின் சின்னம் என்பதிலும் இன்னமும் நம்பிக்கை கொண்டுள்ளார்கள். அதுவே கூட்டமைப்பு இன்று கூடப் பத்து உறுப்பினர்களைப் பெற உதவியுள்ளது.இந்தப் பத்தும் இன்னமும் குறைந்திருக்க வழி



சுடர் :35 கதிர் :253 ஆடி 25ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை 09 ஓகஸ்ட் 2020 வள்ளுவர் ஆண்டு 2051

முன்னணிக்கு கிடைத்த தேசியப் பட் டியல் ஆசனத்தை. அந் 22

**புலிகளின் கொள்கைகளையே தமிழ் மக்கள் தோற்கடித்தனர்**

கூட்டமைப்பின் பின்னடைவு பற்றி மஹிந்த அணி கொக்கரிப்பு

யாழ்ப்பாணம், ஓகஸ்ட் 9

தமிழீழ விடுதலைப் புலிகளின் கொள்கைகளுடன் செயற்படும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரை வடக்கு கிழக்கிலுள்ள பெரும்பாலான தமிழ் மக்கள் நிராகரித்துள்ளார்கள். கூட்டமைப்பை நிராகரித்த தமிழ் மக்களுக்கு நாம் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம். இவ்வாறு மஹிந்த அணியில் நாடாளுமன்றத்துக்கு தெரிவாகியுள்ள விமல் வீரவன்ச மற்றும் உதய கம்பன்பில ஆகியோர் தெரிவித்துள்ளனர். 22

**பெண் சாவு**

கடன் சுமை காரணமாம்

யாழ்ப்பாணம், ஓக. 9

ஊரெழுவைச் சேர்ந்த ஒரு பிள்ளையின் தாயான சுரேந்திரதாசன் மேரி மரிய ரீட்டா என்ற பெண், தவறான முடிவு எடுத்து உயிரை மாய்க்க முற்பட்ட நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பயனின்றி உயிரிழந்துள்ளார். கணவனை இழந்த நிலையில் இவர் 22

ஏ.எல். பரீட்சை மீள் மதிப்பீடு

இருந்தது. எப்படி? கூட்டமைப்புத் தனது பாதையை முற்றாகக் கைவிட்டு விட்டது என்பதை மக்களிடம் கொண்டு செல்ல மற்றத் தரப்பினர் தவறி விட்டதே அதற்குரிய காரணம் எனலாம். ஒழுங்கான கட்டமைப்பு, கட்சிக் கிளைகள் இருந்திருந்தால் கூட்டமைப்பின் உண்மையான தோற்றத்தை மக்களிடம் விளக்கியிருக்க முடியும். அது ஒரு பக்கம் என்றால் இன்னொரு பக்கம் கூட்டமைப்புக்கு எதிராகத் திரும்பியுள்ள மக்களின் வாக்குகள் ஒன்றாக முன்னணிக்குச் சென்று விடக் கூடாது என்பதில் அயல் உறவுகள் கொண்டிருந்த ஆர்வம். முன்னணியின் வெற்றி என்பது தடுக்கப்பட வேண்டும் என்ற ஒரே ஒரு காரணத்தினால் தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி எனப்படும் ஈபிஆர்எல்எப் சுரேஷ் அணியைப் பலப்படுத்த அது விரும்பியது. அதனால் தான் விக்கினேஸ்வரனை அதனுடன் இணைத்து, மாகாணசபைத் தேர்தலில் ஒருலட்சத்து முப்பதினாயிரத்துக்கும் அதிகமான வாக்குகளைப் பெற்ற விக்கினேஸ்வரனையும், எண்பத்தையாயிரம் வாக்குகள் பெற்ற அனந்தியையும் வைத்து சுரேஷ் பிரேமச்சந்திரனை வளர்த்து விடலாம் என்ற நினைப்புத் தவறாகி விட்டது. கூட்டமைப்புக்கு எதிரான வாக்குகளைப் பிரித்துச் சிதறடித்ததால் தான் கூட்டமைப்புப் பத்துப் பேரைப் பெற முடிந்தது. இல்லாவிடில் அவர்களுக்கு மேலும் குறைவான உறுப்பினர்களே கிடைத்திருக்கும்.

கூட்டமைப்பின் வாக்கு வீதம் குறைந்ததற்கு தேசியம், தாயகம் , சுயநிர்ணயம் என்பனவற்றில் மக்களின் கவனம் இல்லாமல் போய்விட்டது என்று தென்னிலைகைத் தரப்பினர் கூறுவது தவறானதாகும். கூட்டமைப்பிற்குள் புதிதாக நுழைந்தவர்கள் புலி நீக்க அரசியலை முன்னெடுத்ததுடன் செல்வாவின் பாதையையும் மறந்து மக்களைத் தவறான பாதைக்கு

அழைத்து சென்றதே முக்கிய காரணம் எனலாம்.

யுத்தம் மௌனிக்கப்பட்டதன் பின்பு பத்து ஆண்டுகளாக நாடாளுமன்றப் பதவிகளில் இருந்த கூட்டமைப்பு என்ன செய்தது? ரணிலி ன் ஆட்சியைக் காப்பாற்றுவதற்கும். ராஜபக்சக்கள் ஆட்சிக்கு வரக்கூடாது என்பதற்காகவும் மைத்திரிபால சிறிசேனாவை ஆட்சியில் இருத்தி, அமெரிக்க இந்திய விசுவாசிகளாகச் செயற்பட்டனரே அல்லாது வேறு எதனையும் தமிழ் இனத்திற்காகச் செய்தது கிடையாது.ஜநாவிற்குச் சென்று இலங்கை அரசைக் காப்பாற்றினார்கள்.இனப்படுகொலைக் குற்றஞ்சாட்டிலிருந்து அவர்களைக் காப்பாற்றினார்கள். போர்க்கு குற்ற சர்வதேச விசாரணையில் இருந்து காப்பாற்றினார்கள். இவை தான் கூட்டமைப்பின் மேல் தமிழ் மக்கள் வெறுப்படைந்ததும், அவர்களுக்கு வாக்களிக்காமல் விட்டதற்குமுரிய காரணங்களாகும். ஆனால் தமிழ் மக்கள் கூட்டமைப்பிற்கு வாக்களிக்காது விட்டது புதிய பாதைக்கு மக்கள் செல்லத் தயாராகி விட்டார்கள் என்பதைக் காட்டுவதாகத் தென்னிலங்கைத் தரப்பு எண்ணுவதைத் தவறான கணிப்பாகவே கருத முடியும்.

இதே நேரம் கூட்டமைப்புத் தனது தோல்வியை ஏற்றுக்கொள்ளும் மன நிலைக்கு வர மறுக்கிறது.வெற்றி பெற்ற மற்றக் கட்சிகளைத் தங்களுடன் சேர்ந்து பயணிக்க வருமாறு அழைப்பு விடுக்கிறார்கள். கூட்டமைப்பின் பாதை தவறானது ,கூட்டமைப்பு ஒற்றை ஆட்சியை ஏற்றுக்கொண்டுள்ளது,இனப்படுகொலை நடந்தது என்பதற்கு ஆதாரம் இல்லை என்கிறது. போர்க்குற்ற விசாரணை முடிவடைந்து விட்டது என்றுகூறுகிறது காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளை ஏமாற்ற காணாமல் போனோர் அலுவலகம் என்ற கண்துடைப்பு

நாடகம் ஆடுகிறது அரசியல் கைதிகள் விடயத்தில் போலி நாடகமாடி ஏமாற்றுவது,என்றவாறு அடுக்கிக் கொண்டே போகக் கூடியளவு ஏமாற்று வேலைகளைச் செய்து அயல் நாட்டின் விருப்பத்துக்கு ஏற்ப தமிழ் மக்களை ஏமாற்றி வருகிறது என்று கூறும் கட்சிகள் இவர்களது அழைப்பை ஏற்பார்களா? கூட்டமைப்பின் மேற்கூறப்பட்ட செயல்களால் தான் மக்கள் விழிப்படைந்து கூட்டமைப்பின் வீழ்ச்சிக்கு வழிவகுத்தார்கள்.எனவே தமிழ்மக்கள் பாதை மாறி விட்டார்கள் என்று தென்னிலங்கை கூறுவது ஏற்புடையதல்ல.

இதே நேரம் மக்களுக்கு சந்தேகத்தை ஏற்படுத்துகின்றதொரு விடயத்தையும் குறிப்பிடுவது முக்கியம். இங்கு ஆயுதங்கள் மௌனிக்கப்பட்டுவிட்டன. ஒரு சூட்டுச் சந்தம் கூடக் கேட்பதில்லை. ஆளும் கட்சிகளின் உறுப்பினர்களுக்குக்கூடப் பலத்த பாதுகாப்பு இல்லை, டக்ளஸ் தேவானந்தாவுக்கும் இல்லாத பாதுகாப்பு சுமந்திரனுக்கு மட்டும் ஏன் வழங்கப்பட்டுள்ளது என்று மக்கள் கேட்கிறார்கள்? ஆட்சியாளர்கள் மாறினானும் சுமந்திரனுக்குரிய பாதுகாப்புத் தொடர்கிறது. இப்போது முன்னையதிலும் பார்க்கக் கூடிய பாதுகாப்பு எதற்காக ?.அப்படியானால் இந்தச் சுமந்திரன் என்பவர் யார்? எங்கிருந்து இங்கு வந்து அரசியல் செய்கிறார்?.என்று மக்கள் மனதில் கேள்விகள் எழுகின்றன.தன்னைச் சிறப்பு அதிரடிப் படைப்பாதுகாப்புக்குள் வைத்துக் கொண்டு , இராணுவ ஆட்சியை நோக்கி நாடு போகிறது என்கிறாரே அப்படிச் சொல்லும் தகுதி இவருக்கு இருக்கிறதா? தனக்கு சிறப்பு அதிரடிப்படைப் பாது காப்பு வேண்டும் என்கிறாரே! தமிழ் மக்களுக்கான அரசியல் செய்பவருக்குத் தமிழ் மக்களின் முன்பு வர ஏன் இத்தனை பாதுகாப்பு? வாக்குப் பிச்சை கேட்கும்போதும் கூட அதிரடிப்படைப் பாதுகாப்பு என்றால்..! இதன் அர்த்தம்



என்ன என்று மக்கள் வினா எழுப்புகிறார்கள் மக்களுக்காக உழைப்பவர்களுக்கு மக்கள் முன் வர எதற்குப் பலத்த பாதுகாப்பு. மக்கள் தான் இவர்கள் எதிரிகள் என்றால் ?? இவர் உண்மையில் யார்?எதற்காக இவரைக் கொண்டுவந்தார்கள் என்று மக்கள் ஐயப்படுவது தவறல்ல என்று இப்போது புரிகிறதா?

கட்சியின் பேச்சாளர் என்று சொல்லிக்கொண்டு கூட்டமைப்பு என்பது விடுதலைப் புலிகளால் உருவாக்கப்படவில்லை என்று கூறுவதும், விடுதலைப் புலிகளின் போராட்டத்தை இழிவுபடுத்திக் கருத்துக் கூறுவதும், மக்களைக் கூட்டமைப்பை விட்டு விலகிச் செல்ல வைத்துள்ளது.அது மட்டுமல்ல கட்சியின் பேச்சாளர் கூறும் கருத்து என்பது கட்சியின் உத்தியோகபூர்வ கருத்தாகும். ஆனால் சுமந்திரன் கூறிய கருத்துகளை அவரது தனிபட்ட கருத்து என்று கூறித் தலைமை தப்பி ஓடுவது மக்களுக்கு விரக்தியை ஏற்படுத்தியுள்ளது.எனவே தான் மக்கள் தங்களின் வெறுப்பைக் கூட்டமைப்பின் மேல் காட்டினார்களேயன்றி.இனத்தின் உரிமைகளை தமிழ் மக்கள் விட்டுவிட்டார்கள் என்று கருதுவது பொருத்தமல்ல.

தேர்தல் கொடுத்த பாடத்தின் பின்னராவது இவர்கள் திருந்துவார்கள் என்று எதிர்பாப்பது தவறானது என்பதைத் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் தெரிவில் அவர்கள் காட்டியுள்ளார்கள். தனி ஒருவர் அல்லது இருவரின் விருப்பமே அங்கு நிறைவேற்றப்பட்டிருக்கிறது. இதைப் பற்றிக் கேட்டால் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பொறுப்புள்ள தலைவரான சம்பந்தன் தனக்கு இதுபற்றி எதுவும் தெரியாது என்று கூறுகிறார். செயலாளரைக் கேட்டுத் தெரிந்து கொள்ளும்படி சொல்கிறார்.இவ்வாறு பொறுப்பற்ற தட்டிக்கழிப்பு என்றுமே கூட்டமைப்புக்கு நல்லதல்ல.அது தான் தமது வீழ்ச்சிக்குக் காரணமென விளங்கிக் கொள்வார்களா கூட்டமைப்பினர்????

இனிக் கூட்டமைப்புடன் தமிழர் பிரச்சினைபற்றிப் பேசப்போவதில்லை என்று பிரதமர் கூறியுள்ளார் . கூட்டமைப்புடன் டீல் இல்லை என்று பசில் ராஜபக்சா கூறிவிட்டார். ஆனால் சம்பந்தனோ "தமிழ் மக்களின் பிரதிநிதிகள் தாங்கள் தான் என்றும், தாங்கள் ஆட்சியுடன் இணைந்து செயற்படத் தயாராக உள்ளதாகவும், அதே நேரம் தமிழ்த் தேசியத்தைக் கொண்ட இதர கட்சிகளுடனும் இணைந்து பயணிக்கத் தயாராக இருப்பதாகவும்" சொல்லிவருகிறார். இவற்றை வைத்து" ஒரு ஒழுங்கான கொள்கையற்று, இரண்டும் கெட்டான் நிலையில் கூட்டமைப்பு இருக்கிறது" என்று இலகுவாகச் சொல்லிவிடலாம். அது மட்டுமல்ல பதவிகளுக்கான போட்டிகளும் கட்சிக்குள் மும்முரமாக நடை பெற்றுக்கொண்டே இருக்கிறது.. எனவே கட்சி மீது கொண்ட வெறுப்புணர்வை வைத்துக் கொண்டு தமிழ் மக்கள் கூட்டமைப்பை நிராகரித்துதான் உண்மை என்றதை விளங்காது , தமிழ் மக்கள் சுயாட்சி, தாயகம், தேசியம் என்பனவற்றை கை விட்டு விட்டார்கள் என்று தென்னிலங்கை எண்ணுவது தவறான கணிப்பாகவே இருக்கும்.

---

தீபம்




செய்திறதையும் கேட்டுக் கேள்வியில்லாமல் செய்துபோட்டு சேர்ந்து "பயணிக்கலாம் வாருங்கோ" எண்டு கூப்பிடுறதுக்கும் ஒரு மனத்துணிவு வேணும். மனச்சாட்சி இல்லாவனிட்டைதான் அந்தத் துணிவு வரும்.அப்ப மனச்சாட்சி அல்லாதவன் எப்பிடி மக்களுக்குத் தலைவனாக இருந்திருக்கலாம்? சும்மா ஒரு வாய் வெத்திலையைப் போட்டுக்கொண்டு இருந்து யோசிச்சுப் பாருங்கோவன். எல்லாம் வெளிக்கும். "சேர்ந்து பயணிக்கலாம் வாருங்கோ" கேட்க நல்லாத்தானிக்கு. ஆனால் கேட்டாப் பிறகு, இருந்து யோசிக்கேக்கை நெஞ்சுக்கை குத்துது. தோல்விக்குப் பிறகு உப்பிடிக் கேக்க வேணும் எண்டு யோசிச்சதை,முதலே யோசிச்சு அரசாங்கத்தோடை நல்லிணக்கத்துக் குப் போக யோ சிக்கிறம். போகலாமோ? அப்பிடிப் போய் மிண்டு குடுக்கிறது நல்லதோ? அது தமிழ் மக்கள் இதுவரை வைச்சிருக்கிற கொள்கைகளைப் பாதிக்காதோ? எண்டு பலதைக் கேட்டிக்க வேணும்.இது சேரும்வரை சேந்திருந்து உல்லாசமா எல்லாச் சிலு ககளையும் அனுபவிச்சுப்போட்டு., இப்ப சனம் செருப்பாலை அடிச்சமாதிரி மறுமொழி கொடுத்தாப்பிறகுதான் "சேர்ந்து பயணிக்கலாம் வாருங்கோ"எண்டு கூப்பிடுகினம். பல காலம் சனத்தின்ரை விருப்பம் "சேர்ந்து பயணியுங்கோ" எண்டது தான். அப்பவே சனம் சொன்னமாதிரி சேர்ந்து பணயிச்சிருந்தால் உந்த வில்லங்கம் ஒண்டும் வந்திராது. இது எல்லாம் அவர் ஒருதர் தான் நினைச்ச மாதிரி முடிவு எடுக்கிறது. தான் நினைச்சதைச் சொல்லிப் போட்டு சனம் நல்லது எண்டால் அது கட்சி சொன்னது எண்டு சொல்லுறது. பிழை எண்டு கண்டால் "அது என்ரை கருத்து" எண்டு கதைவிட்டுச் சமாளிக்கிறது. உப்பிடிப் பல சந்தர்பங்களிலை விட்ட கதை எல்லாத்தையும் சனம் நெஞ்சிலை வைச்சிருந்துதான் திருப்பி ஒரு நெடுங் கதையா ஒரு கதையைச் சொல்லி இருக்கினம். இனி வீட்டை இருந்து ஆற அமர வாசியுங்கோவன். வீட்டைச் சின்னமாக் கொண்ட நீங்கள், அந்த வீட்டைப் பற்றியும், வீடுகளைப் பற்றியும் சிந்திக்காமல், தங்களுக்கை இருந்த கனவு வீட்டைக் கட்ட வெளிக்கிட்டவை எல்லே. இப்ப சனம் அவைக்குச் சமாதி கட்டிவிட்டினம் எண்டுதான் சொல்ல வேணும். எத்தினை நாளைக்குத் தான் ஏமாத்தலாம். அப்பிடி ஏமாத்திறவையின்ரை சுய ரூபம் வெளியாலை தெரிய வரேக்கை என்ன நடக்கும் எண்டதை போன தேர்தல் காட்டிக் குடுத்திட்டுது. இது ஒரு நல்ல பாடம் எல்லே? தமிழசுக் கட்சியை ஏன் செல்வநாயகத்தான் துவங் கினவர்? ஜி.ஜி யோடை கோவிச்சுக் கொண்டே துவங்கினவர்? இல்லை, அவர் கொள்ளை டிப்படையிலை, ஜி.ஜி யின்ரை போக்குப் பிடிக்காமல் சனத்தின்ரை நன்மைக்காகத் தன்னட்டை இருந்த சொத்தெல்லாத்தையும் வித்து அரசியல் செய்தபடி போய் சேர்ந்திட்டார். போயேக்கை அவர் சும்மா சனத்தைக் கைவிட்டிட்டுப் போகேல்லை. "இனித் தமிழ் சனத்தைக் கடவுள்தான் காக்க வேணும்" எண்டு சொல்லிச் சனத்தின்ரை கையளைக் கடவுளிட்டைப் பிடிச்சுக் குடுத்திட்டுத் தீர்வையும் கடவுளிட்டை விட்டிட்டுத்தான் போயிருக்கிறார் எண்டுதான் நான் நினைக்கிறன். அப்ப கடவுள் சும்மா விடுவரோ? அவர் தன்னை விளையாட்டைக் காட்டத் துவங்கிவிட்டார் எண்டு தெரியுது!! அவர் சனத்தைக் காப்பாற்ற வேணும் எண்டு எடுத்த அதிரடி நடவடிக்கையை விளங்காமல், சிங்கள அரசியல் வாதியள் "தமிழ் தேசிய கொள்ளை" தோத்துப் போட்டுது. தமிழ் மக்கள் அதைத் தோற்கடிச்சுப் போட்டினம் எண்டெல்லே கொக்கரிக்கினம். சரி அவை சொன்னமாதிரி எடுத்துக் கொள்ளுவம். நாங்கள் தோற்றுப் போனம். எங்கடை கொள்கைகள் தோத்துப் போச்சுது. அவையள் 3 இல் 2 ஆக வந்திட்டினம். இனித்தான் முன்னமாதிரி இல்லாமல் பௌத்தத்தையும், சிங்களச் சனத்தையம் தூக்கி நிறுத்தப் போகினம் எண்டு வைச்சுக் கொள்ளுவம். 3 இல் 2 வந்திட்டுது. இனித் தாங்கள் நினைச்ச மாதிரி எல்லாம் ஆடலாம் எண்டு அவை கனவு கண்டால் அதுக்கு நான் பொறுப்பில்லை. இதந்ப் பெரிய சீனாவே எல்லாம் பவரையும் தன்ரை கையுக்கை வைச்சுக் கொண்டு ஒண்டும் செய்யேலாமைத் திண்டாடேக்கை, இவை என்ன? தேர்தலி தங்களுக்கு வாக்களிச்ச சிங்களச் சனத்தைத் திருப்திப்படுத்த வேணுமெண்டால் அவை கொஞ்சத் தமிழற்றை காணியளை அபகரிக்கலாம். இரண்டு, மூண்டு விகாரையளைத் தமிழ் பகுதியிலை கட்டலாம். புலி வந்திட்டுது எண்டு சொல்லி ஆமியைப் போட்டுத் தமிழரை வெருட்டலாம். இன்னும் தோவது செய்யலாம். ஆனால் அவையின்ரை புலுடா முந்தி மாதிரி வாய்க்காது. ஏனெண்டால், 13 இன் படி திருகோணமலை எண்ணைக் குதத்தை குத்தைக்கு எடுத்து வைச்சிருக்கிற இந்தியா இப்ப அதை விட்டுக் குடு க்கிற மாதிரி இல்லை. சீனாக்காரன் அதை இந்தியாட்டைப் பறிச்சுத் தா.. தா.. எண்டு நாண்டு கொண்டு நிக்கிறான். இலங்கை இந்தியாட்டை அது பற்றிக் கேக்கப்போனால், தலைவர் சொன்ன மாதிரி "நடக்கிறதைக் கதையுங்கோ" எண்டு இந்தியா சொல்லும். அப்ப என்ன நடக்கும் எண்டு நிளைக்கிறியள்.

அப்ப 3 இல் 2 கிடைச்சதாலை நித்திரை கொள்ளாமல் இருக்கப் போறது ஆர்?வடிவாக் காலை நீட்டக் கொண்டு நித்திரைகொள்ளாமல் நாயாப் பேயா அலையைப் போறது ஆர்? அதைத் திசை தீரப்பத் தமிழரோட சொறியிறதைத் தவிர வேறை என்ன செய்யலாம்?

எல்லாம் ஆப்பிளுத்த குரங்கின்ரை கதை தான்.

# தமிழரசுக் கட்சி உடையுமா? உடைக்கப்படுமா?

- பரணி -




அன்றைய தமிழரசுக்கட்சித் தலைவர்களாலும் , மக்களாலும் சிறுகச் சிறுகக் கட்டி எழுப்பப்பட்டு உயர்ந்து நின்ற தமிழரசுக்கட்சி உடைந்து போகுமா? உடைக்கப் படுகிறதா ? என்ற ஓர் அச்ச உணர்வு மக்களிடையே எழுந்துள்ளது.இது தேர்தலுக்கு முன்னரே இலைமறை காயாக நடந்துகொண்டிருந்த சில நிகழ்வுகளின் அடிப்படையில் மக்கள் எழுப்பிய வினாவாக இருந்தது. ஆனால் தேர்தல் முடிந்த உடனே சசிகலாவின் தேர்தல் வெற்றி தோல்வி பற்றிய கருத்துகள் மேலோங்கி இருந்த வேளையில் அதனைத் திசை திருப்புவதற்காகக் கையில் எடுத்தது தான் தமிழரசுக்கட்சியின் தலைமையைப் பற்றிக் கிளப்பப்பட்ட செய்திகளாகும்.தமிழரசுக் கட்சியின் தலைமைப் பதவியை ஏற்கத் தயார் என்ற சிறிதரனின் கூற்றும் , தமிழரசுக்கட்சியைச் சீர்திருத்தம் செய்யவேண்டிய காலம் வந்து விட்டது என்ற சுமந்திரனின் கூற்றும் இதனைத் தான் உறுதிப்படுத்துகின்றது.

கூட்டமைப்பு என்பது எவ்வாறு தொடங்கப்பட்டதோ அதே நிலையில் தான் இப்போதும் இருக்கிறதா? என்னும் அளவில் தான் இதுவரை காரியங்கள் நடந்து வந்துள்ளன. 2010 இல் இருந்தே தமிழரசுக்கட்சி தான் தான் பெரிய கட்சி என்ற தோரணையிலேயே முடிவுகளை எடுத்து வந்துள்ளது.ஒவ்வொரு முறையும் அவ்வாறு தமிழரசுக்கட்சி இதர பங்காளிகளைக் கலந்து பேசாமல் முடிவுகளை எடுக்கும்போதும், தங்களையும் கேட்டிருக்க வேண்டும். இல்லாவிடில் கடுமையான விளைவுகளைச் சந்திக்க வேண்டி வரும் என்று அறிக்கைகள் வெளியிடும் கூட்டமைப்பின் இதர கட்சிகள் பின்னர் உறங்கி விடுவார்கள். இது தான் பல ஆண்டுகளாகக் கூட்டமைப்புக்குள் இருக்கும் கட்சிகளின் நிலையாகும். கூட்டமைப்புத் தவறாக முடிவெடுத்து விட்டது என்று அறிக்கைவிடும் அக்கட்சிகள் எது தவறு என்று கூறி அறிக்கை விட்டார்களோ! பின்னர் அதனைத் தாங்களும் ஏற்று நடந்துகொள்வார்கள். இப்படியே மக்களை ஏமாற்றி வந்தவைகளே அக்கட்சிகளாகும்..

நடந்து முடிந்த தேர்தலின் பின்னர் அவர்கள் குழப்பத்தில் மூழ்கி உள்ளார்கள்.ஆனால் தமிழரசுக்கட்சிக்குள் பூகம்பம் தோன்றியுள்ளமை என்பது மட்டும் வெளிப்படையாகத் தெரிகிறது.தமிழரசுக் கட்சி தொடங்கி எழுபது ஆண்டுகள் ஆகின்றது. இதுவரை அக்கட்சியில் இவ்வாறான உடைவு அல்லது பிளவு ,ஒருவரை ஒருவர் சதி செய்து கவிழ்க்கும் செயல்கள் என்றுமே இருந்ததில்லை..ஏனென்றால் அன்று இருந்தவர்கள் கட்சியின் கொள்கைகளுக்ககவே கட்சியில் இருந்தார்கள். தங்கள் உழைப்பைக் கட்சிக்காகக் கொடுத்தார்கள்.தந்தை செல்வா மிகப் பெரும் வழக்கறிஞராகத் திகழ்ந்து ஏராளமான காசு உழைத்துத் தேயிலைத்தோட்டத்துக்கு உரிமையாளராகினார். அவ்வளவுக்குச் சட்டத்துறையில் சிறந்து விளங்கியவர் அரசியலுக்கு வந்த பின்னர் தனது தேயிலைத்தோட்டத்தையும் விற்றுத் தனது வருமானத்தையும் கட்சிக்காகக் கொடுத்து கட்சியை வளர்த்தெடுத்தார். தமிழினத்தின் தலைவராகத் திகழ்ந்தவர் கொழும்பில் சாதாரணமான ஒரு வாடகை வீட்டில் தான் வசித்து வந்தவர். இவ்வாறுதான் மற்றத் தமிழரசுத் தலைவர்களும் வாழ்ந்தார்கள். கட்சியை வளர்ப்பதில் ஓர் ஒற்றுமை உணர்வைக் கொண்டிருந்தார்கள்.அப்பொழுது அக்கட்சியில் ஏராளமான வழக்கறிஞர்கள் இருந்தார்கள். அவர்களில் எவரும் எச்சந்தர்ப்பத்திலும் தான் தான் வல்லமை உள்ளவர் என்று கூறிப் பெருமைப்பட்டதில்லை. இப்பொழுது சிலரே சட்டத்துறை சார்ந்து இருப்பதால் தான்தான் வல்லவர் சட்டப்புலமை உள்ளவர் என்று கூறிவருகின்றார் இவர்கள் எப்போது எங்கிருந்து கட்சிக்கு புகுந்தார்களென்பது தெரிந்ததே.

தமிழரசுக்கட்சி ,காங்கிரசு என்பன இணைந்து தமிழர் விடுதலைக் கூட்டணியான பின்னரும் இதே நிலை தான் தொடர்ந்தது.மனிதன் ஒவ்வொருவரும் வெவ்வேறு சிறு சிறு குழுக்களாக வாழ்ந்த காலத்தில் கூட ஒரு தலைமை இருந்ததாகவும் முதலில் அவ்வாறான தலைமை பெண்களிடமே இருந்து பின்னர் தான் ஆண்களுக்குத் தலைமை மாறியதாகவும் கூறுவார்கள். இவ்வாறு வளர்ச்சி அடைந்து வந்தபோது தான் பலசாலிகளான சிலர் வீரத்தைக் காட்டி நின்றதனால் அவர்களைக் கடவுள் என்று மக்கள் நினைத்தனர் என்பதும் ஆய்வாளர்களின் கருத்தாகும். அதே பழைய சிந்தனை இன்று தமிழரசுக்கட்சியில் உள்ள ஒருவர், இருவருக்கு வந்துள்ளதோ என்று எண்ணும் அளவுக்குத்தான் கட்சியின் செயற்பாடுகள் ஒருவரால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.. ஆனால் வெவ்வேறு எண்ணங்கள், கருத்துகள் ஏற்பட்டபோது, பொது நலன் கருதி ஒருமித்த கருத்துருவாக்கம் ஏற்பட்டால் மாத்திரமே இலட்சியங்களை நிறைவேற்ற முடியும். அது தான் கட்சிகளின் ஒற்றுமையைக் கட்டிக்காக்கும் ஒரு வழியாகும். ஒவ்வொருவரும் வெவ்வேறான சிந்தனைக்கு உட்பட்டு வெவ்வேறு கருத்துகளைக் கூறினால் அது சிதறி விடும்.அரசியல் கட்சிகளில் உள்ளவர்கள் தங்கள் கருத்துகளைக் கட்சிக்குள் பகிர்ந்து ஒரு முடிவு எடுப்பதே சிறந்த முறையாகவும், ஒற்றுமைக்கான வழியாகவும் இருக்க முடியும். தமிழரசுக்கட்சியும் இவ்வாறு தான் கட்டி எழுப்பப்பட்டது. அதன் பின்னர் தமிழர் விடுதலைக் கூட்டணியும் அவ்வாறே தொடர்ந்தது.எவரும் ஒருவரைக் கவிழ்க்க வேண்டும் , கட்சியைப் பிடிக்க வேண்டும் என்று கூறியதில்லை. மிகவும் மூத்த தலைவர்கள் மறைந்த பின்னர் ஆனந்தசங்கரியும், சம்பந்தனும் தலைமைப்பதவிக்கு வந்தபோது தான் முதல் பிரச்சினை எழுந்தது.பின்னர் ஆனந்தசங்கரி வெளியேற்றப்படக் கூட்டமைப்பு ஓர் இறுக்கமான அமைப்பாகவே இருந்தது.

2010 இல் சுமந்திரன் கூட்டமைப்புக்கு புகுத்தப்பட்டார். ஐக்கிய தேசியக் கட்சியின் தேசியப்பட்டியலில் இருந்த சுமந்திரன் கூட்டமைப்பின் தேசியப்பட்டியலில் நாடாளுமன்ற உறுப்பினராக உள்நுழைந்தார். ஐதேகவுக்கும் கூட்டமைப்புக்கும் இறுக்கமான உறவை அயல் நாடு உருவாக்கிய நிலையில் சுமந்திரனின் அரசியல் நகர்வுகள் கூட்டமைப்பால் அப்படியே ஏற்றுக்கொள்ளபட்டு வந்தது. கட்சியின் பேச்சாளர் என்ற நிலையில் புலி நீக்க அரசியலையும்,தமிழ்த் தேசிய நீக்க அரசியலையும் அவர் செவ்வனே நிறைவேற்றி வந்தார். சில வேளைகளிலில் அவரது கருத்துகள் அவரின் சொந்தக் கருத்து என்று கூறிமழுப்பிவிட்டு கட்சியில் உள்ள மற்றவர்கள் கடந்து சென்று விடுவார்கள்.சுமந்திரன் இதனால் கட்சிக்குள் தனக்கெனச் சிறிய வட்டத்தையும் உருவாக்கியிருந்தார். இதே நேரம் ஈபிஆர்எல்எப் மூலம் நுழைந்த சிறிதரன் தமிழரசுக்கட்சி உறுப்பினரானார். சுமந்திரனும், சிறிதரனும் சிறிது காலத்துக்கு முன்னர் தான் நெருக்கமாகச் சேர்ந்து செயற்படத்தொடங்கினர் இது தான் தேர்தலுக்குப் பின்னர் தமிழரசுக்கட்சியின் தலைமைப்பதவிக்கான குழப்பத்தை ஏற்படுத்தியுள்ளது. தேர்தல் முடிந்துள்ள நிலையில், கட்சியின் தலைமைப்பதவி பற்றித் தேவையற்ற ஒரு பிரச்சினையை இருவரும் ஏற்படுத்தியுள்ளனர். கட்சியின் பொதுக்குழுவில் எடுக்கப்பட வேண்டிய தேர்தல் தோல்வி பற்றிய ஆய்வைப் பொது வெளியில் வைத்து தலைமையை மாற்றுவது பற்றி பேசியும் , எழுதியும் குழப்பத்தை ஏற்படுத்தினர். தலைமைப்பதவி என்பது மாநில மாநாட்டுடன் தொடர்புடையது. அதைத் தேவையற்ற முறையில் இப்போது கிளப்பி மக்களைக் குழப்பி வருகின்றனர் .இது உண்மையில் தலைமையைக் கைப்பற்றுவதற்கான சதி முயற்சி என்றே கூற முடியும்.இங்கே சுமந்திரனின் ஆதரவாளர்கள் சிலர் இதுவரை காலமும் கஜேந்திரகுமாரைப் பொது வெளியில் கண்டபடி பேசியும் எழுதி வந்தார்கள். சேனாதிராசாவை அதனிலும் கேவலமாகப் பேசியும் எழுதியும் வருவது மிகவும் கவலையான, பண்பாடு குன்றிய செயலாகும். 2010 க்கு முன்னர் இருந்த நடைமுறை யின்படி, தமிழரசுக்கட்சியில் எந்தப் பிரச்சினையானாலும் “தந்தை செல்வா கூறுகிறார் ஏற்றுக் கொள்வோம் என்றோ, நாகநாதன் கூறுகிறார் அதை ஏற்றுக்கொள்வோம் என்றோ ” முடிவெடுத்ததில்லை. தனிநபர் கருத்துகளை வைத்து முடிவுகள் எடுப்பதில்லை. செயற்குழு தனது அதிகாரத்துக்குபட்டுச் சில முடிவுகளை எடுக்கும். ஆனால் முக்கியமான தீர்மானங்களை மத்திய குழு கூடியே எடுக்கும். அப்பொழுது ஏற்படும் வாதப் பிரதி வாதங்கள் சனநாயகத்தில் அக்கட்சி கொண்டிருந்த நம்பிக்கையைக் காட்டி நிற்கும். இது தான். ஜிஜி யை தவிகூட்டணியின் தலைவராக்குவதற்கு செல்வா அழைத்து வந்தார். ஆனால் வட்டுக் கோட்டை த.வி. கூட்டணி மாநாட்டில் பல வாதப் பிரதி வாதங்களின் பின்னரே அவரைத் தலைவராக ஏற்றது மாநாடு. செல்வா அழைத்து வந்துவிட்டாரே என்றில்லாமல் விவாதித்தே அம்முடிவை எடுத்தார்கள். இது ஒரு சான்று தான். இவ்வாறான பல முடிவுகள் தான் சனநாயகக் கட்டமைப்புள்ள கட்சியில் இடம்பெறும். ஆனால் சுமந்திரன் கட்சிக்குள் நுழைந்த பின்னர் அவர் பல முடிவுகளைத் தனியாக எடுத்தபோது மௌனமாகப் பார்த்துக்கொண்டிருந்ததன் பலனே, கட்சியில் வெற்றி பெற்றவர்கள் எண்ணிக்கை இருபத்திரண்டில் இருந்து பத்தாகக் குறைததற்குக் காரணமாகும். இத்தோல்வியைக் கட்சித் தலைமையில் சுமத்திவிட அவர்கள் முயன்றுள்ளனர். தொடக்கத்தில் கூட்டமைப்பு என்றிருந்த போது பெரியகட்சி தமிழரசு என்று கூறிக்கூறி முடிவுகளை ஒருவரே எடுத்து வந்தார். இப்பொழுது தான் அதன் தாக்கம் கட்சியில் உள்ளோருக்குத் தோன்றத் தொடங்கியுள்ளது. தேர்தலுக்குப் பின்னர் சுமந்திரன் அவசர அவசரமாகத் தேசியப்பட்டியல் உறுப்பினரை நியமித்தது தனிநபரின் அதிகாரத்தின் உச்சமாகவே தென்படுகிறது.கூட்டமைப்பின் பங்காளிக்கட்சிகளைப் புறந்தள்ளியது மட்டுமல்ல, தமிழரசுக்கட்சித் தலைமையையும் தூசாக நினைத்துத் தானே முடிவெடுத்துக் கலையரசனை நியமித்திருந்தார். இது கலையரசன் மேல் உள்ள அக்கறையால் மேற்கொள்ளப்பட்டதல்ல. இதை அவர் பின்வரும் இரண்டு நோக்கங்களுடன் செய்துள்ளார். கலையரசனை மாற்ற வேண்டும் என்று கூறினால் அம்பாறையைக் கூட்டமைப்புப் புறக்கணிக்கிறது என்று கூறி ஒரு பிளவை ஏற்படுத்துவது. மற்றது அவ்வாறு இல்லாமல் போகும்போது கிழக்கில் நியமனம் செய்தவர் சுமந்திரன் எனவே அவருக்கே ஆதரவு கொடுப்பது என்று அவர்கள் முடிவெடுத்தால் சேனாதிராசாவை வெளியேற்ற இலகுவாகும் என்பது. இதில் முதலாவதில் அவர் தோற்றுவிட்டார்.

ஏனெனில் அந்த நியமனத்தை அப்படியே பெரிதாக்காமல் முடித்து விட்டார்கள்.இப்போது அடுத்த நடவடிக்கையாக மத்திய குழுவை கூட்டுமாறு கேட்டுள்ளார்கள். இதில் எடுக்கப்படும் முடிவுகளே தமிழரசுக்கட்சி உடையுமா ? உடைக்கப்படுமா ? என்றதை நிர்ணயிக்கும் என்று எதிர்பார்க்கலாம்.

# தமிழர் தேசம் எங்கே நிற்கிறது ? எங்கே போகப்போகிறது? 2

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தடம் மாறி எதிர்மாறான நிலையில் பயணிக்கிறது என்பதை முன்னர் பார்த்திருந்தோம். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தொடங்கப் பட்டதன் நோக்கத்திற்கு முற்றிலும் எதிர் நிலையை எடுத்தது என்பதற்கு அதில் ஆளுமையான தலைமை இல்லை என்பதையே இவை காட்டி நிற்கின்றன. 1977 இல் தமிழர் விடுதலைக் கூட்டணி வட்டுக்கோட்டைத் தீர்மானத்தை, தந்தை செல்வா விட்டுச் சென்ற உயில் என்றும், அதை நிறைவேற்ற என்ன தியாகத்தையும் தமிழர் கூட்டணியினராகிய தாங்கள் செய்வோம் என்றும், தந்தை செல்வாவின் நினைவிடத்தில் நின்று உறுதி மொழி எடுத்துத் தேர்தலில் நின்றவர்கள், பின்னர் அதை நிறைவேற்ற என்ன முயற்சிகளை எடுத்தார்கள்? கூட்டணியினர் அதன் பின்னர் அதை நிறைவேற்ற எந்த முயற்சியும் எடுக்கவில்லை. ஆனால் தமிழ் இளைஞர்கள் அதற்கான உறுதியான முயற்சிகளை மேற்கொண்டார்கள்.அதனால் தான் அவர்கள் ஒரு நிர்வாகக் கட்டமைப்பையே நிறுவி உலகத்தை வியப்படையச் செய்தார்கள்.



இதற்கு முன்னர் நடந்த ஒரு நிகழ்வை இங்கு குறிப்பிட்டே ஆக வேண்டும். தனி நாட்டுக்கு மக்கள் ஆணை பெற்ற கூட்டணி மாவட்ட அபிவிருத்திச் சபைகளை நாடாளுமன்றத்தில் வழி மொழிந்து ஏற்றுக்கொண்டது.இது கட்சிக்கு உள்ளே விரிசலை ஏற்படுத்தியிருந்தது என்பது மட்டுமல்ல , கூட்டணியின் வெற்றிக்காக உழைத்த இளைஞர்களிடையே பெரும் கொந்தளிப்பையும், வெறுப்பையும் ஏற்படுத்தியிருந்தது. மாவட்ட அபிவிருத்திச் சபைகளைப் பற்றிக் கூட்டணியின் மத்திய குழுவின் கூட்டம் யாழ்ப்பணத்தில் கட்சிப் பணிமனையில் நடாத்த முடியாதளவில் இளைஞர்களின் எழுச்சி இருந்தது. அதனால் கோப்பாயில் கதிரவேலுப்பிள்ளையின் பணிமனையிலேயே அக்கூட்டம் நடைபெற்று முடிவு எடுக்கப்பட்டது. அபிவிருத்தியும் , விடுதலையும் ஒன்றாகப் பயணிக்க முடியாது என்பது கதிரவேலுப்பிள்ளையின் கருத்தாக இருந்தது.ஆனால் அமிர்தலிங்கம் இதனை ஏற்றுக்கொள்ள வில்லை. கட்சியில் பிளவு ஏற்படக்கூடாது என்பதால் கட்சியின் முடிவுக்குக் கட்டுப்பட்டுக் கதிரவேலுப்பிள்ளை நாடாளுமன்றத்தில் வாக்களித்தார். அது மட்டுமல்ல இந்தியாவிற்குச் சென்று இந்தியத் தலைவர்களைச் சந்திக்கும் அமிர்தலிங்கம் , "தமிழ் மக்களுக்கு எனத் தனி நாடு வேண்டும்" என்பதை இந்தியத் தலைமையிடம் சரிவரக் கூறாது , இந்தியா சொல்வதையே கேட்டுவிட்டுத் திரும்புகிறார் என்பதும் கதிரவேலுபிள்ளையின் கவலையாக இருந்தது. அமிர்தலிங்கத்திடம் கட்சியின் முக்கிய உறுப்பினர் ஒருவர் இந்தியா தனி நாட்டுக்கோரிக்கையை ஏற்கிறதா? என்று ஒரு வினாவை எழுப்பினார். அதற்கு அமிர்தலிங்கம் கூறிய பதில் மிகவும் ஆச்சரியமாக இருந்தது. வட்டுக்கோட்டையில் தனிநாட்டுக்கான தீர்மானம் நிறைவேற்றிய தந்தை செல்வாவின் நினைவிடத்தில் நின்று தாங்கள் தந்தை செல்வா விட்டுச் சென்ற தனிநாட்டுக்கான உயிலை என்ன தியாகம் செய்தும் நிறைவேற்றுவோம் என்று உறுதிமொழி எடுத்த அமிர்தலிங்கம் , "நோயாளி ஒருவர் வைத்தியரிடம் செல்கின்றார். நோயாளிக்கு மருந்து கொடுத்துச் சுகமாக்குவதா ? அல்லது அறுவைச் சிகிச்சையா? என்பதை டாக்குத்தரே தீர்மானிப்பார். அது போல் தான் இதுவும்" என்று கூறினார். அப்படியானால் தமிழினம் நோயாளி என்றா அவர் கருதுகிறார் ? என்று தான் இளைஞர்கள் நினைத்து வேதனைப்பட்டார்கள்.. அப்பொழுதே இவர்கள் மக்களை ஏமாற்றத் தொடங்கி விட்டார்கள் என்பது தெரிகிறது.ஆனால் இந்தப் பதிலை விரும்பாத கதிரவேலுப்பிள்ளை இந்திரா காந்தியிடம் சென்று தமிழ் மக்களின் நிலையைக் விளக்கமாகக் கூறுவதற்காகக் நேரம் ஒதுக்கித் தருமாறு கேட்டு அதையும் பெற்றுக்கொண்டார்.தமிழ் மக்களுக்கு இந்தியா உதவிட முடியுமா? இல்லையா? என்று கேட்கவும் , இந்தியாவால் முடியாவிட்டால் தமிழ் மக்கள் வேறு உதவிகளை நாடுவது தானே வழி என்றும் கூறுவதற்காக டெல்கி செல்வதற்காகச் . சென்னை வானூர்தி நிலையத்தில் இருந்தவர் மயங்கி விழுந்து உயிரை விட்டார்,. அப்பொழுதே அரசியல் தலைமை இந்தியாவின் எண்ணத்துக்கு ஏற்ப நடக்கத் தொடங்கியது .அமிர்தலிங்கத்துடன் அப்பொழுது மிக நெருக்கமாக இருந்தவர்கள் யோகேஸ்வரன்,சம்பந்தன் ஆகியோராவர் என்பதும் கவனிக்கத்தக்கதாகும். இந்தியாவின் நலனில் கொண்ட அக்கறையின் விளைவு தான் அதிகாரங்கள் எதுவுமில்லாத மாகாண சபைகளாகும்.இலங்கை அரசியல் யாப்பின் ஆறாம் திருத்தத்தின் படி அரசியல் பேசுவோர் தனிநாடு கோரமுடியாது என்பதால் ஜே ஆர் உடன் பேசும்போது "சமஷ்டியை வலியுறுத்துங்கள்" என்று அமிர்தலிங்கத்தைப் போராளிகள் கேட்டிருந்தனர். ஆனால் அதிகார ப்பகிர்வு என்று பேசியதன் விளைவே மாகாணசபைகளை இந்தியா திணித்தற்கான காரணமாகும்.. அதனாற்றான் இரண்டாயிரத்து ஒன்பதுக்குப் பின்னர் தமிழ் மக்கள் தங்களது தேசியத்தைப் பற்றிய அக்கறை இல்லாத ஒரு அரசியல் தலைமையைப் பெற வழி செய்தது..தலைவர் பிரபாகரன் கைகாட்டிய கூட்டமைப்பு என்று சொல்லிச் சொல்லியே தேர்தலைச் சந்தித்து வந்தது கூட்டமைப்பு. அதுவரை எவருக்கும் தெரிந்திராத சுமந்திரன் இரண்டாயிரத்துப் பத்தில் கட்சிக்குள் புகுத்தப்பட்டார்.அவரைத் தேசியப் பட்டியல் மூலம் நாடாளுமன்றத்திற்கு அனுப்பியது கூட்டமைப்பு.சுமந்திரன் புகுத்தப்பட்டதன் பின்னர் கூட்டமைப்பு "நடந்தது இனப்படுகொலைதான் " என்று கூற மறுத்தது. போர்க்குற்றம் என்றும், சர்வதேச விசாரணை முடிந்து விட்டது என்றவாறு முள்ளிவாய்க்கால் பேரவலத்தை நடத்திய ஆட்சியைப் பாதுகாக்கவே அனைத்து வழிகளிலும் முனைப்புக் காட்டி வந்தது.இதனால் மக்களிடம் இருந்து அந்நியயப்படத் தொடங்கியது. 2004 இல் நடந்த பொதுத் தேர்தலில் இருபத்திரண்டு நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கொண்டிருந்த கூட்டமைப்பு ஒவ்வொரு தேர்தலிலும் குறைந்து கொண்டே வந்து இப்பொழுது பத்து நாடாளுமன்ற உறுப்பினர்களை மட்டுமே பெற முடிந்துள்ளது.



இவ்வாறு குறைத்ததற்கு மற்றைய தமிழ்க் கட்சிகளையே குறை கூறுகிறது கூட்டமைப்பு. ஒற்றுமையாகப் போனால் பலம், ஆனால் மற்றக்கட்சிகள் குழப்பி விட்டார்கள் என்று கூறுகிறது .இதுவரை காலம் எத்தனையோ முறை பேரம் பேசச் சந்தர்ப்பங்கள் வந்த போதெல்லாம் அதைச் செய்யாது



இருந்தவர்கள் இம்முறை பலமான அணியாகச் சென்றால் தான் பேரம் பேச முடியும் என்று கூறுகின்றனர். ஆனால் தெற்கில் மூன்றில் இரண்டு பலத்துடன் ராஜபக்சவினர் ஆட்சிக்கு வந்து விட்டனர்., ராஜபக்சவினருக்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை கிடைக்காது என்ற நினைப்பில் அவ்வாறு மூன்றில் இரண்டு தேவையானால் கூட்டமைப்பு அதைக் கொடுத்து அமைச்சுப் பதவிகளை பெறுவது தவறல்ல என்று கூறியது கூட்டமைப்பு .வெளியில் இருந்து ஆட்சியாளருக்கு ஆதரவு கொடுப்பதிலும் பார்க்க அமைச்சுக்களை எடுப்பது நன்மை அபிவிருத்தி செய்யலாம் என்று கூறினார்கள். தேசியம் முற்றாக இங்கு தடம் புரண்டது அம்பலமானது.

தமிழரசுக் .கட்சியின் கொள்கை சமஷ்டி என்று இருக்கும்போது இடைக்கால அரசியல் யாப்பு வரைபில் ஒற்றை ஆட்சியை ஏற்றுக்கொண்டு ஒற்றுமை வேண்டும் ஒற்றுமை வேண்டும் என்று கூவுவது ஏற்புடையதாகுமா?என்று மற்றவர்கள் கேட்பதில் நியாயம் இல்லாமல் இல்லை.கூட்டமைப்பிற்கு அயல் நாட்டால் பணிக்கப்பட்டது அல்லது ஒப்படைக்கப்பட்டது ரணிலின் அரசைக் காப்பாற்றுவது மட்டுமே. அதனாற்றான் பேரம் பேசினாலோ, அரசை எதிர்த்து வரவு செலவுத் திட்டத்தில் அரசை ஆதரிக்காது விட்டாலோ எதிர்க்கட்சி ஆட்சிக்கு வந்துவிடும் என்று கூறி அயல் நாட்டிற்கு ஆதரவாக இருந்தார்களேயன்றி தமிழ் மக்களின் உரிமைகள் மேல் அக்கறை கொண்டவர்களாக அவர்கள் நடந்துகொள்ளவில்லை. இவ்வாறு பலப்பல காரணங்களை அடுக்கிக் கொண்டே போகலாம்.

இந்த நிலையில் தான் கூட்டமைப்பில் பல பிளவுகள் தோன்றின.ஆனால் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் 2010 இல் கூட்டமைப்புத் தேசியத்தை விட்டுத் தவறாகச் செல்கிறது என்று கூறித் தனித்துச் சென்று தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியை நிறுவி “இருதேசம் ஒரு நாடு” என்று சொன்னார்.இதனைக் கேலி பேசினார்கள் தமிழரசுக் கட்சியினரும் -ஏனையகூட்டமைப்பினரும்.1951 இல் தமிழரசு கட்சியின் முதலாவது மாநில மாநாட்டில் தமிழ்த் தேசம் சிங்கள தேசம் என்று செல்வா கூறித் தான் சமஷ்டி ஆட்சியமைப்புத் தீர்மானத்தை நிறைவேற்றினார். ஆனால் இன்றைய தமிழரசுக்கட்சியினர் இரு தேசமாம் என்று கேலிபேசும் அளவிற்கு அரசியலின் தரம் தாழ்ந்து விட்டது.ஆனால் பின்னர் சில காரணங்களால் கூட்டமைப்பில் இருந்து பலர் விலகினர்.இவ்வாறு விலகியவர்கள் புதுபுதுக் கட்சிகளை அறிவித்தனர்.கூட்டமைப்பு என்பது இந்தியாவின் தேவைகளுக்காகச் செயற்பட்டுக்கொண்டிருக்கப் பிரிந்தவர்கள் இனம் சார்ந்த சிந்தனைகளுக்குள் சென்று விடக்கூடாது என்று இந்தியா வகுத்த திட்டமே பிரேமச்சந்திரன் மூலமான இன்னொரு அணியின் ஏற்பாடாகும்.தேர்தல் முடிவுகளைப் பார்க்கும்போது கூட்டமைப்புக்கு எதிரான கட்சிகள் ஒன்றாக இருந்திருந்தால் கூட்டமைப்பு கீழிறங்கியிருக்கும். மாற்று அணி கூடிய உறுப்பினர்களைப் பெற்று இருக்கும். ஆனால் அது சாத்தியப்படாமல் போய்விட்டது. மாற்று அணி முன்னணியின் தலைமையில் வரக்கூடாது என்பதில் அயல்நாடு காட்டிய பெரும் அக்கறையே சிதறுண்ட மாற்று அணிக்கான காரணமாகும். அது மட்டுமல்ல தமிழ்ச் செய்தித்தாள்கள் கூட முன்னணியின் செய்திளை இருட்டடிப்புச் செய்வதில் அதிக கவனத்தைச் செலுத்தி மக்களை திசை திருப்பி அழைத்துச் சென்றுள்ளன.இதனாற்றான் கூட்டமைப்பின் தவறான செயற்பாடுகளால் விரக்தியுற்ற மக்கள் தங்கள் வாக்குகளைத் தென்னிலங்கைக் கட்சிகளுக்கும். தென்னிலங்கை சார்ந்த கட்சிகளுக்கும் அளிக்க வேண்டி வந்தது என்பது தான் உண்மையாகும்.முன்பு ஐக்கிய தேசியக் கட்சி ஒரு இடத்தைப் பெற்றிருந்த நிலையில் அது அதனை இழக்க சுதந்திரக் கட்சி அவ்விடத்தை நிரப்பி உள்ளது. ஆனால் ஐதேக பெற்ற வாக்குகளிலும் கூடிய வாக்குகளை சுதந்திரக் கட்சி பெற்றுள்ளது என்பது உண்மையே.இதே போல் ஈபிடிபி யும் முன்னரிலும் பார்க்கக் கூடிய வாக்குகளைப் பெற்றுள்ளது.வன்னியிலும் ஒரு உறுப்பினரைப் பெற்றுக்கொண்டுள்ளது.

இந்த வெற்றிகளுக்கு யார் காரணம்.?ஒரு பெரும் போருக்குள் கடந்த முப்பதாண்டுகளாக இருந்து துன்ப துயரங்களை, இழப்புகளைச் சந்தித்த இனம் , இன்று இந்த மன நிலைக்கு வருவதற்கு எது காரணம் அல்லது யார் காரணம்?மக்கள் பட்ட துன்பம் போதும் என்று நினைக்கிறார்களா?எப்படியாவது வாழ்ந்து விட்டுப் போவோம் என்று நினைக்கிறார்களா ?என்று சிந்திக்க வேண்டிய காலம் இப்பொழுது வந்துள்ளது.இதற்கு முற்றிலும் அரசியல்வாதிகளே காரணமாகும். துன்பத்துக்கு மருந்து போடாமல் மக்களின் இழப்பிற்கு நீதி தேடாமல் தமிழ் கைதிகளைப் பற்றிய அக்கறை சிறிதும் இல்லாமல் காணாமல் ஆக்கப்பட்டோருக்கு நீதி தேடாமல் அவர்களை ஏமாறச் செய்து சர்வதேச அளவில் ஆட்சியாளரை மீட்பதில் அக்கறை கொண்டு , ஏமாற்று அரசியலில் முழுமையாக ஈடுபட்டமையே மக்களின் விரக்திக்குக் காரணமாகும்.ஒன்றும் சாதித்திருக்க முடியாமல் இருந்திருக்கலாம் . ஆனால் பேரவலத்தைச் சந்தித்த மக்களுடன் அருகில் நின்று நீதி கோரியிருந்தால் மக்கள் கவலைப்பட்டிருக்க மாட்டார்கள். ஆனால் போரை நடத்திய தளபதியை எதற்காக சனாதிபதியாகக் கொண்டு வர முனைந்தார்கள்.சிந்திய குருதி அவர் நடத்திய போரினால் தானே ஏற்பட்டது. ஆனால் அதை சிறிதும் கண்டுகொள்ளாமல் மக்களை அவருக்கு வாக்களிக்கக் கோரியது ஏன் என இன்று வரை காரணம் கூறினார்களா ?அடுத்த தேர்தலில் பிரதிப் பாதுகாப்பு அமைச்சராக இருந்து இறுதி நாள்களில் தமிழ் மக்கள் சதை பிண்டங்களாகக் குவியல் குவியலாகக் கொன்று குருதி ஆறுஓடவைத்த மைத்திரிபால சிறிசேனவை ஆதரித்தார்களே! அதற்கு என்ன சொன்னார்கள்? நாங்கள் ஒப்பந்தம் எதுவும் செய்யவில்லை, ஆனால் நெஞ்சத்தால் இணைந்து விட்டோம் என்று கூறிக்கொண்டு சர்வதேச அளவில் ராஜபக்சாக்களையும் ஆட்சியினரையும் காப்பாற்றிக் கொண்டு இந்திய ஆட்சியின் சொல்லுக்குக் கீழ்படிந்து கூட்டமைப்பு இயங்கியதால் ஒரு பகுதி மக்கள் நேரடியாகவே தென்னிலங்கைக் கட்சிகளை ஆதரிப்போம், எதற்காகக் கூட்டமைப்பின் பின்னல் செல்ல வேண்டும் என்று நினைத்தார்கள். அதன் விளைவே தென்னிலங்கைக் கட்சிகளுக்கான கூடிய வாக்குகளாகும்.அது மட்டுமல்ல “தொழில் தருவோம், வேலைவாய்ப்பு ஏற்படுத்துவோம்” என்று வழமையான தேர்தல் கால வாக்குறுதிகளும்,பிரதி அமைச்சராக இருந்து அரசு உதவிய கிணறு வெட்டக் காசு, தோட்டம் செய்யக் காசு என்ற அரச உதவிகளைச் சொந்த உதவிகள் என்று காட்டியதால் கொஞ்ச வாக்குகளையும் அவர்கள் பெற்றார்கள்.

உண்மையை நோக்கினால் தென்னிலங்கைக் கட்சிகளின் வாக்கு அதிகரிப்பு என்பது அவர்களின் வளர்ச்சி என்று கருதி விட முடியாது. 1948 இல் இருந்து கட்டிக்காத்து வந்த தமிழ்த் தேசிய உணர்வை மழுங்கடிக்கத் தமிழ்த் தலைமை எடுத்த ஒவ்வொரு நடவடிக்கையுமே இதற்குக் காரணமாகும்.இதற்காகவே சுமந்திரன் செயற்பட்டார், செயற்படுகிறார். தேர்தலின் பின்னர் கூட்டமைப்பிற்குள் நடக்கும் குழிபறிப்புகள் யார் இந்தக் கூட்டமைப்பை உருவாக்கினார்களோ, யார் தமிழரசுக்கட்சியை உருவாக்கினார்களோ அவர்களின் நோக்கத்திற்கு முற்றிலும் எதிரான நிலையில் சென்று கொண்டிருக்கிறது.யார் வென்றார் ?தோற்றவர் வென்றாரா? என்பது ஒருபுறம் நடந்து கொண்டிருக்கத் தேசியப் பட்டியல் யாருக்கு என்பதில் நடந்த குழப்பங்கள், “தமிழரசுக்கட்சியை அழித்து விடும்”என்ற நிலைக்குக் கொண்டு சென்று விட்டது.அது மட்டுமல்லக் கட்சியின் தலைமைப் பதவிக்கும் குறி வைக்கப்படுகிறது.தேசியப் பட்டியலில் யாரை நியமிப்பது என்பதைக் கூட்டமைப்பினரே தீர்மானித்திருக்க வேண்டும். ஆனால் ஒருவர் இருவர் சேர்ந்து தீர்மானித்துக் குழப்பத்தை ஏற்படுத்தி விட்டனர்.இப்போ அம்பாறை மாவட்டத்துக்கு என்று அறிவித்ததால் அதை மாற்றினால் அங்கே கட்சிக்குள் பிரதேச வேறுபாடு தோன்றும். அதனால் கட்சி பிளவுபடுவது கூட நடக்கலாம் என்று தான் திட்டமிட்டு இதனை அவர்கள் செய்துள்ளார்கள். அம்பாறையின் மீதுள்ள பற்றுதலால் இம்முடிவை அவர்கள் எடுக்கவில்லை என்பது தான் உண்மையாகும்.இதுகாலவரை ஒருவரை தன்னிச்சைப்பட நடக்க விட்டுவிட்டு, அவரை ஒரு தான்தோன்றித் தலைவராகக் காட்ட இடமளித்துவிட்டு இப்போது அவரைக் கட்டுப்படுத்த முடியாமல் கூட்டமைப்பு இருக்கிறது.ஒருவர் சிறப்பு அதிரடிப்படையுடன் உலா வரும்போதே மக்கள் அவரைப் பற்றி அறிந்து கொண்டார்கள். ஆனால் கட்சியின் பேச்சாளராக நியமித்து விட்டு பின்னர் அவர் சொல்லும் சில கருத்துகளை அவரின் சொந்தக் கருத்துகள் என்று கூறி மழுப்பி வந்தார்கள். இப்பொழுது அவர் தனது நிலையைப் பலப்படுத்தக் கட்சித் தலைமையைத் தனது ஆதரவாளருக்குக் கொடுக்க முனைகிறார்.அவரைத் தூண்டியும் விட்டுள்ளார். எனவே கூட்டமைப்புக்கோ, தமிழரசுக்கோ வருங்காலத்தில் என்ன நடக்கப்போகிறது என்று பொறுத்திருந்து பார்ப்போம்.

அடுத்த அடியைத் தமிழ் மக்கள் எதை நோக்கி வைக்கப்போகிறார்கள் என்பதையும் பொறுத்திருந்து தான் பார்க்கவேண்டும்.



# பொலிவியாவின் இலித்தியம் 2

## ரெஸ்லா தன்னுடைய தேவையை நிறைவேற்றிக் கொண்டதா?

எழுத்துருவாக்கம் : ப. ராஜ்குலன்

இயந்திர மயமான உலக வாழ்க்கையில், நின்று சிந்திக்க நேரமற்றவர்களாக மக்கள் எதை நோக்கி வேகமாக ஓடிக் கொண்டிருக்கிறார்கள்? முற்றுப் புள்ளி என்று ஒன்றைக் காணும்போதுதான் விழித்துக் கொள்கிறார்கள். அப்போது காலம் கடந்து போய்விடுவதை உணருகிறார்கள். எமது வாழ்க்கையை வளப்படுத்தி, அதற்குச் செறிவூட்டி எம்மை ஆதாரபுருஷர்களாக வைத்திருக்கும் இயற்கையைப் பற்றிச் சிந்திப்பார் யாரும் இல்லை. சாதாரணமாகக் குப்பை போடுவதில்கூட ஒழுக்கமில்லாமல் பலர் நடந்துகொள்கிறார்கள். மரத்தை வெட்டுபவர்கள். மரங்களை நடுவதற்கு முன்வருவதில்லை. நிலத்தடி நீரைப்பற்றி கவலைப்படாத மக்களும் அரச இயந்திரமும், கழிவுநீர் முகாமைத்துவ மில்லாத நிறுவனங்கள் என இயற்கையை மதித்து நடக்காதவர்களுக்காக ஓர் சட்டத்தை உருவாக்க வேண்டும். அதற்கான ஒரே வழி சூழல் தாக்க மதிப்பாய்வு (Environmental Impact Assessment). அதாவது, மனிதனுடைய சூழல்சார் உடல்நலத்தில் ஏற்படக்கூடிய தாக்கம், வாழும் சூழல் நலம் (Ecological Health) மற்றும் இயற்கையின் சேவைகளில் (Nature's Services) ஏற்படக்கூடிய மாற்றங்கள் ஆகியவற்றில் ஒரு குறிப்பிட்ட திட்டம் கொண்டிருக்கக்கூடிய தாக்கங்களை மதிப்பாய்வு செய்தல் ஆகும். திட்டங்களைச் செயல்படுத்துவது தொடர்பான தீர்மானம் எடுப்பவர்கள், அதற்குமுன், அதனால் ஏற்படக்கூடிய தாக்கங்களைக் கவனத்தில் கொள்வதற்கு உதவுமுகமாகவே இந்த மதிப்பாய்வு மேற்கொள்ளப்படுகின்றது. சூழலியல் காரணிகளால், மனித உடல் நலத்தில் ஏற்படக்கூடிய தாக்கங்கள் பற்றி அறிவதற்கு, செல்வழிப் பகுப்பாய்வு (Pathway Analysis) முறையைப் பயன்படுத்துவதில், ஐக்கிய அமெரிக்க சூழல் பாதுகாப்பு முகமை (US Environmental Protection Agency) முன்னோடியாக இருந்தது. இந்தப் பகுப்பாய்வுக்கான தொழில்நுட்பம், சூழல் அறிவியல் (Environmental Science) எனப்பட்டது. முன்னணித் தோற்றப்பாடுகள் அல்லது தாக்கம் ஏற்படுவதற்கான வழிகள்: மண் மாசடைதல் தாக்கங்கள், வளி மாசடைதல் தாக்கங்கள், சத்தம்சார் உடல்நலத் தாக்கங்கள், வாழ்சூழலில் ஏற்படக்கூடிய தாக்கங்கள், அழியும் நிலையிலுள்ள உயிரினங்கள் தொடர்பான மதிப்பாய்வு, நிலவியல் ஆபத்துக்கள் மதிப்பாய்வு, நீர் மாசடைதல் தாக்கங்கள். சூழல் தாக்க மதிப்பாய்வுக்குப் பின்னர், ஏற்படக் கூடிய பாதிப்புக்களைத் தடுப்பதற்கு அல்லது கட்டுப்படுத்து வதற்கு, கடுமையான பொறுப்பு அல்லது காப்புறுதி நிபந்தனைகளை விதிப்பதற்கு, முன்னெச்சரிக்கைக் கொள்கை, மாசுபடுத்துவோர் ஈடுசெய்தல் கொள்கை என்பவற்றைப் பயன்படுத்த முடியும். ஒரு மரத்தை வெட்டினால் பத்து மரத்தை நடவேண்டும். மழைநீர் சேமிப்பு மற்றும் மழை நீர் முகாமைத்துவம் என்பவற்றை சட்டங்க மூலம் கடுமையாக நடைமுறைப்படுத்தினால் இயற்கை அன்னை என்றும் நம்மைப் பாதுகாப்பாள்.



இதைத் தான் பொலிவியா மக்களும் எதிர்பார்த்தார்கள். பொலிவியாவின் இலித்தியம், பொலிவியா மக்களுக்கே. அதைத் தோண்டி எடுக்கும் உரிமையும் அதை உபயோகிக்கும் உரிமையும் பொலிவியா மக்களுக்கே என ஈவோ மொறாலஸ் கூறினார். இதற்கான காரணத்தை இன்றைய பொருளாதார சூழ்நிலையுடன் நன்கு ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும். எந்தவொரு வளத்தையும் இங்கிருந்து திருடிச் செல்வதால் நிச்சயமாக இலாபம் கிடைக்காது. பொலிவியாவில் கிடைக்கும் இலித்தியத்தைப் பிரித்தெடுக்காமல் உப்பாகவே (Raw Material) அனுப்பினால் இலாபம் என்பது கிடைக்கவே கிடைக்காது என்பதை நன்கு உணர்ந்த ஈவோ மொறாலஸ் அவர்கள், இலித்தியத்தைப் பயன்படுத்தும் தொழிற்சாலைகளை உருவாக்க அல்லது தருவிக்கத் திட்டமிட்டார். அதை நடைமுறைப்படுத்தினார். அதன் மூலம் அவருடைய 16 வருட ஆட்சிக் காலத்தில் இரண்டாவதாக அதிக முதலீடு செய்யப்பட்டது. அவரால் முதன்முதலாக அதிக முதலீடு செய்யப்பட்டது என்பது எரிபொருள் நிறுவனங்களை அரசுடமையாக்கியது எனக் கடந்த இதழில் பார்த்தோம் என்பது குறிப்பிடத்தக்கது. இலித்தியத்தை அப்படியே வெளிநாடுகளுக்குக் கொடுத்தால் என்ன என்று நீங்கள் கேட்கலாம்? ஒரு வளத்தை அப்படியே கொடுப்பதற்கும், அந்த வளத்தைக் கொண்டு மனிதர்களுக்குப் பயன்படக்கூடிய வேறொரு பெறுமதி சேர்க்கப்பட்ட பொருளாகத் தயாரித்துக் கொடுப்பதற்கும் நிறைய வித்தியாசம் இருக்கின்றது. பெறுமதி சேர்க்கப்பட்ட பொருளின் விலையை நாம் தீர்மானிக்கலாம். ஆனால் மூலப் பொருளின் விலையை பெரும்பாலும் வாங்குபவர்கள்தான் தீர்மானிக்கிறார் கள். உதாரணமாக விவசாயிகள் தயாரிக்கும் பொருட்களுக்கான விலையை வாங்குபவர்களோ அல்லது அன்றைய சந்தை நிலவரமோ தீர்மானிக்கும். ஆனால் அதே மூலப்பொருட்களைப் பயன்படுத்தி உணவகத்தில் தயாராகும் உணவுகளுக்கான விலையை அந்தக் உணவக உரிமையாளரே தீர்மானிப்பார். இதைத் தான் ஈவோ மொறாலஸ் " இலித்தியத்தைப் பயன்படுத்தித் தயாரிக்கும் மின்கலங்களைப் பொலிவியாவிலேயே தயாரியுங்கள்." என்று சொன்னார். அதே வேளை பொலிவிய மக்களுக்கும் பெரும் வேலை வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுக்க முடியும். அநதச் செயற்பாடுகளினால், நாடும் வளமான நாடாக மாறும். என்று அவர் சொன்னவை பலருக்கும் பிடிக்கவில்லை. குறிப்பாகப் பல தனியார் மற்றும் காப்பரேற் நிறுவனங்களுக்குப் பிடிக்கவில்லை. இதன் விளைவாகவே ஈவோ மொறாலஸ் அவர்கள் 2019ஆம் ஆண்டு இறுதிப் பகுதியில் நாட்டைவிட்டே விரட்டியடிக்கப்பட்டார்.

கடந்த இதழில் சொன்ன பல விடயங்கள் மிகவும் முக்கியமானவை என்பதுடன் சிந்திக்கவேண்டியவை களும் கூட. எந்த நாட்டிலும் நாட்டுப்பற்றாளன் என்று சொல்லப்படும் மண்ணின் மைந்தர்கள், "எம் நாடு, எம் மக்கள்" என வாழ்ந்தால் அது சுரண்டலை விரும்பும் உலக நாடுகளுக்கு இடையூறாகத்தான் இருக்கும். 2009 இல் ஈழத்தில் நடந்த சம்பவங்களும் இவ்விடயங்களுடன் ஒத்துப்போக லாம். தற்சார்ப்புப் பொருளாதாரத் தைக் கையிலெடுத்த எந்தவொரு நாட்டையும் அதன் தலைவர்களையும் உலக நாடுகள் அப்படியே விட்டு வைத்ததில்லை என்பதே நிதர்சனம்.

2019ஆம் ஆண்டு பொலிவியாவில் தேர்தல் நடைபெற்றது. நான்காவது முறையாக ஈவோ மொறாலஸ் அவர்கள் போட்டியிட்டார். நிச்சயமாக அவர்தான் வெற்றி பெற்றிருப்பார். ஆனால் நடந்ததோ வேறு. ஒக்டோபர் மாதத்தில் வாக்குகள் எண்ணப்பட்டுக் கொண்டிருந்தன. திடீரென எண்ணும் பணி நிறுத்தப்பட்டது. ஏன் நிறுத்தப் பட்டது? எதற்காக நிறுத்தப்பட்டது? என்பது தொடர்பாக எந்தத் தகவலும் வெளியிடப்படவில்லை. மீண்டும் மறுநாள் வாக்கு எண்ணும் பணி தொடர்கிறது. அந்த நேரத்தில் ஈவோ மொறாலஸ் அவர்கள் முறைகேடுகளில் ஈடுபட்டிருக்கிறார் என அமெரிக்காவால் நிறுவப்பட்ட ஓ.ஏ.எஸ் எனப்படும் அமெரிக்க மாநிலங்களின் அமைப்பு (Organization of American States) பொலிவியாவில் நடைபெறும் தேர்தலைக் கண்காணிக்கும் எனக் கூறப்பட்டது. 24 தேசங்களைச் சேர்ந்த 92 நபர்கள் இந்தத் தேர்தலைக் கண்காணிக்கவென பல்வேறுபட்ட பொலிவியா தேர்தல் வாக்குச் சாவடிகளில் நிறுத்தப்பட்டார்கள். தேர்தலுக்குப் பின் நடைபெற்ற வாக்கு எண்ணும் பணியை இவர்கள் இடைநிறுத்தினார்கள். அதற்கு அவர்கள் சொன்ன காரணம், "ஈவோ மொறாலஸ் வாக்கு மோசடியில் ஈடுபட்டார்" என்பதே. அதற்காக ஈவோ மொறாலஸ் அவர்களை நாடுகடத்த வேண்டும் எனக் கேட்டுக்









கொண்டதுடன் அவருக்கு எதிராக இராணுவத்தையும் களமிறக்கப் பரிந்துரைத்தனர். அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க ஈவோ மொறாலஸ் நாடுகடத்தப்பட்டார்.

அவரை நாடுகடத்தும் அளவுக்கு இராணுவத்திற்கு அத்தனை அதிகாரங்களையும் யார் கொடுத்தது? அவர் வேறு யாருமல்ல.. அதுவரை ஈவோ மொறாலஸிற்கு எதிராகச் செயற்பட்ட பொலிவியாவின் எதிர்க்கட்சித் தலைவரே இதன் பின்னணியில் இருந்து செயற்பட்டவராவார்.

இதற்கு கொஞ்ச நாட்களுக்குப் பின், தி நியூயோர்க் டைம்ஸ் (The New York Times) பத்திரிகையில் ஓர் கட்டுரை வெளிவந்தது. ஈவோ மொறாலஸ் அவர்கள் எந்தத் தவறும் செய்யவில்லை. வீணாக அவரை நாடுகடத்திவிட்டார்கள் என அது மேலும் தெரிவித்திருந்தது. ஈவோ மொறாலஸ் அவர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதியை வெளிக்கொண்டுவரும் வகையில் பொலிவியாவின் வானொலி வலையமைப்புக் கல்வி நிறுவனத்திற்கு (Radio Network of Education, Bolivia) 16 உரையாடல் பதிவுகள் கிடைத்தன. அந்த உரையாடல்களில் அமெரிக்க மாநிலங்களின் அமைப்பைச் (Organization of American States) சேர்ந்தவர்களும், பொலிவியா நாட்டின் எதிர்க்கட்சித் தலைவரும் உரையாடிய விடயங்களே பதிவுகளாகக் காணப்பட்டன.

அந்தப் பதிவுகளில், "எப்படி ஈவோ மொறாலஸை வெளியில் அனுப்ப வேண்டும்..? இராணுவத்தை எப்படிப் பயன்படுத்தவேண்டும்? என அனைத் தையும் அந்த அமெரிக்க அமைப்பு பொலிவியா நாட்டின் எதிர்க்கட்சித் தலைவருக்குச் சொல்லிக்கொடுத்ததன் ஆதாரமே அது..!

ஈவோ மொறாலஸ் நாடுகடத்தப்பட்ட பின்பு மொத்த அதிகாரமும் இராணுவத்திடமே கொடுக்கப்பட்டது. அதன் பின்பு ஈவோ மொறாலஸ் அவர்களின் கட்சியைச் சேர்ந்த அனைவரும் கைதுசெய்யப்பட்டனர். பின்பு ஈவோ மொறாலஸ் அவர்கள் மெக்சிக்கோ சென்றதாகச் சொல்லப்படுகிறது.

இலித்திய முக்கோண நாடுகள் (Lithium Triangle) என்று சொல்லப்படும் பொலிவியா, ஆஜெண்டீனா, சில்லி ஆகிய மூன்று நாடுகளிடம் மட்டுமே உலகில் அதிகளவான இலித்தியம் இருக்கிறது. இனிவரும் காலங்களில் நிச்சயமாக இலித்தியம்தான் இந்த உலகை ஆளப்போகிறது.
உலகப் பொருளாதார மன்றம் (World Economic Forum). எல்லோரும் பசுமை ஒப்பந்தத்திற்கு (புசநநெ யுபசநநஅநவெ) வரவேண்டும் என ஓர் அழைப்பை விடுத்தது. டீசல், பெற்றோல் இயந்திரங்களை விடுத்து சூரிய மின்சக்தி மற்றும் மின்சாரத்தில் இயங்கும் கார்களுக்கு முக்கியத்துவம் தரவேண்டும் என அது மேலும் கூறியது. உலக அளவில் தற்போது இருக்கும் மின்சாரத்தில் இயங்கும் கார்களின் எண்ணிக்கை வெறும் 0.7 வீதம் மட்டுமே..! இருப்பினும் தற்போதுள்ள கொரோனா இடர்காலத்தில் பொதுப் போக்குவரத்து வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளது. முடிந்தவரை சொந்த வாகனங்களின் பாவனையை மக்கள் அதிகரித்துள்ளனர். இதனைப் பின்பற்றி 2020ஆம் ஆண்டின் இறுதிப் பகுதியில் அல்லது 2021 இன் ஆரம்பத்தில் மின்சாரத்தில் இயங்கும் (Electric Car) கார்களை மக்கள் விரும்பி வாங்கத் தொடங்குவார்கள். அப்போது, இந்தியாவில் இதன் பாவனை அதிகரிக்கும். இந்தியா போன்ற சந்தை வளப் பெருக்கம் நிறைந்த நாடுகளில் இவற்றின் விற்பனை பெருகும். 2030இல் அனைவரும் மின்சாரத்தில் இயங்கும் வாகனங்களை மட்டுமே பாவிக்கமுடியும் என்ற சட்டம் வந்தாலும் அதில் வியப்பேதும் இல்லை. இந்த சூழலில் மின்சாரத்தில் இயங்கும் கார்களைத் தயாரிக்கும் நிறுவனங்களுக்கு இலித்தியத்தின் தேவை அதிகரிக்கும். இலித்தியம் பொலிவியாவில் நிறைந்து காணப்படுகிறது என்பது உலகறிந்த விடயம். ஆனால் அங்கு இருந்த ஈவோ மொறாலஸ் அரசிடம் இவர்களின் பருப்பு வேகாது. எனவே அங்கு ஓர் ஆட்சி மாற்றம் தேவைப்பட்டது. அது நடத்தியும் முடிக்கப்பட்டது. பொலிவியா ஜெர்மனியுடனும் சீனாவுடனும் இலித்தியம் தொடர்பாக ஒப்பந்தம் மேற்கொண்டதாகக் கடந்த இதழில் பார்த்தோம். அந்த ஒப்பந்தங்களை தற்போதிருக்கும் இராணுவ அரசு கிழித்தெறிந்தது. இப்போது பொலிவியாவின் வளங்கள் யாவும் இராணுவத்தின் வசமே! அந்த இராணுவம் அமெரிக்கா மற்றும் மேலாதிக்க சக்திகளின் பிடியில் இருக்கிறது. இப்போது சிந்தியுங்கள்..! அதற்குப் பின்னால் உள்ள அரசியல் உங்களுக்குப் புரிந்துவிடும்.
அந்த இலித்தியத்தின் உரிமை யாருக்குப் போகும்? அன்று ஈவோ மொறாலஸை வீழ்த்துவதற்காக நிறுத்தப்பட்ட பொதுத் தேர்தல், இன்னும் நடத்தப்படவில்லை. வருகின்ற செப்ரெம்பர், ஒக்டோபரில் நடக்கலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

இனி அமையப்போகும் அரசுதான் பொலிவியாவின் வளங்களைப் பாதுகாக்கவேண்டும். அதன் உரிமை அவர்களிடமே இருக்கப் போகிறது. 2025 இல் சீனாவுக்கு மட்டும் 8 லட்சம் டன் இலித்தியம் தேவைப்படும் என ஓர் புள்ளிவிபரம் காட்டுகிறது. அதே வேளை சீனாவிடமும் இலித்தியம் இருக்கிறது என்பது நாம் ஏற்கனவே பார்த்தவிடயம். ஆனால் இந்தியாவிடம் இலித்தியம் இல்லை. ஆதலால் தான் பொலிவியா, ஆஜெண்டீனா உடன் சுதந்திர வர்த்தக உடன்படிக்கை (Free Trade Agreement) ஒன்றை ஏற்படுத்த இந்தியா முயற்சித்தது. இயலாமல் போகவே இந்தியா இறுதியில் சிலியுடன் அந்த ஒப்பந்தத்தை ஏற்படுத்திக்கொண்டது.
இது ஒருபுறமிருக்க..!

எலன் மஸ்க்கின் டுவிட்டர் பதிவில் ஈவோ மொறாலஸை மிரட்டும் தொனியில் "எங்களிடம் பல அரசுகளும் காவல்துறையும் இருக்கிறது. எங்களைப் பகைத்துக் கொண்டால் அதன் விளைவை நீங்கள் சந்திக்கவேண்டிவரும்" என்று கூறியதாகக் கடந்த இதழில் பார்த்தோம். அதற்குப் பதில் கூறும் போது, "நீங்களோ பெரிய நிறுவனத்தின் தலைமை அதிகாரி. ஆனால் இலித்தியம் எல்லோருக்கும் தேவையானது. கொஞ்சம் கரிசனை காட்டுங்கள் என்றார் ஈவோ மொறாலஸ். ஆனால் எலன் மஸ்க் பொலியாவின் இலித்தியம் எங்களுக்குத் தேவையில்லை. நாங்கள் அவுஸ்திரேலியாவிடம் இருந்து இலித்தியத்தை வாங்கப் போகின்றோம்" என்று பதிலுரைத்தார். இருப்பினும் அவுஸ்திரேலியாவில் இருக்கும் பாறைகளை உடைத்து இலித்தியத்தைப் பெற்றுக்கொள்ளுவது அத்தனை இலகுவான காரியமல்ல.. அதுமட்டுமல்ல, சூற்றுச்சூழல் மாசடைகிறது அதனால் இலித்தி யத்தை எடுக்கக்கூடாது எனப் பலரும் அங்கு போராடி வருவது குறிப்பிடத் தக்கது. எனவே, இவர்களின் பார்வை பொலிவியாவின் எல்லை நாடுகளைக் குறிவைத்தது. ஆம், பிறேசிலிடம் ரெஸ்லா தனது நிறுவனத்தை அங்கே தொடங்குவதற்கான ஓர் உடன்படிக்கையை ஏற்படுத்திக் கொண்டது. பிறேசிலும் பொலிவியாவும் எல்லைப் பங்காளிகள். பொலிவியாவின் இராணுவ ஆட்சியைப் பயன்படுத்தி, பிறேசிலின் எல்லை வழியாகக் கொண்டுவரப்படும் இலித்தியம் யாருடைய கைகளில் கிடைக்கும்? என்பது நான் சொல்லி நீங்கள் தெரிந்துகொள்ளவேண்டியதில்லை. உலகில் நடக்கும் ஒவ்வொரு சம்பவங்களுக்குப் பின்னால் மிகப்பெரிய உலக அரசியல் உறங்கிக்கொண்டிருக்கிறது. ஒவ்வொரு செய்தியாக இணைத்துப்பார்க்க வேண்டும். உலகப் பொருளாதார மன்றம் (World Economic Forum), பசுமை ஒப்பந்தம் (Green Agreement), டொலரின் வீழ்ச்சி, அமெரிக்காவின் சித்து விளையாட்டுக்கள், சீனாவின் இராஜதந்திரம், பொலிவியாவின் வீழ்ச்சி, லெபனானின் குண்டுவெடிப்புச் சம்பவம் எனப் பலவற்றுக்குப் பின்னால் இருக்கும் உலக அரசியல் எமது மூச்சை முட்டவைக்கிறது..!

# காற்று வாக்கிலே....

வாய்ப்பைப் பயன்படுத்தி அரசு யாப்பை உருவாக்க வேண்டும். தெற்கில் ஏற்பட்டிருக்கும் மாற்றத்துடன் வடக்கு கிழக்கு மக்களும் கைகோர்த்துள்ளதை தேர்தல் முடிவுகள் காட்டுகின்றன அரசாங்கத்திற்கு கிடைத்திருக்கும் மக்கள் ஆணையைப் பயன்படுத்தி நாட்டுக்கு பொருத்தமான அரசியல் யாப்பொன்றை உருவாக்கி அங்கீகரித்துக் கொள்ள வேண்டும் என அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

நல்ல விடயம்.... சந்தோஷம்... தேர்தலில் மஹிந்த அரசுக்கு கிடைத்த மாபெரும் வெற்றிக்குப் பின்னர் ஆளும் கட்சியின் முக்கியஸ்தர்கள் சிலர், குறிப்பாக வெளியுறவு அமைச்சர் தினேஸ் குணவர்த்தனா போன்றவர்கள் கூறிவரும் கருத்துக்கள் பலவும் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு நியாயமான தீர்வொன்றை இந்த அரசு தரப்போவதில்லை என்ற எண்ணப்பாட்டை வலுப்படுத்தவே செய்கிறது. கூட்டமைப்பின் தோல்வியை அல்லது பின்னடைவுகளை கூட்டமைப்பின் கொள்கைகளுக்கு எதிரான தமிழ் மக்களின் எதிர்ப்புணர்வின் அடையாளமாக காட்டமுனைகின்ற அதேவேளை தமிழ் தேசிய கோட்பாடுகளை தமிழ் மக்கள் நிராகரித்துவிட்டதாகவும் நிரூபிக்கத் துடிக்கின்றனர் இந்நிலையில் புதிய அரசியல் யாப்பொன்றின் உருவாக்கம் எத்தகைய இலட்சணத்தில் இருக்கும் என்று பயமாக இருக்கிறது.




வாய்ப்பை பயன்படுத்தி அரசு யாப்பை உருவாக்க வேண்டும்.. என்ற வாசு தேவவின் வலியுறுத்தல் நல்லதே...! ஆனால் அந்த யாப்பு தமிழர் அபிலா சைகளுக்கு வைக்கப்படும் ஆப்பாக இருக்கக் கூடாது என்பதே பயம்.

தமிழ்த் தலைமைகள் ஒன்றிணைந்து செயற்படுவதே மக்கள் விருப்பமாம்!- இப்படிக் கூறி ஒரு கருத்தை வலியுறுத்தியுள்ளவர்கள் மகா புத்திசாலிகள் என்று தம்மைத்தாமே பிரகடனம் செய்து கொண்டு இயங்கும் யாழ்ப்பாணக் கல்வியாளர் ஒன்றியம் என்ற அமைப்பினராவர்.

சரிதான்... ஐயாமார் இதனை தேர்தலுக்கு முன்னர் தேர்தல் கூட்டுகள் பற்றிய கட்சிகளிடையேயான உள்ளக மோதல்களும் தலைமைகளுக் கிடையேயான கருத்தியல் முரண்பாடுகளும் தமிழ் மக்களின் ஒருமைப்பாட்டுணர்வுக்கு பெருமளவில் பாதிப்பை ஏற்படுத்திக் கொண்டிருக்கும் போது மக்கள் சார்பில் இந்தக் கருத்தை தமிழ்த் தலைமைகளுக்கு இந்த கல்வியாளர்கள் சொல்லி யருப்பார்களேயானால் பொருத்தமானதாக இருந்திருக்கும்!

என்ன செய்வது கல்வியாளர்களும் நம் மண்ணில் காலங்கடந்தே சரியானதை சிந்திக்கிறார்கள்... காலம் கடந்த கருத்துக்கள் காலாவதியானவையே யாகும்! ஆனால் இதே கல்வியாளர்கள் ஒன்றியம் தான் தேர்தலுக்குச் சில நாட்களின் முன்னர் ஒரு கருத்தை முன்வைத்திருந்தார்கள். அதாவது தமிழ் மக்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கே வாக்களிக்க வேண்டும் என்று...

அவர்களின் வேண்டுகோளை தமிழ் மக்கள் எப்படி ஏற்றுக் கொண்டார்கள் என்பதை தேர்தல் முடிவுகள் அவர்களுக்கு உணர்த்தி யிருக்கும். பட்ட பிறகே புத்தி தெளிந்து ஒன்றிணைந்து செயலாற்றும் மக்களின் விருப்பார்வம் குறித்து அறிவித்திருக்கிறார்கள்.



"You've just proven that your job doesn't exist."

இப்போது அவர்கள் தங்கள் கல்வியறிவின் பாற்சிந்தித்து கருத்து சொல்லவில்லை. தேர்தல் முடிவினால் பட்டறிந்த பாடத்தின் பின்னர் மக்களிடம் இருந்து கற்றுக் கொண்டதை மக்களுக்கே சொல்லி யிருக்கிறார்கள்... கல்வியாளர்கள் பட்டறிவின் பின்னரே பகுத்தறிய தொடங்குகிறார்கள் போலும்.

தேசியப் பட்டியல் மூலம் பாராளுமன்ற இருக்கைக்கு முண்டியடித்து இடம் பிடிக்கும் முயற்சிகள் சகல கட்சிகளுள்ளும் பல்வேறு வழிகளில் பல்வேறு தரப்பினராலும் மேற்கொள்ளப்பட்டுவருவது சுவரசியமான விடயமாகும். கூட்டமைப்புக்கு கிடைத்த ஒரு இருக்கையில் அமர்ந்து கொள்ள நடந்த திரைமறைவு நாடகங்கள் வெட்கக் கேடானவை. இருக்கை ஒருவருக்கு வழங்கப்பட்ட பின்னரும். தலைவர் சம்பந்தப் பெருமானோ "யாமறியோம் பராபரமே" என்று கையை விரிக்கிறார். ஒரு பதவிக்காக இத்தனை "கோல்மால்" வேலைகளா? நாற்காலிகளுக்கான பிரச்சினை நாடு சிரிக்கும் பிரச்சினையாகிவிட்டது. அது இப்போது தமிழரசுக் கட்சியின் தலைவரை அவருக்கு எஞ்சியுள்ள கட்சித் தலைமைக் கதிரையில் இருந்து தள்ளி விழுத்துவதற்கான சதி வரை விரிவடைந்து விட்டது! வெட்கக் கேடு!

நம்மூர் நாற்றம் தான் இப்படி என்றால்
நாடு பூராவும் நாற்றம் தான் சஜித் அணிக்குள் போராட்டம்... தேர்தலில் வெல்லாமல் கிடைத்த ஒரேயொரு ஒண்டிக் கதிரைக்காக இறுதி மூச்சை சிரமப்பட்டு விட்டுக் கொண்டிருக்கும் ஐ.தே.கட்சிக்கும் முடிவெடுக்க முடியா நிலைதான். தமிழ்க் காங்கிரஸ் கட்சிக்குள்ளும் இது தொடர்பாக முணு முணுப்பும் முரண்பாடும் இருப்பதாகக் கேள்வி....



சரி எப்படியெண்டாலும் போகட்டும் என்றால் ஒரு ஆசனத்திற்காக.... பற்றற்ற தேரர்களுக்கிடையேயும் கதிரைக்கான மோதலாம்! பதவி ஆசை துறவிகளுக்கு இருக்கக் கூடாதா? தேரர்கள் எல்லாரும் புத்தராக முடியுமா? பொதுபலசேனா தேசியப்பட்டியல் ஆசனத்திற்காக அத்துரலிய ரத்ன தேரருக்கும், கலகொட அத்தே ஞானசாரருக்கும் மிடையே மோதலாம்... வெட்கம்!

காவியுடையை களைந்து விட்டு இவர்கள் இருவரும் மோதினால் உண்மையான துறவிகளான தேரர்களுக்கு கௌரவமாக இருக்குமல்லவா?

தேர்தலில் மக்கள் புகட்டிய கசப்பானதும், அவமானகரமானதுமான பாடத்தின் பின்னர், முகவரி இழந்தவர்களாகி "முட்டாக்குப்" போட்டுக் கொண்டு திரிய வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டு விட்ட தமிழ்த் தலைவர்கள் என்று தம்மைச் சொல்லிக்கொண்டு அரசியல் உலா வருகின்றவர்களுக்கு திடீர் ஞானோதயம் ஏற்பட்டு ஒருமைப்பாட்டுத் தத்துவம் பேச ஆரம்பித்து விட்டதில் அவர்கள் அடுத்த கட்ட நாடகத்திற்கு தயாராகத் தொடங்கிவிட்டார்கள் என மக்கள் மத்தியில் கிசுகிசுக்கள் கசியத் தொடங்கிவிட்டன.

மக்கள் காதிலை தாங்களே பூச்சொருகிக் கொண்டு ஐயாமாரின் ஞானோபதேசத்தை (!?) கேட்டு ரசிக்கத் தயாராகி விட்டார்கள். என்று நம்பவும் கூடும். "பிரிந்து நிற்பதால் தமிழரின் இலக்கை அடையவே முடியாது!" இது அந்த தள்ளாத வயதுத் தாத்தாத் தலைவர் சம்பந்தனின் உபதேசம். "தமிழ் மக்களுக்கு தற்போது ஏற்பட்டுள்ள நெருக்கடியான சூழ்நிலையில் தமிழ்கட்சிகள் ஒன்றிணையா விட்டாலும் ஒற்றுமையாகச் செயற்பட வேண்டும்." இது சித்தார்த்தனின் (புத்தர் சித்தார்த்தனல்ல புளொட் சித்தார்த்தன்) பிரசங்கம்.


"எதிர்கால ஆபத்தை உணர்ந்து ஒருமித்துச் செயற்படவேண்டிய காலத்தில் நாமிருக்கிறோம். அனைவரும் பொறுப்போடு ஒருமித்து செயற்பட வேண்டும். இது சுரேஸ் பிரேமச்சந்திரனாரின் கருத்து, "அரசின் ஒற்றையாட்சி சதியை தமிழ் மக்கள் ஒன்றிணைந்து முறியடிக்க வேண்டும்." இது தமிழ்க் காங்கிரஸ் தலைவர் கஜேந்திரகுமாரின் அறைகூவல்.

"ஒத்த கொள்கையுணர்வுடையவர்களுடன் தமிழ் மக்கள் தேசியக் கூட்டம் இணைந்து செயற்படத் தயார். " இது அந்த ஓய்வு பெற்ற நீதியரசரின் தற்போதைய முடிவு. கடைசியாக ரெலோ செல்வம் அடைக்கலநாதன் அறைகூவல் இதுவாகும். "தனிப்பட்ட விருப்பு வெறுப்புகளை விட்டு இணைந்து செயற்பட எல்லாரும் முன் வாருங்கள்...

எப்படியிருக்கிறது நிலமை பாருங்கள்.
தேர்தலுக்கு முதல்நாள்வரை திசைக் கொருவராகத் திரும்பி நின்றுகொண்டு ஒருவரை ஒருவர் வசைபாடிக் கொண்டிருந்தவர்கள் ஒருமைப்பாடு, இணக்கப்பாடு ஒன்றிணைந்து செயற்பட வேண்டும். அணி திரள்வோம் வாருங்கள்... ஆபத்து நெருங்குகிறது என ஆர்ப்பரித்து அறைகூவல் விடுக்கத் தொடங்கி யிருக்கிறார்கள்...

கண்கெட்டபின் சூரிய நமஸ்காரம் செய்யும் பேர்வழிகளாக நமது அரசியல் தலைவர்கள் இருப்பது தான் பெருந்துயரம்





சு.வே என அழைக்கப்படும் சுப்பிரமணியம் வேலுப்பிள்ளை மே 24, 1921 இல் பிறந்தவர். இலங்கையின் சிறப்புமிக்க உருவகக்கதை எழுத்தாளரும் நாடகாசிரியரும் தமிழ்ப் பண்டிதரும் ஆவார்.அவர் ஜூன் 22, 2007 இல் அமரரானார். வேலுப்பிள்ளை யாழ்ப்பாண மாவட்டம், நாவற்குழியில் சுப்பிரமணியம், தையல்நாயகி ஆகியோருக்குப் பிறந்தவர். ஒரு பயிற்றப்பட்ட தமிழாசிரியராக 1946 முதல் 1981 வரை இலங்கையின் டிக்கோயா, மானிப்பாய், சுன்னாகம் ஆகிய இடங்களில் ஆசிரியப் பணி புரிந்தவர். சு.வேயின் முதல் சிறுகதை "கிடைக்காத பலன்" 1943 இல் ஈழகேசரியில் வெளியானது. சு.வே யின் சிறுகதைகள், "மண் வாசனை", "பால்காவடி", ஆகிய தலைப்புகளில் தொகுதிகளாக வெளிவந்தன. இவரது உருவகக் கதைகள் 1999 இல் மித்ர வெளியீடாகத் தொகுப்பாக வெளிவந்தன.

மண் வாசனை - (12 சிறுகதைகளின் தொகுதி) பாற் காவடி - சிறுகதைத் தொகுதி. மணற்கோவில் - உருவகக் கதைகள் (மித்ர பதிப்பகம்) சிறுவர் கதை இலக்கியம். செங்கை ஆழியான் தொகுத்து வெளியிட்ட ஈழகேசரி சிறுகதைகள், மறுமலர்ச்சி சிறுகதைகள் ஆகிய தொகுப்புகளில் இவருடைய சிறுகதைகள் சில இடம்பெற்றுள்ளன.

# சொந்தமண்

- யோ. பெனடிக்ற் பாலன் -

"உஸ்ஸ்...ஸ்... அப்பாடா" காலை முழுவதும் கண்ணாமூஞ்சியாட்டமாடி, ஈற்றிலே வயிரமுத்தரிற் கவிந்து ஆட்கொண்டுவிட்ட களைப்பின் சொல் வடிவங்கள் அவை. அவர் தனது தோளிற் கிடந்த கலப்பையையும் நுகத்தையும் அநாயாசமாக, ஆனால் வெகு பரிவுடன் இறக்கிச் சுவரோமாகச் சார்த்திவிட்டு, தலையிற் கட்டியிருந்த துண்டையெடுத்து முகத்தைத் துடைத்துக் கொண்டார்.

அவர் வயலின் நின்றிருந்தால், இன்னங் கொஞ்சநேரம் உழுதிருப்பார். கால்கள் மாடுகளின் பின்னால் அலையலையாகச் சரிந்துகிடக்கும் உழவு சால்களில் நடக்க, அங்கிருந்து பரவும் அபூர்வ புதுமண் வாசனையை முகர்ந்து கொண்டு, சிறு குழந்தையைப் போலத் தள்ளாடித் தள்ளாடி நடை பழகியிருப்பார். அப்போது அவர் மனம் பலபல எண்ணங்களை ஓடவிட்டு, அவற்றுக்கு அர்த்தமும் அழுத்தமும் கொடுக்காமல், தொட்டுந் தொடாமலும் அலைந்து திரிய, நெற்றி வியர்வை வழிந்து நெற்றிப் பொட்டைக் குளிர்வித்து, கீழிறங்கி வாயில் நுளைந்து, வெற்றிலைச் சாற்றோடு இணைத்து புதுச்சுவை கூட்ட, அவையெல்லாவற்றையும் அனுபவித்துச் சுவைத்துக் கொண்டு உழுதிருப்பார். இரண்டு நாட்களுக்கு முன் மழை பெய்த போதிலும் பங்குனி மாத வெயில் தன் தனித்தன்மையைக் காட்டிக்கொண்டு தழலைச் சொரிந்து தகித்தது. பாவம்! மாடுகள் களைத்துப் போய் நுரை கக்கத் தொடங்கிவிட்டன.

"வாய் பேசாது ஏவியவற்றை முடிக்கும் அந்த உழவு மாடுகள் தாம் அவரின் உயிர்த் தெய்வம். தெய்வமும் வாய் பேசுவதில்லையல்லவா? அவர் இலக்கணப்படி மாடுகள் உயர்திணைப் பொருள்கள்! அதனால் அவைகளை மேலும் வருத்தாமல் அவிழ்த்து விட்டார். அவை பக்கத்திலிருந்த குளத்தை நாடிச் சென்றன.

அவிழ்த்து விட்ட மாடுகள் இன்னும் வீடு வந்து சேரவில்லை. துண்டை உதறி விரித்துவிட்டு முற்றத்து மாமரத்தின் கீழ்ப்படுத்துவிட்டார், வயிரமுத்தர். களைப்பும் வேசிப்பெண்ணைப் போன்றது. இரண்டும் சமய சந்தர்ப்பத்துக்காகக் காத்திருந்து, முடிவிலே அவனவன் பலவீனத்தை வாயிலாகக் கொண்டு அவனிற் கவிந்து அவனை மயக்கிவிடும் இவ்வளவு எங்கோ பதுங்கிக் கிடந்த களைப்பு, அவரை முற்று முழுதாக ஆட்கொள்ள அவர் அதனோடு புணர்ந்து, மோனநிலையிற் கிடந்து அதைச் சுவைத்து அனுபவித்தார். களைப்பிலே பிறந்த சோர்வை, உள்வாங்கி அனுபவிப்பதென்பது பலருக்குக் கிட்டாத ஓரின்ப அனுபவம்.


"பூரணம்" என்று மனைவியைக் கூப்பிட்ட பின்னர்தான், தனது மோனப் பெருநிலையில் ஒரு பொள்ளல் விழுந்து விட்டதை அவரால் உணர முடிந்தது. ஆண்டாண்டு காலமாகக் கூப்பிட்டுப் பழகிய வாய் குரல் கொடுத்ததையும் அவரால் தடுக்க முடியாது.

இத்தனை மூடுசூளையாய் இந்தக் களைப்பு எப்போது தன்னிலே கவியத் தொடங்கியது என்று எண்ணியபோது, அவருக்குச் சிரிப்பு வந்தது. "வயது ஒவ்வொன்றாக நழுவி நழுவி விழ, அந்த இடத்திலே சோர்வு வெற்றிக்கொடி நாட்டிவிடுகிறது. என்ன? என்னில் இன்னும் வாலிபமா கொப்புளிக்கும்! போன தையோடு அறுபத்திநாலு முடிந்து அறுபத்தைந்தாகி விட்டது காடு கூப்பிடுகிற பருவத்தில் வயலைப் பாராமலிருக்க மனம் கேட்டால் தானே!" என்று எண்ணிக்கொண்டார்.

"மே... மே... ஏஎ".. கோடியிற் கட்டியிருந்த தாயாடு அளபெடை சேர்த்துக் கத்தியது. பின் தாயோடு சேர்த்து குட்டிகளும் முறை வைத்துக் கத்தின. "நான் வந்த சங்கதியை இவைகளுக்கு யார் சொன்னது... பாக்குக் கடிக்கிற நேரம் பொறுங்கோ ஏ! பூரணம் இவைகளுக்கு ஒன்றும் போடவில்லையோ?" அவர் மனத்தளவில் ஆடுகளோடும் பூரணத்தோடும் பேசினார்.

அவர் அசையாமல் அண்ணாந்து கிடந்து, கண்மூடி மௌனியாய் எண்ணமும் நினைப்பு மற்றதொரு நிலையில் லயித்து விட்டார். எல்லாம் பழுத்து உதிர்ந்து, புதிய தளிர்களுக்கு இடங்கொடுத்துவிட, தப்பித் தவறிக் கிடந்த ஒரு பழுத்த மாவிலை அவர் நெஞ்சில் விழுந்தது. இவர் திடுக்கிட்டுப் போய்க் கண் விழித்தார். கண்கள் மேலே சென்று, மாமரத்தின் பசிய இலைகளெல்லாவற்றையும் அளாவி அலைந்து கழன்றன. கை பழுத்தலிலையை எடுத்துச் சுழற்றியது.

" பழுத்து விட்டால் இலையல்ல எதுவுமே விழ வேண்டியதுதான். புதிய இலை வரும்வரையில் இருந்ததே பெரிய காரியம். ஆசைக்கும் ஓரளவு வேணும். இந்தக் காணி பூமியில் எத்தனையோ ஆண்டுகளாகப் புரண்டுருண்டும் ஆண்டனுபவித்தும் சலிப்புத் தட்டவில்லையே, இந்த மண்வாசனை, பூரணத்தின் கூந்தல் மணம்போல், நெஞ்சின் நெஞ்செல்லாம் இனிக்கிறது, ஆதி தெரியாத இந்தக் குல விருட்சத்திலும் எத்தனையோ பழுத்த இலைகள் புதுத் தளிர்களிடம் வளர்க்கும் பொறுப்பை ஒப்படைத்துவிட்டு, அதனடியில் வீழ்ந்து அதற்கே உரமாகிவிட்டன.



உடனடியாக இருபிள்ளைகளையும் அழைத்து, காணி, பூமி, பொருள் பண்டமெல்லாவற்றையும் பங்கிட்டு ஒப்படைத்து விடவேண்டும். எப்போது காற்று வீசும், எப்போது பழுத்தலிலை விழும் என்று யாருக்குத் தெரியும்?

இந்த எண்ணம் மின்னலாய் வெட்டி அவரது மனத்தின் மூலஸ்தானத்திலே பெருஞ்சோதியை எறிக்கவிட்டு விட்டு மறைந்தது.

மின்னலையடுத்துப் பயங்கரவிருள் முழு மூர்த்தண்யமாக உறைந்தது. மனக்கண் அந்தவிருளிற் கூர்மையிழந்து தட்டுத்தடுமாறி ஊர்ந்தது. ஏதோ ஒருவகைத் தவிப்பு, மெல்ல மெல்லப் பெருகிப் பெருங்கடலாய் அலை மோதி, நெஞ்சுச் சுவர்களைத் தாக்கியது. உள்ளத்தை இழக்குந் தவிப்பா? உள்ளத்திலே ஊறி ஊறி உயிருடன் கலந்துவிட்ட தன்மானத்தின் மரணாவஸ்தையிற் பிறந்த தவிப்பா?

இனி, நானும் பூரணமும் யாருக்குப் பாரமாவது? மூத்தவனுக்கா? இளையவனுக்கா? படுக்கையில் விழுந்து கிடக்கிற போது, இருவரும் வந்து எது வேண்டுமானாலும் செய்யட்டும். எங்கு வேண்டுமானாலும் கொண்டு போகட்டும். இப்போது நான் யாருக்காவது பாரமாவதோ, யார் நிழலையாவது அண்டுவதோ முடியாது. ஆகவே பூரணத்தாலும் முடியாது" இந்த எண்ணங்கள் அவரது தவிப்பின் பயங்கரக் கொந்தளிப்பை ஓரளவு தணிந்தன.

தவிப்பு அடங்கிய நிலையிலே, சந்தேக வித்தொன்றும் முளைத்து மகாவேகமாக வளர்ந்து, கணப்பொழுதிலே பெருமரமாகிவிட்டது. அது நிரந்தரமாகி உண்மைத் தன்மை பெற்றுவிட்டால், விளையும் பயனை அவர் தெளிவாக உணர்ந்தார். மனக்காட்சியின் ஒவ்வொரு சிறு தோற்றமும் புரண்டு நெளிந்து வழுக்கி ஊர்ந்து புழுக் கூட்டம் போலக் கிலுமொலுத்தது.

மூத்தவனுக்கு நிலத்திலும் பார்க்க உத்தியோகமே பெரிது.

இளையவனுக்கு வியாபாரமே பெரிது. இருவரின் இந்தப் பற்றுக்களின் முடிபு நிலத்தின் பற்றின்மைதானே.

அவர்களுக்கு ஒன்றைத் தீர்மானமாகச் சொல்லிவிட வேண்டும்.

"அடே இங்கே பாருங்கோ, நீங்கள் சிரித்துச் சிரித்து வாழக் காரணம் உங்கள் படிப்பொன்று நினைத்தால், நீங்கள் சுத்த மடையர்கள். அதற்குக் காரணம் இந்த நிலம், இந்த நிலத்திலே பரம்பரை பரம்பரையாகச் சிந்திய வேர்வை, அதனால் ஏற்பட்ட செழிப்பு. இந்தப் பூமித்தாய் வரண்டு வெடித்துப் பாழாய்க் கொட்டாவி விட்டு, பெருமூச்சு விட்டால், அவ்வளவுதான், குலவிருட்சம் பட வேண்டியதுதான். இதோ ஒன்றாய்க் கிடந்த நிலம் இரண்டாகி உங்களிடம் வருகிறது இதோ உறுதிக் கடதாசி, குத்தகைக்கு விடுவேன், வாரத்துக்கு விடுவேன். அப்படியிப்படி என்ற பேச்செதுவும் இருக்கக் கூடாது. ஒன்றில் நீங்கள் நிலத்துக்கு வரவேண்டும். அல்லது உங்கள் பிள்ளைகளில் ஒவ்வொருத்தன் வரவேண்டும், அவ்வளவுதான், என்று அறுத்துறுத்துச் சொல்ல வேண்டும். பாம்பு மாதிரி நழுந்தி நொழுந்திப் பேசுகிற பேச்சுக்கிடமில்லை. பிறகு அவரவர்கள் வந்த வந்த வழி.

அவர் மனத்திலே கிடந்த நெளிந்த மனக்காட்சிகளெல்லாம் ஒன்றில் ஒன்று அடக்கமாய், அந்த ஒன்றில் மற்ற ஒவ்வொன்றும் ஒவ்வொன்றாயடங்கி, ஈற்றில் எல்லாம் ஒன்றுள் அடங்கி, அந்த ஒன்றும் இல்லையாய் மறைந்தது.

இந்நிலையில் அவர் மனம் ஆழ்ந்து, அனுபவித்துக் தூங்குகிற குழந்தையாய், அது கனவிலே "நரி" வெருட்டச் சிரிப்பது போலச் சிரித்தது. அவரும் சிரித்தார்.

--------

"என்ன சிரிப்பு, கால் முகம்

கழுவியாச்சோ" என்ற குரல் தூங்கும் இதயத்தை அருட்டி எழுப்பி இனிமையூட்டியது. வயிரமுத்தர் ஒருக்களித்துத் திரும்பி, தலைக்குக் கையை முட்டுக் கொடுத்துக் கொண்டு பார்த்தார். பூரணம் அவரை நோக்கி வந்து கொண்டிருந்தாள்.

உயர்சாதிப் பிராமணப் பெண் போல, மஞ்சளிலே சிறிது செம்மையைக் கொட்டிக் குழப்பிய நிறம், வாட்ட சாட்டமான பாரிய சரீரம். நடக்கும் போது சதை அதுங்கிப் பிதுங்கிக் குலுங்குவதும் ஒரு கவர்ச்சியாகத் தானிருந்தது. முன் நெற்றியிலே தொடங்கி, நடுவகிட்டின் இரு கரையையும் பற்றிக் கொண்டு, மேலே மேலே பரவிச் செல்லும் நரை, பளிச்சென்ற முகம். குளிர்த்த பிறகு நெற்றியிலிட்டுக் கொண்ட ஒரு சத அகலக்குங்குமப் பொட்டு. பார்த்தால் மனத்தூய்மையைப் பரவவிட்டுச் சிலிர்க்கச் செய்யும் முழுப்பொலிவு. அவள் அன்னபூரணி தான், பூரணம் தான்.

அவள் தாமரையிலையால் மூடப்பட்ட சருவச்சட்டியொன்றை ஒரு கையில் ஏந்திக் கொண்டு மறுகையிலே செம்புந் தண்ணீருங் கொண்டு வந்தாள்.

அவளிலே கண்ணைப்பதித்து, மனதால் விழுங்கி, பின் இரண்டினாலும் அளவிட்டுப் பூரித்தார் வயிரமுத்தர்.

எத்தனையோ ஆண்டாண்டாய் ஒவ்வொரு நாளிலும் எத்தனை எத்தனையோ முறை பார்த்துங்கூட, அவருக்கு அலுக்கவில்லை, அலுக்கப்போவதுமில்லை.

இப்போது அவளைப் பார்த்து மெல்லச் சிரித்தார். நாணம் என்றுமே நித்தியகன்னி, வயதெல்லையெல்லாங் கடந்து, அதன் முதிர்ச்சியிலுங் கூட, தன் தனித் தன்மை மாறாமல் நிற்கும் மகாமந்திரம் அதனிடமுண்டு. அது ஐம்பத்திரண்டு வயதிலும் அவனையறியாமலே, அவள் முகத்திலே செம்மை காட்டி, பதிலுக்குச் சிரித்துவிட்டு மறைந்தது.

"என்ன சிரித்துக் கொண்டு... எழும்புங் கோவன்..." அப்போது தான் கண கணவென்ற மணியோசையோடு, உழவு மாடுகள், சுதந்திரமாகத் திரிந்து விட்டு, அதுவும் சலித்துவிட, உள்ளே நுழைந்தன.

"உதை இப்படி வை, மாடுகளைப் பிடித்துக் கட்டி, வைக்கல் இழுத்துப் போட்டிட்டுவா"

"இதைத் தின்னுங்கோவன், பிறகு போய்க் காட்டினாலென்ன"

"எனக்கென்ன அவசரம், வாயில்லாச் சீவன்கள் பாவம்! இன்றைக்கு நல்லகளை. கட்டி ஒரு திரணை வைக்கல் போட்டிட்டு வாணை, என்ரை ராசாத்தி..."

கிழவன் வாய்விட்டுச் சிரித்தான். கிழவிக்குச் செம்மைச் சாயம் தோய்ந்த முகம் முழுவதும் சிரித்தது.

"சீச்சீ... கிழவனுக்கு வயது போனாலும் பகிடி போகாது"

"ஓகே, அப்ப நான் கிழவன், நீ இப்பவும் வாலைக்குமரி என்று நினைப்போ, அதுக்கென்ன போட்டுவா"


வாயாடவாயில்லை, பூரணத்துக்கு சருவச்சட்டியையும் செம்பையும் "தொம்" என்று வைரமுத்தருக்கு முன்னே வைத்து விட்டு, மாடுகட்டப் போய் விட்டாள் கிழவி.

வைரமுத்தர் எழுந்து கால்முகங் கழுவிக் கொண்டு வந்து அதேயிடத்தில் அமர்ந்தார். பூரணம் இன்னும் வரவில்லை. மெதுவாக இலையைத் தூக்கிப்பார்த்தார். உள்ளே பழஞ்சோறு, ஒடியல் பிட்டோடு மரவெள்ளிக்கிழங்குப் பழங்கறியுஞ் சேர்த்துத் தயிர்விட்டுக் குழைத்த கொழுகொழென்ற குழையல் பார்க்கப் பார்க்க வாயூறியது. பூரணம் திரட்டித் திரட்டிக் கையில் வைத்தாலல்லவா அவரால் தின்ன முடியும், மூடி வைத்து விட்டு இருந்தார்.

பூரணம் கடுகடுப்போடு தான் வந்தாள். நெற்றியிலே முத்துமுத்தாக வியர்வை துளிர்த்திருந்தது. கன்னம் இரண்டிலும் வியர்வை ஆறு கால்வாய்கள் கண்டு ஓடியது, வாளிப்பான அந்த உடலை அசைத்தெடுத்தது நெடுமூச்சு.

"இந்த வேலையெல்லாம் இனிமேல் என்னாலை ஏலாது. என்னாலை ஏலாதென்றால் உங்களாலும் ஏலாதுதான். பேசாமல் ஒரு பிள்ளையோடு போயிருப்பம்"

எத்தனையோ காலமாக சிறுச்சிறு ஊற்றாக ஊறி உள்ளே நிறைந்து அலைமோதிய ஆசைவெள்ளம் - கிழவனது ஆண்மை அணையிட அடங்கிக் கிடந்த அது வேளை கிடைத்த வேளையிலே வெளியே பெருகத் தொடங்கியது.



"என்ன அழையா வீட்டு விருந்தாய்ப் போகச் சொல்லிறியே?" கிழவன் வேடிக்கை பண்ணினான், ஆனால் அதனுள்ளீடாகப் புருடத்துவ கம்பீரம் நிமிர்ந்து நின்றது.

"பேச்சைப் பாருங்கோ பேச்சை, இவர் பெரிய மகாராசா கொடி, குடை, ஆலவட்டத்தோடு வந்து அழைக்க வேணுமாம். மீசை நரைத்தாலும் ஆசையும் அதிகாரமும் நரைக்கவில்லை"

"பின்னை என்ன, உனக்கும் எனக்கும் என்ன குறைவாம்! நான் இராசா. நீ இராசாத்தி, அவர்கள் வந்து கூப்பிட்டபோது பார்த்துக்கொள்ளலாம். இப்ப உனக்கோ எனக்கோ எதுவும் வந்து விடவில்லையே"

"ஐயையோ, மறந்தே போனேன், காலமை இரண்டு காயிதம் வந்தது. ஒருவேளை வரச்சொல்லித்தான் இரண்டுபேரும் எழுதியிருக்கோ என்னவோ, கொண்டு வரட்டோ"-

பூரணத்தின் ஆசை வெகு மூர்க்கமாக நிமிர்ந்து, இரு கடிதங்களைப் பற்றிக் கொண்டு, தன் எண்ணத்தை மீண்டும் வெளிக்காட்டியது.

"கொஞ்சம் பொறு, அதுக்கு இப்ப என்ன அவசரம், சாப்பிட்டு முடியட்டும்." வயிரமுத்தர் கிழவியின் ஆசைக்கலவையைப் பிரித்துத் தனிக் கூறுகளாக்கிப் பார்த்தார். கிழவனிடம் குறும்பு முளைத்தது.

"ம்... கோவியாதை, உள்ளதைச் சொல்... பிள்ளைகளைப் பார்க்க ஆசைப்படுகிறாயா? பேரப்பிள்ளைகளைக் கொஞ்சிச் சீராட்டவோ அல்லது சாகக்கு முந்திக் கொஞ்ச நாளைக்காவது மாமியார் அதிகாரம் பண்ணவோ... அல்லது..."

"எப்பவும் நையாண்டிதான், இன்னும் எத்தனை நாளைக்கோ- உள்ளே அழுகத் தொடங்கிவிட்ட இந்த பூசனிக்காயை, பெருமான் எப்ப தூக்கி எறிகிறாரோ, அப்ப சளிஞ்சு போய் வாயைப் பிளந்து கிடக்க வேண்டியதுதான். அதுக்கிடையில் கொஞ்ச நாளைக்காவது..." பூரணம் விம்மி வெடித்துக் கண்ணீர் சிந்தினாள். பிள்ளைகளையும் பேரப்பிள்ளைகளையும் நினைத்தபோது அவள் உள்ளத்தின் உள்ளெலும்பெல்லாம் உருகி நெகிழ்ந்தது. தாய்மைத் துடிப்பு உடலணுக்கள் எல்லாவற்றிலும் ஊறியது. பழஞ்சோறு திரட்டி எடுத்த கை நடுங்கியது. அவன் உணர்ச்சிப் பெரு நெருப்பில் கருகி ஒரு கணம் மூச்சையிழந்து வெளிவந்தான். வயிரமுத்தரின் கண்களும் குளமாகிவிட தனது சால்வைத்துண்டை யெடுத்துப் பூரணத்தின் கண்ணீரைத் துடைத்தார்.

"என்ன பூரணம், உன்னத்தனை பாசமும், வருத்தமும் எனக்கில்லையோ உன்னது தாய்ப்பாசம் , அடங்காது. என்னதை அடக்கியடக்கி, குமைந்து குமைந்து பார்க்கிறேன். நினைத்தவைகளை நினைத்து, நினைக்க முடியாதவைகளையும் நினைத்துப் பார்த்து நான்படும் பாடு... எல்லாவற்றையும் நினைத்துப் பார்த்த பிறகு ஒரு முடிபுக்கு வந்துவிட்டன்.."

பூரணம் கண்களை அகலவிரித்துக் கொண்டு, அந்தக் கண்களிலே ஆசை இரசவோட்டமாய் ஓட அந்தக் கண்களாலேயே கேட்டாள் என்ன "என்ன" என்று,

" இரண்டு பேரையும் வரச்சொல்லி இண்டைக்கே எழுதப்போறன். வந்ததும் சொத்தெல்லாத்தையும் இரண்டாய்ப் பிரிச்சு எழுதிப்போட்டு..."

கிழவனைக் கட்டியணைத்து, கொஞ்சிக்குலவ வேண்டும் போல் அத்தனை மகிழ்ச்சி கிழவியிலே கிளர்ந்தெழுந்தது. அதற்கு அணையிட அவள் விரும்பாவிட்டாலும் வயது அணையிட்டது.

"அதுதான் சரி, நாங்கள் வாழ்ந்தது போதும். சின்னஞ்சிறிசுகள் ஆண்டனுபவிக்கட்டும். இந்தாருங்கோ தண்ணி, சருவச்சட்டிக்கை கையைக் கழுவிப்போட்டு குடியுங்கோ. காயிதத்தை எடுத்துக் கொண்டு வாறேன்"

பூரணம் சேலைத்தலைப்பில் துடைத்துக் கொண்டு குடுகுடுத்தாள். அடுத்தகணம் கண்ணாடிக் கூடும் இரண்டு கடிதங்களுங் கொண்டு வந்தாள். வயிரமுத்தர் கண்ணாடியைத் துடைத்துமாட்டிக் கொண்டு, ஒரு கடிதத்தைப் பிரித்து வாசித்தார். அவர் முகத்திலே கணத்துக்குகணம் உணர்ச்சித்திவலைகள் அள்ளித் தெளிக்கப்பட்டன. அந்தத் திவலைகளைக் கொண்டே, கடிதத்தில் என்ன இருக்கிறதென்று கண்டுகொள்ள முயன்று தவித்தாள் பூரணம். ஈற்றில் முகத்திலே துலாம் பாரமாகத் தெரிந்த வெறுப்போடு, அடிக்கடிதத்தை மடித்து வெகு நிதானத்தோடு துண்டு துண்டாகக் கிழித்தார். படபடென அடித்துக்கொள்ளும் மனப்பறவையின் ஒரு சிறகை வெட்டி விடுவது போலத்துடித்தாள் கிழவி.

"என்னவாம்..." அவள் குரலில் ஏக்கம் துளி துளியாய் வந்தது.

"இது உன் மூத்தமகன் எழுதினது. உன்ரை மூத்தபேரன் பூனாவுக்கோ எங்கையோ விவசாயம் படிக்கப் போறானாம். இப்ப தன்னிடம் பணமில்லையாம். தன்ரை பங்கை வித்துத் தரட்டாம்."

"அதுக்கென்ன, என்ரை செல்லங்கள் படிச்சு நல்லாய் வரட்டும். அப்பனே முருகா! அந்தக் குஞ்சுகளுக்கு ஒரு குறையும் வரவிடாதை"

"ம்... அப்படியா" வயிரமுத்தர் கடைவாய்க்குள் சிரித்துவிட்டு மற்றக் கடிதத்தைப் படித்தார். மீண்டும் பூரணம் அவரது முகத்தில் எழுதப்படும் உணர்ச்சி வரிகளை வாசிக்க முயன்றாள். கடிதத்தைப், படித்து முடித்த வயிரமுத்தர் மிக மிக நிதானத்தோடு அதையும் துண்டு துண்டாக்கினார். மற்றச் சிறகும் அரிபட்ட பூரணத்தின் மனப்பறவை மேலுங் கீழுங் தொங்கி அவஸ்தைப்பட்டது.

" என்ன" பூரணம் ஏங்கினாள்.

"இளையவன் இன்னுமொரு கடை எடுத்துவிட்டானாம். வியாபாரத்தைப் பெருப்பிக்க வேணுமாம். பெருவாரியாய்க் காசு தேவையாம். அதற்காகத் தன் பங்குக் காணி பூமிகளைத் தரட்டாம். விற்பதற்கு"

இளையவன் எப்பவும் கெட்டிக்காரன் தான். பாவம்! நாலு பெண்ணைப் பெற்றுவிட்டான். சம்பாரிக்கத்தானே வேணும்"

"ம்... அப்படியா" அதற்கு மேல் எதுவும் பேசாமல் பல எண்ணங்களை உள்வாங்கி மனக்கல்லில் மோதி மோதி, சிதறு தேங்காயடித்து விளையாடினார். வயிரமுத்தர்.

"இப்ப என்ன செய்யப் போறியள் எழுதுங்கோவன்"

"என்ன எழுதப் போறியள்"

"உடனே வாருங்கோ" என்றுதான்.

"இப்படி எழுதுங்கோ, இந்தக் கடிதத்தை தந்தியாய்ப் பாவிச்சு உடனே வரச்சொல்லி என்ன..."

"வாறபோது தனிய வரவேண்டாம். பெடிச்சி, பேரப்பிள்ளைகள் ஒருத்தர் தவறாமல் வரவேணும்... அதுவும் பத்துப் பதினைஞ்சுநாள் நிக்கக், கூடியதாய் வரவேணும்..."

"வேறென்ன"

"வேறென்னத்தை நான் சொல்ல..."

"பார் பூரணம், எழுதப்போறன் எல்லா உடனே வாருங்கோ, பெண்சாதி பிள்ளைகளோடு வாருங்கோ, பத்து நாளல்ல, ஒரு மாதம் நிற்கக் கூடிய ஆயத்தத்தோடு வாருங்கோ...ஆனால் நீயும் நானும் இருக்கிறவரையில் எதையும் விற்பதற்காக ஒருவனும் வரவேண்டாம்... இந்த நிலந்தான் இந்தக் குலத்தாய், அவளை விற்றுவிட்டுக் கிடைக்கிற படிப்பும் வேண்டாம், வியாபாரமும் வேண்டாம். நாங்கள் இப்போது யாருக்கும் எதையும் எழுதிக் கொடுக்கிற யோசனையில்லை. இப்படித்தான் எழுதப்போறன். சரிதானே..."

பூரணம் விக்கித்துப் போனாள். மடைதிறந்தாற்போலக் கண்ணீர் ஆறாகப் பெருகியது. கண்ணீர்த் திரையினூடாக அவள் தன் கணவனைப் பார்த்தாள். தன் முப்பத்திரண்டு வருடக் குடும்ப வாழ்க்கையிலே கண்டிராத புதுமைக் கணவனை அவள் கண்டாள்... மனம் பெருமையால் விம்மிப் பொங்கிப் பூரித்தது.

"நான் ஒரு மடைச்சி"

"சீ, யார் அப்படிச் சொன்னது? நீ ஒரு பெண், என் மனைவி, இரு பிள்ளைகளின் தாய்."

-சித்திரை 1963




# கள்ள வாக்குண்டாம்! வெல்ல வழியுண்டாம்!

உலகத்தின் பார்வை மீண்டும் இலங்கைமீது பதிந்திருக்கிறது. அதற்கு ,நடந்து முடிந்த பாராளுமன்றத் தேர்தலே காரணம் எனலாம். இத் தேர்தல் இம்முறை தமிழர்தம் அரசியல் பாதையைப் புரட்டிப்போட்டிருக்கிறது. அதனால் தமிழர் பிரதேசத்திலும் தேர்தலுக்குப் பின்னான களம் பரபரப்பாகியிருக்கிறது.அவர் சரியா? இவர் சரியா? எனக் கேள்விகளும், அவர் சரியில்லை! இவர் சரியில்லை! என்ற பதில்களுமாக, ஊடகங்களிலும் இணையத் தளங்களிலும், அறிக்கைப் போர் பரபரப்பாய் நடந்து கொண்டிருக் கிறது. ஆனால் காலம் தனது கடமையைச் சரிவரச் செய்திக்கிறது என்பதற்குச் சான்றாக தேர்தல் முடிவுகள் வெளியாகி இருக்கின்றன என்று சிலர் சொல்லுகின்றனர்.

வாக்கு எண்ணப்பட்ட சாவடியில் முறை கேடுகள் நடைபெற்றிருப்பதாக மக்கள் சந்தேகத்தை வெளிப்படுத்தியிருக் கிறார்கள். அதற்குச் சான்றாக அன்றைய தினத்தில் எடுக்கப்பட்ட பல காணொளிகள் பொது வெளியில் பரவவிடப்பட்டிருக்கின்றன. அநாகரீக மான பேச்சுக்கள். அற்பத்தனமான பதில்கள். கிண்டல்கள். கேலிகள். தூஷண வார்த்தைகள். என்று எல்லாப்பதிவுகளும் தணிக்கையற்ற தாகப் பொதுவெளியில் காட்சிப்படுத்தப் பட்டிருக்கிறது.

**காட்சி - 1**

தமிழரசுக் கட்சி வேட்பாளராகக் களமிறங்கியிருந்த திருமதி. சசிகலா ரவிராஜ் அவர்கள் தொடர்பான நிகழ்சிகள். அவர் இருந்த இடத்தில் அவரது கட்சி உறுப்பினர் ஒருவர் வந்திருந்து சம்பாஷிப்பதாகத் தெரிகிறது. சிறிது நேரத்தில் அந்த இடத்தைவிட்டு திருமதி. சசிகலா எழுந்து சென்று தனது கட்சி அல்லாதவர்களோடு இருப்பதைப் பார்க்கக் கூடியதாக இருக்கிறது.

**காட்சி 2**

தமிழ் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் கட்சியான தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் சார்பில் தமிழரசுக் கட்சியின் வீட்டுச் சின்னத்தில் போட்டியிட்டு முன்னிலையில் இருந்தவரென அறிவிக்கப்பட்ட திரு. தருமலிங்கம் சித்தார்த்தன் தோல்வியடைந்து விட்டதாக அவரின் தொண்டர்கள் களேபரப்படுவதும், அவருக்கு நீதி கேட்டு தமிழீழ விடுதலை இயக்கத்தின் உறுப்பினர் திரு. சிவாஜிலிங்கம் தர்க்கப்படுவது தெரிகிறது. அவரோடு திரு.தம்பிராசாவும் இணைந்து நீதி கேட்பது தெரிகிறது. பல சூடான விவாதங்களும், தர்க்கங்களும் அங்கே நடைபெற்றதற்குச் சான்றாகக் காணொளிகள் பதிவிடப்பட்டிருக் கின்றன. மிகவும் அசிங்கமானதும், அருவருப்பு மிக்கதுமான வார்த்தைப் பிரயோகங்கள் அவர்களுக்கு எதிராக அங்கே நிகழ்த்தப்பட்டன.

**காட்சி 3**

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் , தமிழரசுக் கட்சியின் வீட்டுச் சின்னத்தில் களமிறங்கி, வாக்கு எண்ணப்பட்டபோது ஐந்தாம் இடத்தில் இருப்பதாக அறிவிக்கப்பட்ட சட்டத்தரணி சுமந்திரன் திடீரென தனது பாதுகாப்புப் படைகள் சகிதம் வாக்கு எண்ணப்பட்டுக் கொண்டிருக்கும் சென்றல் கல்லூரி வளாகத்திலே தோன்றுகிறார். எங்கும் சத்தமும், அவருக்கு எதிரான வார்த்தைப் பிரயோகங்களுடனான கூச்சலும் அதிகரிக்கின்றது. அவரோடு அவரது பாதுகாப்புக்காக வந்த அதிரடிப்படையினர் அவரைக் கொண்டுபோய் கல்லூரிக்குள் சேர்க்கின்றனர். சில மணி நேரத்துக்குப் பின்னர் களம் ஒரு கொதி நிலையை எட்டுகிறது. அதிரடிப் படையினர் சகிதம் சட்டத்தரணி சுமந்திரன் வெளியேறும் போது மக்கள் அவருக்கு எதிர்ப்பைத் தெரிவிப்பதும், சற்றுத்தாமதித்தாலும் ஆபத்து நிகழலாம் என்ற வகையிலேயே அவர் வெளி யேற்றப்படுவது தெரிகிறது. அப்போது பலர் தாக்கப்படுகின்ற காட்சிகளும் பதிவாகி இருக்கின்றன.

**காட்சி 4**

சூழல் மிகவும் களேபரப்பட்டுக் கொண்டிருக்க, திருமதி. சசிகலா ரவிராஜ் தனது உறவினர் சகிதம் எதுவித பாகாப்புமற்றவராக, அழுதபடி வெளியேறுகிறார்.

**காட்சிகள் முற்றுப்பெறுகின்றன.**

மேற்குறிப்பிட்ட காட்சிகளை உங்களுக்குச் சில தகவல்களை வழங்கும் நோக்கில் அண்ணளவாகப் பதிவிட்டிருக்கிறோம். ஆனால் நடைபெற்றவை இதைவிட அதிகம் எனலாம்.

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் விருப்பு வாக்குகளை எண்ணி அதன் பெறுபேறுகளை எண்ணுவதில் ஏற்பட்ட தாமதம்தான் இத்தனைக்கும் காரணம் . அது மட்டுமல்ல அங்கு கொடுக்கப்பட்ட முன்னுக்குப்பின் முரணான முடிவுகளும் அன்றைய தினத்தில் நடைபெற்ற அலங்கோலத்துக்குக் காரணமெனலாம்.

தேர்தல் நடவடிக்கைகளை நன்கு ஆராய்ந்து அறிந்தவருக்கு இந்த விடயங்கள் எதுவும் புதுமையாய்த் தோன்றாது. மாவை நிட்சயம் தோற்கடிக்கப்படுவார் என்றதனை பலர் எதிர்வு கூறியிருந்தனர். ஏனெனில் பொறுப்புள்ள கட்சித் தலைவராக இருந்த அவர் கட்சியைப் பின்தள்ளக் கூடிய வகையில் கட்சி உறுப்பினர் பேசுகிறார், கருத்துத் தெரிவிக்கிறார் என்ற மக்கள் கருத்தைக் கவனத்தில் கொள்ளாது, தாமே மக்களின் நிரந்தரப் பிரதிநிகள் என்று எண்ணி இருந்ததே தோல்விக்கு முக்கிய காரணமாகும். தமிழ் தேசியக் கூட்டமைப்பு என்ற கட்சியில் பல கட்சிகள் அங்கம் வகிப்பதைக் கருத்தில் கொள்ளாது, அது ஒரு கூட்டு முயற்சி என்றும் எண்ணாது , கட்சியின் பேச்சாளர் தான் தோன்றித் தனமாக முடிவெடுக்கிறார் என்றும், அவர் கட்சிக் கொள்கையை மறந்து ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போது தமிழ் மக்கள் நெஞ்சங்களை நோவடித்துக் கருத்துகளைத் தெரிவித்து வருகிறார் என்பதனையும் பலர் சுட்டிக்காட்டி இருந்தும், அவருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கத் தவறிய தமிழரசுக் கட்சித் தலைவர் மாவை சேனாதிராசா கடந்த தேர்தலில் படுதோல்வி அடைந்திருக்கிறார். மாவையோடு முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலரும் தோல்வியடைந்திருக்கின்றனர். தேர்தலுக்கு முன்பிருந்த கணிப்பின்படி யார், யார் வெல்ல வேண்டுமோ அவர்கள் தோற்றிருக்கின்றனர். யார், யார் தோற்க வேண்டுமோ அவர்கள் வென்றிருக்கின்றனர்.

ஆனால் இந்த வெற்றியை வைத்துக் கொண்டு வென்றவர்களைத் தமிழ் மக்கள் முற்றாக அங்கீகரித்துள்ளார்கள் என்றோ! தோற்றவர்களை தமிழ் மக்கள் முற்றாக நிராகரித்து விட்டார்கள் என்றோ கணக்கிடுவோமாயின், அங்கே தான் தோற்றுப் போகிறோம்.

ஏனெனில் வாக்குகள் எண்ணப்பட்ட சாவடியில் அன்றைய தினத்தன்று இரவு நடைபெற்ற விடயங்களை மீளாய்வு செய்து பார்த்தால் பல வித அரசியல் பின்னூட்டங்கள் புலப்பட வாய்ப்புண்டு. அதன்படி, தேர்தல் முடிவுகள் வெளியான பின்பு மக்கள் கொண்டுள்ள கருத்தின்படி, முடிவில் சந்தேகம் இருப்பதாகவே பதிவுகளை மேற்கொண் டுள்ளனர். ஆனால் அதிகாரிகள் அப்படி ஒன்று நடைபெற வாய்ப்பே இல்லை என்று அடித்துக் கூறுகின்றனர்.

ஆனால் யாழ். கிளிநொச்சி மாவட்டத் தில் தற்போது வெற்றிபெற்றுள்ள நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன், தேர்தலுக்கு முன்னர் தனது பரப்புரையின்போது, முன்பு ஒரு தேர்தலில் தான் 75 கள்ளவாக்குகளை இட்டதாகச் சொல்லியிருந்தார். அதனை ஒரு ஒப்புதல் வாக்கு மூலமாகக் கூட எடுக்கலாம் என்று மக்கள் கருத்துத் தெரிவிக்கின்றனர். சிறிதரன் சொன்னதற்கு எம்மிடம் ஆதாரங்கள் நிறைய உண்டு. அந்த விடயம் தேர்தல் ஆணையத்தின் கவனத்திற்குக் கொண்டு சென்று ஆய்வில் உள்ளதாகச் செய்திகள் வெளிவந்திருக்கின்றன. எனவே அவர் கூற்றுப்படி பார்த்தால் மேற்படி மக்களின் சந்தேகம் வலுக்க வாய்ப்புண்டு. இத்தனையையும் கூட்டிக் கழித்துப் பார்த்தால் எம்மூர் "வம்பன் வாண்டுநாதன் " சொன்ன "கள்ள வாக்குண்டாம். வெல்ல வழி உண்டாம்" என்ற வைரவரிகள்தான் ஞாபகத்துக்கு வருகின்றன.

அடுத்து, தமிழரசுக் கட்சிக்கு வந்த வினை என்ன என்று பார்ப்போமாயின், மாவையின் தோல்வியை அடுத்து , ஏற்கனவே தமிழரசுக் கட்சித் தலைமைப் பதவியைத் தரலாம் என்று அவருக்கு வாக்களித்தபடி. அதனைக் குறிவைத்துக் காத்திருந்த சிறிதரன், தான் அதற்குத் தோதான ஒருவரா? என்று கூடச் சிந்திக்காமல், தேர்தலில் வென்ற பின்பு, அந்த வெற்றி வேட்கையோடு, வெட்கமில்லாமல் வாய் விட்டுத் தலைமைப் பதவியைக் கேட்டும் விட்டார். பின்பு தமிழரசுக் கட்சித் தொண்டர்களால் பொது வெளியில் அவர் நையப்புடைக்கப் பட்டு நாறிப்போனதுதான் மிச்சம்.

தமிழரசுக் கட்சித் தலைமைக்குக் குறிவைக்க முன்னர், சிறிதரன் தமிழரசுக் கட்சியின் கடந்த கால வரலாற்றையும், அதில் தலைமை வகுத்த மக்கள் தலைவர்ளையும், அவர்கள் தியாகங்களையும் பற்றி ஒரு முறை யாரிடமாவது "ரியூசன்" எடுப்பது நலம். தற்போது அதன் தலைமைப் பதவியை வகுக்கும் மாவை சேனாதிராசாவுக்கு என்று ஒரு அரசியல் வரலாறும், தியாகச் செய்கைகளும் அவர் பின்னணியில் உண்டு. அத்துடன் அவர் நேரடியாகக் கண்ட பல அரசியல் செயற்பாடுகளின் அனுபவமும் அவரிடத்தில் உண்டு.

அது மட்டுமல்லாது, தமிழரசுக் கட்சி தனிக்கட்சியாகப் பிரிந்ததற்கு, மலையக மக்களுடைய உரிமைகள் பறிக்கப் படும்போது அப்போது இருந்த ஒரோயொரு தமிழ் கட்சியான காங்கிரஸ் கட்சி அதனை எதிர்க்காததும், அது பற்றி மௌனமாக இருந்ததுமே காரணம் எனலாம். எனவே அப்படி மலையகத் தமிழருக்காய் குரல் கொடுத்ததொரு கட்சிக்கு "வடக்கத்தையான்" என்று மலையகத் தமிழ் மக்களை இழிவுபடுத்திப் பேசிய ஒருவரா தலைமை ஏற்பது என்றும் மக்கள் கோபப்படுகின் றனர். சிறிதரன் மட்டுமல்ல. இனி யாராவது தமிழருக்கான தலைமையை ஏற்பது பற்றிச் சிந்துக்கும்போது, சிறு பிள்ளை "ரிப்பி, ரிப்பி" வாங்க எண்ணு வதைப் போல எண்ணக் கூடாது என்று தமிழ் மக்கள் எச்சரிக்கிறார்கள். இதைக் கேட்டுவிட்டு "இவருக்கா எமது கட்சித் தலைமைப் பதவி?" என்று எம்மூர் "வம்பன் வாண்டுநாதன்" சொன்ன வைரவரிகள்தான் இதிலும் ஞாபகத்துக்கு வருகின்றன.

"ஐயோ..! எல்லாம் சாக்கடைகள்.." என்று வைகைப் புயல் வடிவேலு சொல்வதாகக் கற்பனை செய்து பாருங்கள்.
சிரிப்பு வரும்.

இவ் இணைய வார இதழ் : இல. 151, நாவலர் வீதி, யாழ்ப்பாணத்திலுள்ள நோர்சி மீடியா பணிமனையில் தயாராகி 16.08.2020 அன்று வெளியிடப்பட்டது.